ஓம் பரப்பிரம்மணேநம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்

 திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.)

கமலம்-3. Vol. 3. | சென்னை: விபவஸூ மாசிமீ 1உ 1929-ம்ஸூ பிப்ரவரிமீ 12உ | இதழ்-35. No. 35.

ஆனந்த தரிசனம்

" பணிந்து துதிமனமே பல்லுயிர்கட் கெல்லாம் அணுவி லணுவாக யிருந்தானை " என்று பெரியோர்கள் கூறுவது நம்முடைய க்ஷேமத்தைக் கருதியே யன்றி வேறல்ல. துஷ்ட மனதை நன்னிலைமைக்குக் கொண்டு வருவதற்கு பகவத் தியானமே பிரதானம். இதிலும் பகவானுடைய திருவிளையாடலைக் கீர்த்தனையாகப் பாடிக் காலம் போக்குவது பரம சிலாக்யம். நினைவு என்பது மனதென்னும் ஸமுத்திரத்தின் மேற்பாகம். அதனடியில் நம்முடைய அனுபோகங்களெல்லாம் ஆழ்ந்து கிடக்கின்றன. அந்த அநுபவங்கள் பகவத் அநுபவங்களாக மாறும்படி எப்போதும் ஈசுவரனுடைய நினைவையே கொள்வதாயின் நமது சித்தம் நிர்மலமாகும். ஸகல ஸித்திகளு முண்டாகும். மோக்ஷலக்ஷ்மி நம்மைத் தேடிவருவாள். ஆதலின், நித்தியாநந்தத்தை நாடி ஸதா நிர்மலனைப் பிரார்த்திக்கக் கடவோம்.

* * *

" அருளில்லாதார்க்கு அருளறிவு தங்குமோ ?" அருளறிவு தங்குவதற்குப் பிரதானமான வஸ்துக்கள் மனிதனுக்கு இரண்டு உண்டு. ஸத்யம், ஞானம் இவைகள் இரண்டும் உபநேத்திரங்கள். ஸத்யம் ஒரு கண்ணாகவும், ஞானம் மற்றொரு கண்ணாயு மிருப்பதால் இவைகளை வெகு ஜாக்கிரதையோடு காப்பாற்றுவது அவசியம். ஸாதாரண கண்களுக்கு எவ்வித அபாயமும் ஸம்பவியாதபடி கண்ணாடியாலும், அஞ்சனம், காஞ்சனம், மருந்து முதலியவைகளாலும் பாதுகாக்கின்றனர். இக்கண்கள் உலகத்தைப் பார்த்துப் பலவித சங்கதிகளைக் கிரகிக்கின்றன. மேலே கூறிய ஞான நேத்திரமும் ஸத்ய நேத்திரமும்

பரஸ்பர நேசர்கள். ஸத்ய மிருந்தாலன்றி ஞானம் உதயமாகாது. ஞானத்தால் உலகத்தையே ஜெயிக்கலாம். ஸத்யத்தால் பற்பல விஷயங்களை துவம்சம் செய்யலாம். பாபகிருத்யங்கள் ஸத்யத்தை நெருங்காது. ஞானமிர்தம் வெகு இன்பகரம். ஞானமில்லாதவன் பசு ஸமானனென்று சுருதிவாக்யம் சொல்லுகிறது. ஈசுவரஸ்தோத்திரத்தாலும், ஸேவைகளாலும், ஸத்ய மார்க்கத்தையும் ஞான வெளிச்சத்தையும் காணலாம். ஸர்வோத்தமர்களுக்கே ஞானமும் ஸத்யமும் உப நேத்திரங்களாகும். பகவந் நாமத்தைச் சிந்தியாத தரித்திரர்களுக்கும், பாபிஷ்டர்களுக்கும், அழுக்கு நிறைந்த அசுத்தக் கண்கள்தான் உதவி. அக்கண்களும் சில காலத்துக்குள் ரோகத்தால் நசித்துப் போகின்றன. ஞானம், ஸத்யம் இவைகளிரண்டும் என்றைக்கும் அழியாத கண்கள். அருளறிவு தங்குவதற்கு இவைகளையே ஒவ்வொருவரும் தேடவேண்டும்.

* * *

"நல்லார் குணங்க ளுரைப்பதுவும் நன்றே." ஸமீப காலத்தில் இவ்வுலகில் வசித்திருந்த மஹான்களுள் ஸ்ரீமத் இராமலிங்க ஸ்வாமிகளும் ஒருவராவர். இப்பெரியவரைக் கடவுளையறிந்த மஹானென அவர் வாயினின்றும் வெளிவந்துள்ள அருட்பாக்களால் அறிகின்றோம். தாயுமானவர், பட்டினத்தடிகள் முதலிய பெரியவர்களை ஞானிகளென வுணர்வதற்கு அவர்கள் வாய்மொழிகளே ஆதாரமாக இருக்கின்றன. ஒவ்வொரு பெரியவர்களின் ஞான குணங்களையும் அவர்கள் வாய்மொழிகள் நின்று நமக்குக் காட்டுகின்றனவே யன்றி வேறொன்று நின்று காட்டவில்லை. ஸாமான்ய அறிவினர் எதுவேனும் ஒரு மகத்துவங் காட்டாதவர்களின் பாடல்களைப் படிக்கவொண்ணாதென உரைத்து மகிழ்வர். ஞானத்திற்கும் மகத்துவ ஸித்திக்கும் யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. மந்திர ஸித்தி, தபோஸித்தி முதலியவைகளாலுண்டாவது மகத்துவச் செயல்கள். இச்செயல்களை ஞானிகள் மதியார். ஞான மான்மியம் வேறு. அதனை ஸாமான்ய அறிவின ரறியார். காமிய தவ சித்தியினு லுண்டாவது மகிமாதி சித்திகள். நிஷ்காமிய தவசித்தியினு லுண்டாவது சிவஞானுதி ஸன்மார்க்க குணங்கள். ஞானமானது ஒருவனுக்கு இன்பத்தைக் கொடுக்கும். ஸித்தியானது சிறிது காலம் புகழைக் கொடுக்கும். ஒருவன் ஒருவித தவமுடையவனாக இருந்து எதுவேனும் அபூர்வ காரியத்தினைச் செய்வானானால் அவன் செய்த தபோபலம் உடனே நஷ்டமாகாமற் போகாது. அதிக தவஸியாக இருந்தால் நீண்டகாலம் அதிக மகத்துவங்களைச் செய்யலாம். குடத்து நீர் போன்ற ஸித்திக்கும், ஊற்று நீர் போன்ற ஞானத்திற்கும் மிகுந்த வித்யாஸ மில்லாமற் போகவில்லை. இராமலிங்க ஸ்வாமிகள் கவி பாடுந் திறத்தினைக் கடவுளருளால் பெற்றவரென்று பெரியவர்க ளுரைக்கின்றார்கள். அவர் காலத்திருந்த மகாகவியான திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள் இவரைப் பரீட்சிப்பா னொருகாலத்துச் சென்றிருந்தனரெனவும், திடீரென ஒரு காகிதமும் பென்ஸிலும் நீட்டி ஒரு கட்டளைக் கலித்துறை பாடல்வேண்டுமென்று கூறினார்களென்றும், மனனஞ் செய்துள்ள பாடலை எழுதிக்கொடுப்பவர்களைப்போல் உடனே எழுதி அளித்தன ரென்றும், அதுகண்டு அப்பெரும் புலவர் மவுனமாகச் சென்றன ரென்றும் உரைக்கின்றார்கள்.

“முந்தோர் சொல் வார்த்தை அமிர்தம்” ‘பாயிலோ’ என்னும் ஒரு வித்வான் கூறுகிறார்:—“ஆகாசத்தில் பறக்கும் ஜெந்துக்களிலும், தரையில் நடக்கும் பிராணிகளிலும், கடலில் வசிக்கும் ஜீவன்களிலும் மனுஷ்யனைப் போல் மகா மூடத்தனமுள்ளது எதுவுமில்லை.” ‘ஹாலண்டு’ என்ற பெரியார் சொல்வதாவது:—“கடவுள் ஒவ்வொரு பக்ஷிக்கும் ஆகாரத்தை யளிக்கிறார். ஆனால் அவ்வாகாரத்தைப் பக்ஷிகளின் கூண்டுகளில் போடுகிறதில்லை. ஆகாரம் தேடும் வழியைக் கற்பிக்கிறார் என்றபடி.” ‘பெல்தாம்’ என்னும் பண்டிதரின் வாக்கியம்:—“நான் அறிந்துகொண்டது எனக்கு அறியாமை மிகுந்திருக்கிறதென்பதே. கல்வியைக் கற்குந்தோறும் நான் எல்லாவற்றையும் அறிந்தவனாக என்னை நினைத்துக் கொண்டது பிசகென்றுணர்ந்தேன்.”

***

“காலத்தின் அருமை” ஒரு பைசாவை இழந்தால் துக்கப்படும் நான் ஒரு மணி நேரத்தை நித்திரையில் கழித்து வியஸனப்படா திருப்பானேன்? காலத்தின் அருமை எனக்குத் தெரியவில்லை. காசின் அருமையைக் குழந்தை அறியுமா? அது பொற்காசைக்கூட வீதியில் விட்டெறியும். இது அஞ்ஞானவஸ்தையால் நேரும் விபரீதம். பிச்சைக்காரனுக்குச் சோறுபோடாத நான் வம்புக்காரனுக்குக் காலத்தை தத்தம் செய்கிறேனே? இதென்ன கோர கிருத்தியம்? என் காசை வீணாக்குவோன் எனக்குப் பகைஞனாவதுபோல் என் காலத்தை சர்ப்பிடுகிறவன் என் விரோதியன்றோ? பகவத் தியானமில்லாத காலம் வியர்த்தமேயாம். இதை இனி மறக்கமாட்டேன்.

***

“மூன்று விரோதிகள்” ஒவ்வொரு கருமத்தையும் கெடுக்க மூன்று விரோதிகள் தோன்றியிருக்கிறார்கள். (1) கவலை, (2) அநாரோக்கியம், (3) பொறாமை. இம்மூன்றையும் தொலைத்து மனோசாந்தி பெறுவதற்கு தெய்வத் தியானமும், மனோத்ஸாகமும், நல்ல இரத்தோட்டமும் இருக்கவேண்டும். எத்தனை பொருள் கொடுத்தாலும் மனோசாந்தி கிடைப்பதருமை. தெய்வத் தியான மொன்றால்தான் சாந்தியை யடையலாம்.

***

“ஏழையின் பிசகு” ஒரு கோனாய் இடையர்கள் போஜனம் செய்யும் இடத்திற்குச் சென்று அவர்கள் வெகு ஆவலோடு ஆட்டிறைச்சியைப் புசிக்கக் கண்டு, “ஐயன்மீர், நான் ஆட்டு மாம்ஸத்தைப் புசித்தால் நீங்களெல்லோரும் கோகோ வென்று கத்தி தடிகளைத் தூக்கிக்கொண்டு அடிக்க வருவீர்களே, இப்போது நீங்களெல்லோரும் ஆட்டை அதம்செய்து ஆசையாய்ப் புசிக்கிறீர்களே, உங்களை அடிப்பவரில்லையா?” என்றது. அதுபோல் பணக்காரனும் பரம வைதீகனென்போனும் செய்யும் அடாத காரியம் கண்டிக்கப் படுகிறதில்லை. ஏழையின் பிசகு மட்டும் பிரமாதமாய்ப் பாவிக்கப் படுகிறது. இது உலக வியற்கை போலும்.

***

“பற்றே வாசனை யெனப்படுவது” பூர்வ ஜன்மங்களில் அப்பியஸிக்கப்பட்ட மாலை, சந்தனம், மங்கை முதலிய விஷய போக வாஸனைகளும்

நாவல்களைக் கேவலமாய்ப் பழிக்கும் ஆசிரியர்களிற் பலர் நாவல் எழுதுதற்கு மூளையின் வன்மை போதாதவர்களாகவே காணப்படுகிறார்கள்!

இந்த ஜன்மத்திலும் பற்றிக்கொண்டு செல்லுகின்றன. ஸ்வல்ப கால அப்பியாஸத்தில் பொடி, புகையிலே, சுருட்டு, கள், கஞ்சா முதலிய உபயோகங்கள் ஏற்பட்டிருந்து, சில காலத்திற்குப் பின், இவை கெட்ட அப்பியாஸங்கள் என்று தோன்றி நிறுத்திவிட்டிருக்கினும், மீண்டும் ஓரோர் சமயத்தில் முன் போலவே அவைகளை உபயோகிக்கவேண்டுமென்று சபலமுண்டாகின்றது. அந்த சபலத்திற்கு ஹேது, பூர்வம் அவைகளின் அப்பியாஸத்தினுல் ஏற்பட்ட மனதிலுள்ள பற்றேயாம். அநந்த கோடி ஜன்மங்களில் ஸ்திரீபோக முதலிய காரியங்கள் அப்பியாஸத்தில் ஏற்பட்டிருக்கின்றமையால், அவைகளுக்குத் தக்க படி விசேஷப் பற்று மனதினில் எவ்வளவு திடமாக ஊன்றியிருக்க வேண்டுமென்று சற்று ஊஹித்துப் பார்க்கவேண்டும். ஆயினும் கெட்ட வாஸனையால் கெட்ட ஸங்கற்பமுதிக்கும்போது, மனதை நிக்ரஹித்து, அதற்குப் பதிலாய் நல்ல ஸங்கற்பத்திற்கு இடம் கொடுக்கக்கூடிய ஸ்வதந்திரத் தன்மை மனிதருக்குள்ளது.

***

"இரண்டுவிதக் கிரியைகள்" கிரியையானது பாஹ்யக்கிரியை, ஆந்தரக்கிரியை என்று இருவிதமா யுள்ளது. பாஹ்யக் கிரியையாவது வெளியில் காணக்கூடியனவாகிய தஹித்தல், சலித்தல், வண்டியிழுத்தல், உழுதல், வழக்கு விசாரித்தல் முதலிய கிரியையாம். ஆந்தரக் கிரியையாவது உள்ளத்தில் நடக்கின்றனவாகிய விரும்புதல், வெறுத்தல், ஸஹித்தல், ஸந்தேகித்தல், நிச்சயித்தல் முதலியதாகிய மனம் செய்யும் வேலேயே யென்றறிக.

***

"ஸம்ஸார பந்தம்" ஸூக்ஷ்ம சரீரத்திற்கு ஸம்சாரபந்த முள்ளவரையில், அதாவது உலகைப் பற்றைவிடுத்து பரமாத்மாவின் ஸரணகமலங்களைச் சேராத வரையில் ஒவ்வொரு ஸ்தூலசரீரமாய் நெடுகப் பற்றிச்சென்று உழல்வதைத் தவிர வேறு கதியில்லே. இப்போதுள்ள ஸ்தூல தேஹத்தினுல் புசிக்கவேண்டிய ஸுகதுக்கங்கள் புசித்து முடியும்போது, ஜீவன் ஸூக்ஷ்ம சரீராவயவங்களாகிய இந்திரிய மன பிராணன்களை முறையே ஒன்ருென்றுய் இருதய கமலத்தில் இழுத்துச் சேர்த்துக்கொண்டு குடியிருந்தவன் தனது ஆடையாபரணம் முதலிய பொருள்களை யெடுத்துக்கொண்டு, ஜீர்ணமாகிய வீட்டைவிட்டு வேறு வீட்டிற்குப் போகின்றதுபோலவே, வேறு ஸ்தூலத்தைப் பற்றிச் சென்று அங்கே முன்போல ஸம்சாரபந்தத்தில் உழலத் தொடங்குகின்றது. இவ்விதமே நெடுகப் பல பிறவி யெடுத்து நோவதன்றி ஜன்மவிமோசனமில்லே.

***

"பிரம்ம ஞானம்" உபாஸனேயோடு கூடிய பிரம்மஞானம் மனிதர்களை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிக்கும். அதாவது எவன் ஜனனமரண துக்கங்களின்றி ஆநந்தனு யிருக்க விரும்புகிறுனே அவன் பக்தியோடு கூடிய பிரம்மஞானத்தை யடையவேண்டும். பிரம்ம ஞானம் என்பது தனியே வந்துவிடாது. உபாஸனேயாலே அதாவது பகவானேப் பூஜிப்பதாலே வரக்கூடியது. அதி ரகஸ்யமான இந்த ஞானம் ஸகல வித்தைகளிலும் சிரேஷ்டம். இதன் பயன் நிலேயானது. இந்த ஞானம் அஸூயை யில்லாதவனுக்கே கிடைக்கும். எதற்கும் பூர்வ பக்குவம் இருக்க வேண்டும்.

நமது நேயர்களான புண்யசிரேஷ்டர்களுக்கு இப்பத்திரிகையின்மீதுள்ள அபிமானம் எக்காலத்தும் மாறுதிருக்கும்படி ஈசுவரன் கிருபை செய்யட்டும்.

அமிர்தகுணபோதினி

விபவஸு மாசிமீ 1வ

ஒழுக்கமும் முயற்சியும் கூட்டுவிக்கும் ஒரு தனி உயர்வு.

—:(✿):—

"ஒழுக்கம் உயர்குலத்தினும் நன்று" என்பது உலகவழக்கப் பழமொழி. நமது உயர்ந்த அறிவுகளெல்லாம் ஒழுக்கப்பயிற்சியிலும், நமது உயர்ந்த யுக்தி புத்தி ஆலோசனைகளெல்லாம் காரியத்திற்கு வந்து பயன்படுவதிலும் உபயோகமாகவேண்டும். நீதிநெறியைக் கவனியாமல் தனது புத்தி வைபவத்தை மாத்திரம் வியந்து அதைமட்டும் விருத்திசெய்யும் வழக்கத்தைக் கையாளப்புகின், அது இழிவெனப்படுகிற ஸகலவித பொல்லாங்குகட்கும் செல்லுகிற நாசப் பாதையிலே அடிவைக்கும்படி செய்து கெடுத்துவிடும். பொருள் உள்ளவர்களெல்லாம் எப்படிப் பெருங்கொடையுள்ளவர்க ளாவதில்லையோ, அப்படியே விசேஷமாய்ப் புஸ்தகங்களைக் கையாள்பவர்களெல்லாம் நல்லொழுக்க முடையவர்களாவதில்லை. நமது படிப்பு சிறிதளவேனும் மனதைத் திருத்தித் தெளிவிக்காமலும், உண்மையான ஒழுக்கத்தை உறுதிபடுத்தாமலு மிருப்பின் அத்தகைய படிப்பினுற் பயன் யாது?

ஒரு உபயோகமுமின்றிக் கல்விப் பொருளெனுஞ் செல்வத்தை மனது விசேஷமாய்த் தேடிவைத்துக்கொண் டிருக்கலாம். அவ்வறிவு நன்மைக்கும் விவேகத்திற்கும் துணைக்கருவியாகி நல்லொழுக்கத்திற் புகாதிருக்குமாயின், இருந்தும் இல்லாததுபோலவே தான். அறிவானது இவ்வுலகில் வழங்கும் அற்பமான அக்கிரமங்களுக்கு உடன்படவொட்டாமல் ஒருவனை விலக்கிக் காக்கும் என்பது உண்மை தான். ஆயினும், அந்த அறிவானது உண்மையான நீதியொழுக்கமுதலியவைகளால் பத்திரமாய்க் காக்கப்பட்டாலன்றி சுயப்பிரயோஜனமான துன்

அவமானமடைந்தபிறகு அதை நீ மறைத்து எவ்வளவு சொன்னாலும் அவ்வார்த்தைகளுக்கு மதிப்பு ஏது?

மார்க்கத்தினின்றும் விலக்குதற்குச் சக்தி பெற்றிருக்க மாட்டாது. ஆனதுபற்றியே, கல்வியில் நன்ருய்த் தெளிந்தும் ஒழுக்கத்தில் மிகவும் குறைவுள்ளவர்களாயும், பாடசாலைப்படிப்பு பூர்ணமாயிருந்தாலும் வியவகார ஞானம் சிறிதுமில்லாதவர்களாயும், நாம் பார்த்தனுசரிக்கத்தக்க நல்லொழுக்கமுள்ளவர்களா யிருக்கவேண்டியதற்கு மாருக— நாம் கண்டஞ்சி ஜாக்கிரதையாய் ஒதுங்கியிருக்கவேண்டிய தப்பொழுக்கமுள்ளவர்களாயும் இருக்கிற அநேகரை அங்கங்கே காண்கிறேம். பெரிய வித்துவாஞக ஒருவர் இருக்கிருர். ஆனாலோ, அவர் வெகு கேவலமான சிற்றின்பப் பிரியராய், தன்னிடத்திற்கு வருவோரையும் கெடுத்துவிடக்கூடிய பொல்லாத துன்மார்க்கஸ்தராய்த் தோற்றுகிருர். நல்ல படிப்பாளி தான்; ஆயினுமென்ன, ஒன்றுபட்டிருப்பவர்களைப் பிரித்து அதிலே தமது சுயநலத்தைப் பூர்த்திசெய்துகொள்ள விரும்புகிற பயங்கரமான கலகப்பிரியரா யிருக்கிருர். பெரிய ஞானேபதேசங்கள் செய்யக்கூடியவர் தான்; உற்றுநோக்கிலோ, மஹா லோபியாயும், பொருமையின் களஞ்சியமாயும் நாறிக் கிடக்கின்ருர். பார்வைக்கு மிக்க கம்பீரமான மனுஷ்யனே; எனினும், ஒரு பத்து ரூபாயை நம்பிக்கொடுத்துப் பிறகு அதை நாணயமாகத் திரும்பிப் பெறலாமென்று எண்ணுதற்கியலாத யோக்கியதையற்ற மனுஷ்யனுகத் தென்படுகிருர். நேசத்திற்குப் பாத்திரமானவர்தான்; தன்னை ஆவலுடன் தேடிவரும் நண்பர்களைத் தனது கர்வ சிந்தையால் அலக்ஷியம் செய்தும், கேவலமாய் இகழ்ந்து பேசியும் பழிக்கின்ற பதராகவுள்ளார். எனவே, இன்னேர் கல்விமான்களாயும், வெளியுலகில் நல்ல பெயரைப் பெற்றிருந்தும் பயனென்ன? உள்ளாராய்ந்தவிடத்திலோ அவர்களின் குணம் அழுகி நாறுகின்றது. அவர்களை நெருங்குதற்குக்கூட மனம் ஒப்புவதில்லை. தப்பு ஸ்தோத்திரங்கள் செய்துகொண்டு அவர்களைச் சூழ்ந்து நேசம் பாராட்டத் தங்களின் மனசாக்ஷி இடம் தராததால் எத்தனையோ பேர் அத்தகையோர்களை விட்டு விலகியும் போயிருக்கிருர்கள், "புத்திமான் பலவான்" என்று அடிக்கடி பழமொழி வழங்குகிறதென்ருலும், அந்தப் புத்தியை நல்வழியிற்கொண்டு திருப்பாவிட்டால், அது சிறிதும் பலமாகவுமாட்டாது, பயன் தரவுமாட்டாது. மேலும், நன்மார்க்கத்தில் படிந்திராத படித்தறிந்த தீயோர்களைப் பின்னும் கொடியவர்களாக்கி உலகத்திற்கே கனத்த அபாயம் விளைவிப்போராகவும் செய்துவிடக்கூடும். இன்னேர் யுக்தி புக்தி சிலாக்கியங்கள் படைத்திருந்தும் பயனென்னவோ? அவற்ருல் அன்னேர் திருந்திச் செம்மைப்பட்டோராக இல்லையே! ஒழுக்கம் என்பது கடுகளவும் காணேமே!

சில செடிகள் வெட்டுந்தோறும் நன்ருய்த் தழைந்துவரும். அது போல் ஸாதுக்களின் பெருமை பிறர் தூஷிக்குந்தோறும் விர்த்தியாய்க் கொண்டே இருக்கிறது.

நல்ல நூல்களை வாசிப்பது நமக்குப் பயன்பட்டு ஞானத்தை விருத்திபண்ணுமாயினும், நல்லொழுக்கமுண்டாகி மனதைப் பண்படுத்தும் விஷயத்திலோ, நேரிற்கண்ட நல்ல அநுபவமும் பட்டுத் தெளிந்த உதாரணமும் உதவுவதுபோல நூல்களின் வாசிப்பு அவ்வளவுக்கு ஒருபோதும் பயன் தருவதில்லை. அவரவர் தம் இயற்கையான தீக்குணங்களை விலக்குவதுமாத்திரமேயன்றி நற்குணங்களை விருத்தி பண்ணவும் வேண்டும். தன் மானம்போலப் பிறர் மானத்தையும் பாராட்டவேண்டும். ஏழையொருவன் துராசைகள் பல சூழ்ந்துகொள்ளும் பொழுதும் நெறிவிலகாது நேராய்நின்று இழிந்த செயல்செய்ய உடன்படாதிருப்பானாயின் அதைவிட அற்புதக்காட்சி வேறென்ன? ஒழுக்கமே பிரதானம்; அதுவே அற்ப விஷயங்களிலுள்ள துராசைகளை விலக்க வெகுவாய்த் தூண்டுகிறது.

நல்லொழுக்கத்தில் திருஷ்டிவாய்ந்தவன் தன் மானத்தைத் தான் மதித்துப் போற்றுகிறவனாக இருப்பான். தன் மானம் என்றும் காக்கப்படுவதிலே அவன் விசேஷித்த சிந்தைகொண்டு நிற்பான். ஒருவனுக்குக் கோரிக்கை என்பது தன் மானத்தைத் தான் மதிப்பது என்பதிலிருந்தே உண்டாகின்றது. இவ்விதமான கோரிக்கை அதாவது லக்ஷ்யம் என்பது ஒருவன் தலைநிமிர்ந்து நிற்பதற்கான அதிகாரத்துக்குத் தோழனாகவும், காரியசித்திக்குத் தாயாகவும் இருக்கின்றது. அவ்வாறான உன்னத லக்ஷ்யமே (கோரிக்கை) உள்ளவன் எந்த நாளிலாவது முன்னுக்கு வந்துவிடுவது நிச்சயம். எனவே, தன் மானம் என்பது தன்னை விசேஷமாய்ப் பெருமைப்படுத்திக் கொள்வதற்கேற்றதாய், ஈசுவரப் பிரயத்தனமாய் ஹிருதயத்தில் உதிக்கத்தக்க உயர்ந்த அபிப்பிராயமா யுள்ளது. இதுவே ஒருவன் தரித்துக்கொள்ளத்தக்க மேன்மையான வஸ்திரமுமாகும். தன் மானம் மாத்திரம் ஒருவனுக்கு இருக்குமாகில், அவனது தரித்திர ஸ்திதியும்கூடப் பொறுமையும் ஞானமும்கொண்டு மேன்மை பெற்றுச் சிறப்பாய் விளங்கும். தன் மானத்தைப் போற்றுபவன் எக்காலத்தும் தனது நல்லொழுக்கம் பிசகாதிருக்கத் திருஷ்டி வாய்ந்தவனாயிருப்பான். இது ஒழுக்கம் கூட்டுவிக்கும் ஒரு தனி உயர்வாகும். இவ்வித ஒழுக்கத்துடன் கல்வியும் சேரினோ அது பொற்குடத்திற்குப் பொட்டிட்டது போலாம்.

II

இனி, முயற்சியைப்பற்றி ஆராய்வோம். புஸ்தகங்களை வாசித்து அதினின்றுங்கொள்ளும் அறிவு வெகுவாய் விலை பெற்றதா யிருந்தாலும், அது புஸ்தகப் படிப்பாகவே முடிகிறது. அப்

பல ஜனங்கள் சேர்ந்து எதனைச் செய்கின்றார்களோ, அதனைப் பிற ஜனங்களும் ஆலோசனையின்றிக் கையாடுகிறார்கள். இதுவே தற்கால நாகரீகம்!

படிப்பைக்கொண்டு தன் முயற்சியால் உலக விஷயங்களை நெடுக அறியத்தொடங்கி அதன் பயனாகத்தான் அடையப்பெறுகிற அநுபவத்தால் உண்டாகும் அறிவுதான் தனக்கு விவேகமாய்ப் பயனளிக்க வல்லதாகிறது. ஏட்டுக்கல்வி அளவற்றிருப்பதும் சரி, அநுபவம் சிறிதளவிருப்பதும் சரி. பிறர் இருந்த ஸ்திதியையும், அன்னோர் செய்த செயல்களையும் குறித்து எழுதி வைத்திருப்பவைகளைப் படித்துச் சிந்தனை செய்வதுமட்டுமே போதுமென்று திருப்தியடைந்திருக்கக்கூடாது. நாமும் அவ்விதமான ஸ்திதிக்கு வந்து அவ்வகைச் செயல்களைச் செய்ய முயலவேண்டும். இவ்விதம் முயல்வதானது தனது விசேஷித்த முயற்சியைப் பொறுத்ததா யிருக்கிறது. இவ்விதம் முயற்சிப்பதிலே தன்னையும் தனது சிறு கல்வியையும் அற்பமாய் நினைத்து விடுவது ஒரு பெரும் பிழையாகும். அது தன் முன்னேற்றத்திற்கு ஒரு தடைக்கல்லாகிவிடவும் கூடும்.

தன்னைத்தானே இழிவாய் நினைப்பது, பிறர் மதிப்பில் மாத்திரமே யன்றித் தன் மதிப்பிலும் தாழ்ந்து போவதாம். சிந்தனை எப்படியோ அப்படித்தான் செய்கையும். இழிவானவைகளையே எண்ணிக்கொண்டிருப்பவன் ஒருபோதும் உயர்பதம் பெறமாட்டான். உயர்ந்த பதம் பெறவேண்டுமானால் உள்ளத்தின் கருத்துகளும் உயர்ந்தே யிருக்கவேண்டும். எளியவர்களுள்ளும் எளியவனாய் இருப்பவன் கூட தன் கருத்துகளை உயரியதாகக்கொண்டு உழைத்துச் சித்திபெற முயன்று அதனையே ஸதா நினைந்து நினைந்து அனுசரித்து வருவானாகில் தடையின்றி ஒரு காலத்தில் உயர்ந்தெழுவான். இது உண்மை.

சிறுபருவத்தில் முறைமையாகக் கல்வி கற்றவர்கள் அநேகர் பிற்காலத்தில் ஜீவனத்தின் பொருட்டுப் பற்பல உத்தியோகத்திலும் வியாபாரத்திலும் பிரவேசித்துக் கல்விப்பயிற்சியை விட்டுவிடுகிறார்கள். இது கூடாது. விடாது பயில்வதற்கு மேன்மேலும் முயன்று, ஜீவனார்த்தமான தொழிலாராய்ச்சியுடன் அறிவாராய்ச்சியையும் செய்து வரவேண்டும். உத்தியோகத்தில் அதிகமான காலத்தைச் செலவிட வேண்டியுள்ள சிலர் தமது முயற்சியின் பயனாகக் கல்வியிலும் தேர்ச்சியடைந்து கீர்த்தி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் உத்தியோகத்தில் உழைத்த காலம் போக மற்றக் காலத்தில் விடாமுயற்சியால் செய்திருக்கும் கிரந்தங்களைப் பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியமுண்டாகும். அவர்கள் வெகு கடினமான வேலையைக் குறைவில்லாமல் செய்துகொண்டு காவியமும் சாஸ்திரமும் வாசித்துப் பேரெடுத்திருக்கிறார்கள். சிசிரோ என்பவர் இவ்வாறு பேர்பெற்றவர்களுள் ஒருவர். அவரைப்போல் நாம் ஏன் விடாமுயற்சியுடன்

மோசக் கருத்துகளையும் உள்ளன்பில்லாத வெளி ஒப்பாறி உறவுத்தன்மையையும் முகம் காட்டிவிடுகிறது.

உழைக்கக்கூடாது? சோம்பிக்கிடந்து கெட்டழிவதற்கா யில்லாமல், ஸதா உழைத்து வெற்றியும் இன்பமும் காணத்தானே நாம் இவ்வுலகில் பிறந்திருக்கிறோம்.

இந்த சிசிரோ என்பவர் பூர்வத்தில் சிறப்புற்றோங்கிய ரோமாபுரியில் மேன்மை பொருந்திய 'கான்ஸல்' என்ற உத்தியோகம் செய்தவர். ஆயுட்காலமெல்லாம் கல்வியிலேயே கடத்திய வித்துவான்களும் இவரவ்வளவு கீர்த்தி பெற்றதில்லை. காவியம், தத்துவ சாஸ்திரம், நீதி சாஸ்திரம், தர்ம சாஸ்திரம், சரித்திரம் இவைகளில் இவர் மகா வல்லவர். இதன்றித் தாமே அநேக கிரந்தங்கள் செய்திருக்கிறார். விஸ்தாரமான அந்தக் கிரந்தங்களைச் செய்வதற்குப்போதுமான காலம் எப்படிக் கிடைத்ததென்பதே ஆச்சரியமா யிருக்கின்றது. அவருடைய முயற்சியின் வலிமையைச் சொன்னால் பொய்யென்று தோன்றும். அதை இவ்வளவென்று நிதானிப்பது கடினம். தமது விடாமுயற்சியினாலேயே அவர் விஸ்தாரமான கிரந்தங்களைச் செய்து முடித்தாரென்று தெரிகின்றது. உத்தியோகத்தி லிருக்கும்போது தமக்கு எவ்வளவாயினும் அவகாசம் நேரிட்டால் அதை அவர் ஒரு சமயத்திலும் வீணே கழிப்பதில்லை. வேலையில்லாத காலத்தில் சும்மா இராமல் கல்விப் பயிற்சியில் காலம் போக்குவார். "ஜனங்கள் வேடிக்கை விநோதத்திலும் சொந்தக் காரியத்திலும் செலுத்துகிற காலமெல்லாம் நான் வாசிப்பிலேயே கழிப்பேன்" என்று சொல்லுவார். "நிருபங்கள்" என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அதை வாசித்துப் பார்த்தால், அதிக வேலையுள்ள தினங்களிலும் அவகாச மில்லாத காலங்களிலும் ஏதேனும் எழுதவேண்டுமானால், உலாவப் போகிற சமயத்தில் தாம் சொல்வதை எழுதிக் கொள்ளும்படிக் குமஸ்தாக்களுக்குக் கட்டளையிட்டு, உலாத்திக் கொண்டே சொல்லவேண்டியவற்றைச் சொல்லி முடிப்பாரென்று தெரியவருகின்றது. அவர் செய்த 'நிருப' கிரந்தத்தினால் அவர் இடைவிடாமல் உழைத்துக் காலங்கழித்தாரென்று விளங்குகிறது. அவரது கிரந்தங்கள் அநேகம் மறைந்துபோயின. அவர் எழுதிய சில நிருபங்களைக் கவனித்தால், சில விடியற்காலத்திலும், சில துரைத்தன சபையிலிருக்குங் காலத்திலும், சில போஜன சமயத்திலும், இன்னும் சில இஷ்டர்கள் காணவருங் காலத்திலும் கற்பனை செய்து வரைந்ததாகத் துலங்குகின்றன. "எனக்கு ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வேலையுண்டு; வேலையில்லாமல் ஒரு நிமிஷம் கூட நான் இருப்பதில்லை" என்று அவர் ஒரு சிநேகிதனோடு சொல்லியிருக்கிறார். ஹா! இவரது விடாமுயற்சியின் சிறப்பை என்னென்பதோ! இவரது ஜீவியத்தினின்றும், நமது முயற்சிக்கு வேண்டிய

கோவிலுக்குச் செல்லுவோரது மனோரதம் சுவாமி தரிசனத்திற்கு மட்டுமல்ல. அத்துடன் அநேக சங்கதிகளுக்காகவுமே அவர்கள் புறப்படுவது!

படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளக் கடவோம். இவரைப்போல் நாமும் விடாமுயற்சியுடன் ஆராய்ச்சிகள்செய்து வித்தியா இன்பத்தை நம்மாலான வரையில் நுகரக்கடவோம். கல்வி கசக்குமா?

நமக்குக் கிடைத்துள்ள சக்திகளை நாம் எப்படி உபயோகிக்கிறேமோ, அதற்குத் தக்கபடியே நமது வருங்காலமும் அமையும். தனக்குக் கிடைத்துள்ள புத்தி சாமர்த்தியம் வெகு சொற்பமாயிருப்பினும், அதை ஒருவன் விடாமுயற்சியுடன் வருந்திச் சரியாகப் பிரயோகிப்பானுனல், அவ்விதமான புத்திசாமர்த்தியம் பூரணமாக உள்ளவனைப் பார்க்கிலும் அதிகமாகப் பெருமை பெறுதற் குரியவனுவான். திரண்ட ஸ்திதி ஒருவனுக்குப் பிதிரார்ச்சிதமாகக் கிடைத்தால் அதில் எப்படி ஒரு சிலாக்கினையுமில்லையோ, அப்படியே சிறந்த புத்தி சாமர்த்தியங்கள் அதிர்ஷ்டவசமாய் அமைந்திருப்பினும் அதில் ஒரு மேன்மையுமில்லை. அந்தப் புத்தி சாமர்த்தியங்களை எப்படி உபயோகிக்கிறேமோ, அந்தப் பூஸ்திதியை எவ்விதமாய்ப் பண்படுத்துகிறேமோ அதைக்கொண்டு தான் அவற்றின் மேன்மையை அறிய வேண்டும். அதாவது, நமது விடாமுயற்சி எவ்வளவு வரையில் உண்டோ அதை யனுசரித்தே தான் நமது சிறப்பு மிருக்கும்.

மிக்க ஊக்கமும் உற்சாகமுமாய் உழைத்து உலகத்திற்கு உபகாரிகளான பலரும் வெகுவாய்ப் படிப்பில் தேர்ச்சி பெறுதவர்களே. பிரிண்டிலி, ஸ்டீவன்ஸன் இவர்களுக்கு நல்லவயது வந்து பெரியோர்களாகிறவரையில் எழுதப் படிக்கக் கூடத் தெரியாது. ஆயினும் சிறந்த செயல்களைச் செய்து இருவரும் இருபது பேருக்குச் சமானமாய்க் காலங் கழித்தார்கள். ஜான்ஹன்டர் என்பவருக்கு இருபது வயதுவரையில் எழுதப்படிக்கத் தெரியாதென்றுலும், தச்சு வேலை பயின்ற எவனுக்கும் இளைக்காமல் மேஜை நாற்காலிகள் மட்டும் செய்யவல்லவரா யிருந்தார். ஜேம்ஸ் கார்பீல்ட் என்பவர் அமெரிக்கா தேசத்துப் பிரஸிடெண்டுகளில் ஒருவராயினும் பால்யத்தில் அவர் கூலிவேலை செய்து ஜீவித்தவரே யாவார். இவரைப்பற்றி வேறோரிடத்தில் விவரித்துள்ளோம். ஜோஸப் பாக்ஸ்டன் என்பவர் 1851-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் பார்லிமெண்டு என்னும் மகா ஸபையாரில் ஒருவராகிப் பிரஸித்த கீர்த்தியைப் பெற்றுரெனினும், அவர் ஒரு கிராமவாசியாய் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து, நெற்றித் தண்ணீர் நிலத்தில் பெருக வருந்தி உழைத்து வயிறுவளர்த்துவந்த சாமானியமான ஒரு தோட்டக்காரன் தான். இவருடைய சரித்திரத்தை மற்றோரிடத்தில் காணலாம். எல்லா அபிவிர்த்தியும் விடாமுயற்சியைப் பொறுத்துளது. விடாமுயற்சியுள்ளவன் சொற்ப

கெட்ட எண்ணங்களிலேயே நெடுங்காலம் ஊறிய நெஞ்சு திருந்தி நன்னிலைக்கு வருவதென்பது வெறும் பாசாங்குதான்.

கல்வியையும், அற்பமான சிறு செல்வத்தையும் பெற்றிருப்பினும் அது கேவலமாகாது. பின்னுக்கு அது பதின்மடங்கு பெருகிவிடும்.

ஆகவே, நாம் தெரிந்துகொள்ளும் நற்பாடமென்ன? அறிவு வேண்டுவது அவசியந்தானென்றாலும், ஒருவன் விசேஷமாய் அறிவதே முக்கியமன்று; அவ்வறிவின் நோக்கமும், விடாமுயற்சியுடன் அதைக்கொண்டு அடையப்பெறும் பிரயோஜனமுமே முக்கியமாம். எதன் நிமித்தமாகத் தான் அவ்வறிவைப் பெற்றது என்பதை ஒவ்வொருவனும் தன்னில்தானே யோசிக்கக்கடவன். அவ்விதம் யோசிப்பதில்தான் அவனுடைய மேன்பாடும் அபிவிர்த்தியும் முயற்சியு மிருக்கிறது. விவேகத்தை விருத்திசெய்து, நமது ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தி, நம்மை முன்னிலும் மிக்க யோக்கியர்களாயும், சவுக்கியமுள்ளவர்களாயும், பிறர்க்கு உபயோகமானவர்களாயும், ஈவிரக்கமுள்ளவர்களாயும், விசேஷ சாமர்த்தியமும்—உலகத்தில் எவ்வகைச் சிறந்த காரியத்தையும் விடாமுயற்சியாய்ச் செய்து முடிக்க வேண்டுமென்கிற ஊக்கமும்—உள்ளவர்களாயும் ஆக்குவதே நாம் பெற்ற அறிவின் நோக்கமாயிருக்கவேண்டும். ஒழுக்கமும் முயற்சியும் கூட்டுவிக்கும் ஒரு தனி உயர்வு இதுவே.

இவ்வுயர்வின் நலந்தெரிந்து, தனக்கும் உலகுக்கும் உபயோகமா யிருக்கும்படி நல்ல கிரந்தங்களை வாசிப்பதினால் உண்டாகும் கல்விப்பயிற்சியானது மிகுந்த மனவெழுச்சிக்கும், தன்னறிவு-தன்முயற்சி இவைகளால் திருந்தி விருத்தியடைவதற்கும் ஏதுகரமாகி, நற்குணம் நன்னடக்கை இவைகளை மேன்மேலும் நன்றாய்ப் பழக்குவித்து எப்போதும் நற்பயனை விளைவிக்க வைக்கும். வித்தையில் இங்ஙனம் தம்மைத்தாம் பண்படுத்துவோர்க்குச் செல்வப்பொருள் சேராதிருப்பினும், உயர்ந்த அபிப்பிராயங்களோடும் தக்க மேதாவிகளோடும் தோழமையுண்டாகிக் கலா விநோதர்களாதல் கூடும். இவ்விதமே, நல்லொழுக்கத்தையே தமது ஜீவியமாகக் கொண்டோர்க்கு அபரிமிதமான ஐச்வரிய ராசிகள் தமது ஸம்பாத்திய வகையில் கிட்டாவிடினும், அடுத்த தலைமுறைக்குள் அழிந்து விடுகின்ற அக்கிரமமாய்த் தேடியவர்களின் செல்வக் குவியல்களைப்போல் பாழ்படாமல், நல்வழியில் நியாயமாய் ஆர்ஜித்த அந்தத் திரவியம் பல தலைமுறைகளுக்கும் பெருகிவருவதுடன், மாண்டும் மாளாப் பெயர் பூண்டோராய் விளங்குவரென்பதும் உறுதி. ஆகவே, ஒழுக்கம், முயற்சி, அறிவின் பெருக்கு இந்த சக்திகளை நாம் துணிந்து உபயோகிக்கும் விதத்தைப் பொறுத்துளது நமது எதிர்கால மேன்மை.

மாமியைப்பற்றி மருமகளும், மருமகளைப்பற்றி மாமியும் ஊராரிடத்தில் ஒன்பதுநூறு குறைகளைச் சொல்லித் திரிந்தால் அந்த வீட்டிற்கு என்ன கௌரவம் இருக்கப்போகிறது? குடும்ப சமாதானந்தான் ஏது? ஒற்றுமையும் எங்கே?

ஜோஸப் பாக்ஸ்டன்

1803—1865.

ஒருவன் கட்டத் துணியின்றி கந்தையை உடுத்துத் தெருவிலே திரியும் ஏழைச் சிறுவனு யிருந்தாலும், உண்மை, உலையா முயற்சி, நுண்ணறிவு என்னும் பெருங்குணங்களால் பெரும்புகழ் எய்தலாகும்.

ஜோஸப் பாக்ஸ்டன் என்பவன் 1803-ம் வருஷம் பெட்போர்ட் மாகாணத்தில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் வசித்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். அச்சிறுவன் தான் செய்யவேண்டிய வேலைகளை இன்னதென்று அறிந்து கொண்டு திட்டமாய்ச் செய்து வந்தான். அவன் கிராம பாடசாலைக்கு ஒழுங்காய்ப் போய் அங்கே எழுதப் படிக்கப் பயின்று வந்தான். அவன் எளியோர் வீட்டுப் பிள்ளையாதலால், பாடசாலையில் தான் எத்தனை நேரமளவும் இருக்கக் கூடுமோ அவ்வளவு மட்டும் இருந்துவிட்டுப் பின்பு வெளியே போய் நெற்றித் தண்ணீர் நிலத்தில் பெருக வருந்தி உழைத்து வயிறு வளர்த்து வந்தான்.

பின்பு ஓர் தர்மப் பள்ளிக்கூடத்தில் சில வருஷ காலமட்டும் படித்துக் கொண்டிருந்து, அப்புறம் ஓர் தோட்டக்காரனுக்குத் துணையாளாக அமர்ந்தான். அவனுடைய அதிர்ஷ்ட வசத்தால் அவனுக்கு அத்தனை சிறுவயதிற்குள் அந்த வேலை வாய்த்ததானது இவ்வுலகத்தில் அவன் விரைவில் தலையெடுத்து முன்னுக்கு வரும்படியாயிற்று. பின்பு சில நாட்களுக்குள் அவன் **டெவன்ஷயரின்** ஆறுவது டியூக்கினுடைய தோட்டத்தில் உதவி வேலை செய்யும்படி அமர்ந்தான். அங்கே அவன் செய்து வந்த வேலைகளெல்லாம் மிகத் தாழ்ந்தவை.

முயற்சி யுடைமையாற் பயனெய்துவதும், முயற்சி யின்மையாற் பயன் எய்தாமையும் இயற்கை யல்லவா? சிறுவனாகிய **ஜோஸப் பாக்ஸ்டன்** விளக்குமாறு பிடித்துக் குப்பைகூட்டுகிற இழி தொழிலாளனென்றாலும், **அவன் இமைப்பொழுதேனும் வீண் காலம் போக்குகிறவ னல்லன்.** அவன் தனக்குப்பயன்படத்தக்க நல்ல புஸ்தகங்களைத் தேடிவைத்திருந்து, தோட்டத்திற்குக் களை பிடுங்கப் போகும்போதும், குப்பை கூட்டப் போகும்போதும் கூடக் கையோடு காவலாய்த் தன் புஸ்தகங்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு போயிருந்து, தோட்டத்திலே வேலை செய்தபின் பகல் போஜனம் ஆனவுடனே, சற்றே உட்கார்ந்து இளைப்பாறி விட்டு வஸந்தகாலத்தில் நடுப்பகலிலே மந்த மாருதமானது உயரமான மரங்களிலடித்து அவற்றின் இலைகள் சல சல வென்று அசைய, அண்டங் காக்கைகள் கா கா வென்று கத்த, புஷ்பங்களிலிருந்து கம கம வென்று பரிமளம் வீச, ஆநந்தமாய்ப் படிக்க உட்காருவான். அவன் மரங்களையும் மலர்களையும் பற்

தன்மதிப்புடைய ஒருவன் அவமானப்பட நேர்ந்தபொழுது, அவனை வெகுவாய் அறிந்து மதித்த மனிதர்கள் அந்த சமயம் பக்கத்தில் இருந்துவிடுவதில் அவனுக்கு இரட்டித்த வாதனை.

றிய நூல்களைக் கருத்தாய்ப் படித்து, தோட்டத்தைப் பண்படுத்தும் முறைகளையெல்லாம் அது விஷயமாயுள்ள தன் இயற்கை யறிவால் பளிச்சென்று அறிந்து கொள்வான். அவன் விஷயங்களை ஆராய்ந்து பார்க்கிறவனாதலால், தனக்குத் தெரியாதவற்றைப் பிறனைக் கேட்டாவது, நூல்களைப் பார்த்தாவது அறிந்துக் கொள்வான். அவன் கேட்ட நுட்பமான கேள்விகள் சிலவற்றிற்குப் புஸ்தகங்களாலாவது பிறராலாவது விடை கிடைக்காமலிருப்பதுமுண்டு.

அச்சிறுவன் இவ்வாறிருக்குங் காலத்தில் ஒரு நாள் நடுப்பகலில் பகற் போஜன சமயத்தில் **டேவன்ஷயரின்** டியூக் தற்செயலாய் அங்கே வந்தார். அந்த டியூக்கின்கீழ் அநேகர் வேலையில் அமர்ந்திருந்தார்கள். அவர் தங்கீழ் வேலையி லிருப்பவர்கள் ஒவ்வொருவருடனும் எப்பொழுதும் அன்பா யிருப்பதுண்டு. அவருக்குப் புஷ்பம் என்றால் அதிக விருப்ப மாதலால், ஒருவன் எவ்வளவுதான் தாழ்ந்தவனென்றாலும், புஷ்பங்களைப்பற்றிப் பேசுகிற தென்றால் அவனோடு வெகு ஆவலாய் ஸம்பாஷணை செய்யத் தொடங்கிவிடுவார்.

அந்த டியூக்கும் அவருடைய வேட்டை நாயும் அங்கே வருவதை அச்சிறுவன் கண்டு எழுந்து நின்று அவரைவணங்கித் தன் தலைத்தொப்பியைக் கழற்றி, **ஒரு கையில் தொப்பியும், மற்றொரு கையில் புஸ்தகமுமாய்** நின்றான். அந்தச் சிறுவனுடைய சுறுசுறுப்புள்ள முகச்சாயலையும், அவனது பெருந்தன்மையையும் அவர் கண்டு ஸந்தோஷித்து, அவனோடு சிறிது பேச ஆசைகொண்டதுமல்லாமல், முக்கியமாய் அவன் படித்துக் கொண்டிருந்த புஸ்தகம் என்னவென்று கண்டறியக் கருத்துற்றார்.

“இனத்தானும் இன்னானெனப் படுஞ் சொல்” என்றபடி, ஒருவன் நல்லோனாவதும், தீயோனாவதும்தான் சேர்ந்த இனத்தின்படி யாகுமென்பதை மனிதற்கே யன்றிப் புஸ்தகத்திற்கும் நாம் வைத்துக் கொள்ளலாம். நல்ல வஸ்திரங்களை உடுத்து நிர்மலமாயிருக்கிற சிறுவர்களில் சிலர், சேற்றிலே விழுந்தவர்களைத் தொட அருவருப்புப் பட்டபோதிலும், அவர்கள் வாழ்நாள் முழுமையும் தங்கள் மனதைக் கறைப்படுத்துகிற கெட்ட புஸ்தகங்களைப் படிக்கிறது முண்டு. கெட்ட புஸ்தகத்தைத் திறந்துகூடப் பார்க்க மனமில்லாமல், அதை நெருப்பில் விட்டெறிந்து சுட்டெரிக்கும் மனோ வலிமையுடைய சிறுவனானவன், தன் மனமறியமட்டும் நல்லோனாகிறான்; ஆனால், இப்படிச் செய்கிறவன் தன்னைக் கடித்துக் கொல்லும்படி வழியில் தன் காலடியில் கிடக்கிற கொடிய விஷமுள்ள விரியன்பாம்பைக் கொல்லுகிறவனை விட நல்லவனாவான்.

சிறுவனாகிய **பாக்ஸ்டன்** தன் சுய புத்தியைக்கொண்டு தானே முன்னுக்கு வர முயன்று வருவதைக்கண்டு, அந்தப் பிரபுவுக்கு அவனிடத்தில் விசுவாசம் பிறந்தது. அதுமுதற்கொண்டு அவர் சமயம் வாய்த்தபோதெல்லாம் பரிக்ஷித்து அவனை நுட்பபுத்தியுள்ளவனென்றும், உல்லாஸ குணமுள்ளவனென்றும், மேன்மேலும் கல்வி பயில

காலணா—நாலணா பெறாத சாமானாயினும் அதன்மூலம் குடும்பத்தில் உண்டாகிவிடுகிற கலகம் எவ்வளவு பெரியதப்பா! எவ்வளவு பேச்சுகள்—மனஸ்தாபங்களப்பா!

வேண்டுமென்கிற அவா உள்ளவ னென்றும் கண்டறிந்தார். அந்தச் சிறுவன் தொழிலில் தோட்டக்காரன் தான். அவனுக்குள்ள ஆசையெல் லாம் தன் வேலையை நன்றாய்க் கற்று க்கொள்ள வேண்டு மென்பதே. அவனுக்குத் தன் வேலை போய்விட் டால் பின்பு வேறு எவ்விதமாய்ப் பிழைக்கலா மென்கிற வீணான ஸஞ் சல புத்தியில்லை. அவனுக்குத் தன் னுடைய குலத்தையாவது, பேரை யாவது, தொழிலையாவது மாற்றக் கூடவில்லை யென்றாலும், அவன் இம் மூன்றினையும் தனது நல்ல கிருத்தி யங்களினாலேயே பெருமை பெறச் செய்து உயர்ந்தான்.

டியூக்கின் தோட்டத்தில் சிலகால ம் வேலை செய்துகொண்டிருந்த பின்பு அச்சிறுவன் சாட்ஸ்வர்த்துக்கு அனுப் பப்பட்டான். அங்கே அவன் முன் னிலும் சற்று உத்தரவாதமான வேலை யில் நியமிக்கப்பட்டதனால், அதிக சம்பளம் பெறத்தக்கவனானன். சாட் ஸ்வர்த் என்பது அரண்மனைக்காகப் பெயர் பெற்றது. அது இங்கிலாந்தி லுள்ள புராதனமான அழகிய சுந்தர மாளிகைகளி லொன்று.

பாக்ஸ்டன் என்னும் சிறுவன் சாட்ஸ்வர்த்துக்குப் போனபின்பு, அவனுடைய அதிசய சாமர்த்தியத் தையும், நிதானத்தையும் கண்டு, டியூ க்பிரபு அவனைத் தமது தோட்டத்திற் குத் தலைவனாக நியமித்தார். அந்தச் சிறுவனுக்குப் புஷ்பங்களிடத்தில் இயற்கையாகவே மிக்க விருப்ப மிருந் ததுமன்றி, அதுவிஷயமாக அவன் நூலாராய்ச்சி செய்து, இன்னும் அதிக தேர்ச்சி யடைந்தான்.

அச்சிறுவன் அத்தோட்டத்தில் சருகுகளைக் கூட்டிக் கொண்டிருந்த காலத்தில் யாரேனும் அவனைக் கண்டு அவன் பேர் வெகுகாலம் அழிவின்றி நிலைத்திருக்க வேண்டுமென்ற எண் ணங்கொண்டு அவ்வாறு சிரமப்படுகி றானென்று சொன்னால், அவன் நம் பாமல், ஏதோ அசந்தர்ப்பமாய்ச் சொல்லுகிற வார்த்தை என்றே நினை த்திருப்பான். ஆனால், அச்சிறுவனு டைய அற்புதமான வேலைத்திறத்தால் சாட்ஸ்வர்த் முன்னிலும் புகழ்பெற, அதனோடுகூட அவன் புகழும் நிலை நின்றது.

அங்கே எந்த வேலை செய்கிறதா யிருந்தாலும் அவனோடு யோசித்துத் தான் செய்யப்படும். அதில் செய்யப் பட்ட சீர்திருத்தங்களில் பெரும்பான் மையானவை அவனுடைய யுக்தியின் படி நடந்தவைகளே. அதில், கண் ணாடியால் மூடப்பட்டிருக்கிற தோட் டத்தின் வேலை முற்றும் அவனுடைய கருத்தின்படியே அமைக்கப்பட்டது. அதற்குஇணையான கண்ணாடித்தோட் டம் ஐரோப்பாவில் வேறெங்கும் கிடையாது. அதின் பரப்பு சற்றே றக்குறைய ஒரு ஏகரா. அதற்குள்ளே ரதமேறிச் செல்லும்படியான பாதை யொன்றுண்டு. அதில் 70,000 சது ரடி கண்ணாடிப் பரப்புண்டு.

1851-ம் வருஷத்தில் உலகச்சந்தை நடந்த ஹைட்பார்க் என்னும் விசித் திர மாளிகையை அமைக்க எத்தனை யோ சிற்பிகள் மாதிரிகளைத் தயாரித் துக் காட்டினார்களாயினும் பார் வைக்கு அவைகள் திருப்திகரமா யில்லை. அப்பொழுது ஜோஸப் பாக்ஸ்டன் அந்தச் சிற்பிகளைச் சந்

தன் வேலையையும் விட்டு எழுந்து தன் பையனின் விளையாட்டுச் சாமா னைத்தேடி எடுத்து அவனிடம் கொடுப்பதற்குத் தகப்பனருக்கு வந்த அவ்வளவு அக்கரையென்ன? அவன் இன்புறுவதைக் கண்டு தானும் இன்புறவே.

தித்து, "நீங்கள் அதைப்பற்றி ஏன் இத்தனைநேரம் யோசிக்கவேண்டும்; இரும்பும் கண்ணாடியும் இருந்தாற் செய்து முடிக்கலாமே" என்று சொல்லி அதற்கேற்றபடி மாளிகையின் மாதிரி யொன்றைத் தன் கருத்திற் கேற்க விரைவில் எழுதினான். அச் சிறுவனை அதன் படத்தை நன்றாய் எழுதிக்காட்டும்படி கேட்டார்கள். அந்தப் படம் எழுதி முடிந்தபின்பு அது காரிய நிர்வாகிகளிடம் அனுப்பப் பட, அதை அவர்கள் கண்டு அந்த க்ஷணமே ஒப்புக்கொண்டார்கள். அந்த மாளிகை இந்திர பவனம்போல் விந்தையாய்க் கட்டப்பட்டு, இவ்வுல கத்தில் அற்புதமாயிற்று. அந்த விசித் திரமளிகை அந்தச் சிறுவனுடைய அதிசய சாமர்த்தியத்தினால் கட்டி முடிக்கப்பட்டதனால், அவனுடைய கீர்த்தி உலகமெங்கும் பரவியது. அச்சிறுவனுடைய சாமர்த்தியத்துக் காக அவனுக்கு 'நைட்' என்னும் பட் டம் கொடுத்ததைக் கேட்டு, எல் லோரும் ஸந்தோஷப்பட்டார்கள். அந்த மாளிகையின் வாசற்படிக்கு மேலே, எதிரில் விகாரமான ஒரு ஸ்த ம்பத்தின்மேல் கன்னபின்னவென்று வைத்திருக்கிற தலை யொன்றுண்டு. அந்தத் தலையை யுடையவன்தான், ஒரு காலத்தில் கூலி வேலைசெய்து கொண்டிருந்த ஜோஸப் பாக்ஸ்டன். அவன் ஒருவர் துணையுமின்றித் தானா கவே தலையெடுத்தவன். அதுபோ லவே, நாம் எவ்வளவு ஏழையாயிருந் தாலும் ஒழுக்கமும் முயற்சியும் கூட்டு விக்கும் ஒரு தனி உயர்வைப் பின் பற்றி, கடவுளால் நமக்கு அளிக்கப் பட்டிருக்கிற அறிவைத் தக்கவிதமா கச் செலுத்தி வருவோமாயின், நாமும் நன்றாய் வாழ்ந்திருக்கலாம். "முயற்சி யுடையயோர் இகழ்ச்சி யடையார்" என்பது திண்ணம்.

ஜோஸப் பாக்ஸ்டனுடைய வாழ்நாள்களில் எத்தனையோ விரோ தங்கள் நேரிட்டன வென்றாலும், எந்த சமயத்திலும் தன் நல்லொழுக் கத்தையும் முயற்சியையும் கைவிடா மல், எந்தப் பிசகிலும் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு, வெகு அடக்க மும், சாந்தமும், கம்பீரமு முள்ளவ னாயிருந்தான். பெரிய பிரபுக்க ளோடு அவன் கூடியிருந்தாலும், அத னால் அவன் குணம் மாறவில்லை. அவ னது நல்லொழுக்கமும் கெடவில்லை. அவன் தான் முன்னிருந்த ஸ்திதியை யும், தனக்குப் பின்னுண்டான மேன் மையையும் நன்றாய் அறிந்திருந்தது மன்றி, மற்றவர்களும் தன்னையறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பி னான். அவன் ஒரு மகா புருஷன்; அவனுடைய சினேகத்திற்குப் பாத்தி ரர்களானவர்களும் புகழ்பெற்றார்கள்.


"உவப்பத் தலைக்கூடி
யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்"

என்றபடி, அவனோடு நட்புக்கொண்ட வர்களுக்கெல்லாம் அவனைக் கண்டா ல் இன்பமும், காணவிட்டால் துன்ப முமாயிருக்கும். 1854—ம் வருஷத் தில் கிரீமியா யுத்தத்தின் போது ஜோஸப் பாக்ஸ்டன் முன்பு கண் ணாடி மாளிகை கட்டிய வேலைக்காரர் களைக் கொண்டு ஆங்கிலேயருக்குக் கப்பல் ராணுவ மொன்றைச் சித்தஞ் செய்து தந்து பெருந்துணையானான்.

1854—ம் வருஷம் ஜோஸப் பாக் ஸ்டன் பார்லிமெண்டு மகாஸபை யாரில் ஒருவனாகி அந்த வேலையைத் தன் ஜீவகாலமுழுவதும் பார்த்து வந்து, 1865—ம் வருஷம் ஜூலை மாதம் 8-ம் தேதியன்று தேகவியோ கமானான். இவனுடைய சரித்திரத்தி லிருந்தும் நாம் பல புத்திமதிகளைக் கற்றுக்கொள்ளலாம்.

தாய் தந்தையரிடத்தில் அன்பு.

1. ஜேம்ஸ் கார்பீல்ட். 2. ஸாமுவேல் ஜான்ஸன்.



அமெரிக்கா கண்டத்து யுனைடெட் ஸ்டேட்ஸின் அதிபதியாய் பிரசிடெண்டு ஸ்தானம் வகித்தவர்களுள் ஜேம்ஸ் கார்பீல்ட் என்பவரும் ஒருவராவர். இவரது தாய் தந்தையர்கள் தரித்திர தசையிலிருந்தனர். இவருடைய இளம்பிராயத்திலேயே தந்தை காலமாயினர். ஜீவனத்துக்காக இவர் குடியானவர்களிடம் கூலிவேலைக்குப் போக வேண்டியதாயிற்று. ஆரம்பத்தில் மரங்களை யறுத்துக் கஷ்ட ஜீவனம் செய்துவந்தார். நாளடைவில் புத்தியின் பலத்தாலும், ஸாமர்த்திய விசேஷத்தாலும், ஸத்திய குணத்தாலும் வித்யாவந்தனாய் உயர்ந்த உத்தியோகங்களை ஸம்பாதித்துக் கடைசியில் அந்த அமெரிக்கா கண்டத்திற்கே பிரெஸிடெண்டு என்னும் அதிபதியாய் தேசத்தார் தன்னையே தேடி வரும்படியான நிலைமையை யடைந்தார். அக்காலத்தில் இவருடைய கியாதி அதிகமாயிருந்தது. ஸகலரிடமும் தனதுவார்த்தையைச் செலுத்தும்படியான சக்திவந்தரா யிருந்தார். ஆகிலும் விருத்தையான மாதாவை அலக்ஷியம் செய்தாரோ? அவள் வெகு ஸாதாரண ஸ்திரீ. மிகவும் ஏழை. இப்படி யிருந்தாலும் கார்பீல்ட் தன் ஆதிபத்தியத்தின் உத்தியோகம் வந்த தினத்தில் தன் தாயை தன் வலது புறத்து ஆஸனத்தில் உட்காரவைத்து அங்கு நிறைந்துள்ள கூட்டத்தாரின் முன்னிலையில் அவளை நமஸ்கரித்து தன்னைப் பெற்று வளர்த்த அருமையான தாயிடம் தனக்குள்ள விசுவாஸத்தையும் வணக்கத்தையும் பக்ஷத்தையும் தெரியப்படுத்திக் கொண்டார். நாம் நமது தாய் தகப்பனை விட அதிக அந்தஸ்திலிருக்கலாம். ஆகிலும், அவர்களைக் கண்யப்படுத்தி ஸம்ரக்ஷிக்கவேண்டிய கடமை நம்மை விடுமோ? ஜேம்ஸ் கார்பீல்ட் தமது மாதாவுக்கு உணர்த்திய வணக்கத்தினின்றும் அவரது ஒழுக்கத்தின் உயர்வை நாம் உணரலாம். கேவலம் கூலிவேலையிலிருந்து மகத்தான பதவிக்கு அவர் வந்ததைக் கவனிப்பின் அவரது முயற்சியின் சிறப்பும் விவரமாகும். இங்ஙனமாக ஒழுக்கமும் முயற்சியும் கூட்டுவிக்கும் ஒரு தனி உயர்வுக்கு ஜேம்ஸ் கார்பீல்டும் ஒரு உதாரண புருஷராய் விளங்குகின்றார்.

II

நம் இந்திய நாட்டில் அநேகர் பிதுர்வாக்கிய பரிபாலனம் செய்திருக்கின்றனர். இதற்கு அநேக திருஷ்டாந்தங்களைக் கொடுக்கலாம். இதைப் போலவே மேற்குத் தேசத்தாரில் அநேகர் பிதுர் பக்தியைச் செய்து பிரக்யாதி அடைந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை இங்கு கூறுவோம்.

இங்கிலாந்தில் பெரிய வித்வாம்சனான ஸாமுவேல் ஜான்ஸன் என்பவன் பதினெட்டாவது நூற்றாண்டில்

அற்பப் படிப்புக்குள்ளாகவே மகா தெரிந்தவனாய் நினைத்துக்கொண்டுவிட்டவன் மேன்மேலும் படிக்கப் போவதில்லை. அவன் கல்வி என்றைக்கும் ஓட்டையே.

ஜீவித்திருந்தான். இவன் தந்தை புஸ்தக வியாபாரி, படிப்பாளி யென்று பெயரெடுத்தவன். மகன் தந்தை யிடத்தில் வெகு பிரீதியுள்ளவனுயும் கீழ்ப்படியுந் தன்மையுள்ளவனுயும் இருந்தான். ஒரு ஸந்தர்ப்பத்தில் பிதாவின் வார்த்தையைக் கேளாமல் திரஸ்காரம் செய்தான். இது நடந்து ஐம்பது வருஷத்திற்குப் பிறகு ஜான்ஸன் வித்யாவந்தனுய் ஸகலராலும் ஸன்மானிக்கப்பட்டுப் பெரிய மனிதனை காலத்தில் ஒருநாள் தான்செய்த அகிருத்தியத்தை நினைத்துக்கொண்டு எந்த ஊரில் பிதாவினுடைய வார்த்தையை நிக்கிரகித்தானே அந்தவூருக்குச் சென்று நானா ஜனங்கள் கூடும் சந்தைக் கூட்டத்தில் நின்று தன் அபராதங்களைச் சொல்லி முறையிட்டு க்ஷமாபனைக் கேட்டுக்கொண்டான். தலைமேல் மழை கொட்டிக்கொண்டிருந்தது. அதைக்கூட அவன் லக்ஷயம் செய்யவில்லை. இவன் செய்த குற்றம் மிகவும் சொற்பமானது. ஐம்பது வருஷங்களாகியும் அவன் அதை மறக்காமல், தன் உயர்ந்த நிலைமையையும் மறந்து பலர் முன்னிலையில் நடுத்தெருவில் கொஞ்சங்கூட ஸங்கோசப்படாமல் இந்தப் பெரிய மனிதன் பிரார்த்தனை செய்வதைக் கண்டவர்கள் இவன் பிதுர்பக்தியைப் பற்றி வெகு ஆச்சரியம் கொண்டனர்.

தான் ஓரணுவளவு தவறியதற்கு இவ்வாறு பகிரங்கமாய் மன்னிப்பு வேண்டிய இம்மகா புருஷன் தன் ஒழுக்க நெறியில் எத்துணை மேன்மையாய் விளங்கியிருக்கக் கூடுமென்பதை உற்றுணர்ந்து, அவ்வழியிலேயே நம்மையும் செலுத்த முயற்சிக்கக் கடவோம்.

அமிர்த குணபோதினி

அ	கிலத்துலவும் அரிய சஞ்சிகைகளுள்,	அ
மி	ர்த மொழிகளால் அகநோயகற்று, ம	மி
ர்	த மெனத்தகுமருஞ் சொற்பல சே	ர்
த	மிழின் பெருமையைத் தனித்துணர்விக்கத்	த
கு	மிது ! தகுமிது ! தகுமிது வென்றே,	கு
ண	நிறை சீலர் கூறும் புகழ்ம	ண
போ	தக னங்குண போதினி யே; யப்	போ
தி	னி போற்றமிட் போதக னிப்பூ, மீ	தி
னி	ற் பெறலினி மிகவரிதென நா,	னி

யம்பின னிராக வேந்திரன்றனே.

N. இராகவேந்திர ராவ்.

நம்மைப்பற்றி.

ஆநந்தம் அமிர்தமாகப் பரிணமித்து "அமிர்த குணபோதினி" என்னும் ஸர்வ சிலாக்கியமான பெயருடன் சொல்லற்கரிய பெருமையோடும் ஜ்வலிக்கும் நமது பத்திரிகைக்கு அடுத்த பங்குனி மாதத்துடன் மூன்ருவது வருடம் பூர்த்தி பெறுகின்றது. இம்மூன்று வருட காலத்திலும் இப்பத்திரிகை காலந்தவருது நிர்விக்நமாய் நடைபெற்று உலாவிப் படிப்பவர்க்கு உத்ஸாகத்தை விளைத்து வந்திருக்கின்றது. மகான்களுடைய ஆசிர்வாதத்தாலும், இதன் கையொப்ப நேயர்களின் அளவற்ற அபிமானத்தாலும் இப்பத்திரிகைக்கு இப்பொழுது பதிஞயிரம் சந்தாதாரர்கள் இருப்பதுடன், இனியும் மேன்மேலும் விருத்தியாகுமென்பதும் நிச்சயம். நமது செந்தமிழ்நாட்டில் "அமிர்த குணபோதினி" தனக்கென்று ஒரு புது உருவமும் அமைப்பும் கொண்டு நவீன முறையில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றதென்பதை யாவரும் அறிந்திருப்பர். இனி தொடங்கும் புது வருஷத்திலும் "அமிர்த குணபோதினி"யிலுள்ள விஷயங்களே படிக்கத்தக்கவை, அவைகளே மனதிற் கொள்ளத்தக்கவை, "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகையே அபிமானிக்கத்தக்கதென்றும் நன்ருய்ப் புலப்படும்படி வேண்டிய சிரத்தையோடும் ஊக்கத்தோடும் எழுதி வருவோமென்பதில் தடையில்லை. 'பலதுளி பெருவெள்ளம்' என்னும் பழமொழிப்படி நமது அன்பிற்கினிய கையொப்ப நேயர்கள் பத்திரிகாபிமானத்தைப் பெரிதாய் மதித்து, "அமிர்த குணபோதினி"யை அபிவிர்த்திசெய்யும் உத்தமமான எண்ணத்தைக்கொண்டு, இவ்வருஷத்தில் அதிகமான புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து நமக்கு விசேஷித்த உத்ஸாகத்தை விளைவித்திருக்கின்றனர். அவர்களின் விஸ்வாசம் என்றும் மறக்கத்தக்கதன்று. இவ்வுதாரகுண ஸம்பன்னர்களைப்போலவே மற்ற நேயர்களும் இயன்றமட்டில் புதிய சந்தாதார்களைச் சேர்த்து உதவிசெய்யும்படி கோருகிறோம். நமது அருமையான தமிழ் பாஷையிலும், பெருமை தங்கிய ஸ்வதேசத்திலும் அபிமானமுள்ள விவேகிகள் "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகையை மேன்மேலும் விர்த்திசெய்து ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

* * *

சென்ற வருஷத்தில் 48-பக்கங்களாகவே பெரும்பான்மையும் நடைபெற்ற இப்பத்திரிகை இவ்வருஷத்தில் 56-பக்கங்களாக உயர்த்தப்பட்டு முன்னிலும் விசேஷித்த வனப்புடன் விளங்குகின்றது. இவ்வருஷ சந்தாவை மணியாடர் மூலமாக முன்னதாகச் செலுத்

நிய சந்தாதாரர்கள் அனைவருக்கும் நமது பஞ்சாங்கத்தை இனமாக அனுப்பித் திருப்தி விளைவித்திருக்கின்றோம். ஆயினும் ஒரு குறை மட்டும் உளது. மனுஷ்யப் பிரயத்தினத்தில் தவறுதல்கள் இருப்பது ஸகஜம். மகா சிரேஷ்டமென்று மதிக்கப்படும் காவேரி, கங்கை, கோதாவரி முதலிய திவ்ய நதிகளில் தீர்த்தம் வெகு ருசிகரமாயிருக்கும். ஆயினும் சில வேளைகளில் அதிவிருஷ்டியால் கரையிலுள்ள மண் கரைந்து ஜலத்தில் விழுந்து கலக்கமுண்டாகும். அப்போதும் நாம் அந்த தீர்த்தத்தை யெடுத்து வடிகட்டி உட்கொள்ளுகிறோமேயன்றி கலங்கிய ஜலமென்று வெறுக்கமாட்டோம். அதற்காக கிணற்றில் தெளிந்துள்ள உப்புத் தண்ணீரை அருந்தோம். அதுபோல் விவேகிகளாகிய நம்முடைய நண்பர்கள் "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகையில் எந்நாளும் ஒரேவித அபிமானம் கொண்டவர்கள். ஆகவே, நாம் முன்னர் தெரிவித்தவாறு டைம் பீஸ் பரிசு விஷயத்தை இன்னும் பூர்த்திபடுத்தாது காலதாமதமாய் இருப்பதைப் பெருங்குறைவாக நினைப்பவர்க ளல்லர். இடுக்கண் விளைப்பதையே வீர விரதமாகக்கொண்ட இரண்டொருவரால் இவ்வித தாமதம் நேர்ந்துவிட்டது. ஆயினும், நமது கையோப்ப நண்பர்களின் உண்மையான அபிமானத்தை நன்குய் உணர்ந்துள்ள நாம் அவர்களுடைய மனம் பூரிக்கும்படியும் இக்குறை தீரும்படியும் இந்த மாதக் கடைசியில் இந்த டைம்பீஸ் பரிசுகளைத் தக்கவர் முன்னிலையில் நடத்தி, பரிசு பெற்றவர்களின் பெயர்களை அடுத்த பத்திரிகையில் பிரசுரிக்கத் தீர்மானித்திருக்கிறோம். பரிசுகளை அனுப்பும் தபாற்செலவு அவற்றைப் பெறுபவருடையதாகும்.

* * *

பத்திராசிரியர் நூல் எழுதவல்லவரேயன்றி கடியாரம் செய்யத் தெரிந்தவரல்லர். ஆதலின், இனி தொடங்கும் புதிய நான்காவது வருஷத்தின் சந்தாவை மணியாடர் மூலமாக மார்ச்சு மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பிவைக்கும் கண்யர்களுக்கெல்லாம் நமது "அமிர்த குணபோதினி சுக்ல வருஷ பஞ்சாங்க"த்தை இனமாகக் கொடுப்பதென்று நிச்சயத்திருக்கின்றோம். இந்தப் பஞ்சாங்கம் விசேஷித்த விஷயங்களுடன் 96-பக்கங்கள் வரை கொண்டது. வி. பி. யில் பத்திரிகையைப் பெறவிரும்புவதில் பஞ்சாங்கப் பரிசு கிடைக்காமற் போவதுடன், அனாவசியமான தபாற்செலவாக மூன்று அணாவும் அதிகரிக்கின்றது. ஆதலின், நமது சந்தாநேயர்கள் அனைவரும் மார்ச்சு மாதம் 30-ம் தேதிக்குள் தங்களின் புது வருஷ சந்தாவை மணியாடர் மூலமாக அனுப்பி வைத்து, பஞ்சாங்கப் பரிசும் பெற்றுக் கொண்டு "அமிர்த குணபோதினி"யை இனிவரும் நான்காம் வருஷத்திலும் வரவேற்று அமிர்தபானம் செய்கின்றோமென்ற பெருமையை வகிக்குமாறு பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

பத்திராசிரியர்

பிரபஞ்ச தரிசனம்

(“இந்திய பூகோள போதனை”—முன் தொடர்ச்சி.)

அதோ பார்த்தாயா! வங்கதேசம். இதன் தலைமையான பிரதேசத்தை ஹிமோத்கிரியானது மகுடம்போல் அலங்கரித்து ஒளிர்கின்றது. இதன் பாதப்பிரதேசத்தைக் கடல் நீர் பரிசுத்தம் செய்யா நின்றது. புண்ய நதியாகிய பகீரதியின் பரிசுத்த ஜலத்தால் இது தினந்தோறும் திருமஞ்சனம் செய்யப்பெற்றுப் பிரகாசிக்கின்றது. இதற்கு அணிகலன்போல் இதோ **நவத்வீபம்** திகழ்கின்றது. இதிலன்றோ பூர்வம் ஸ்ரீகிருஷ்ணசைதன்ய ஸ்வாமிகள் திருவவதாரம் செய்தருளி வைஷ்ணவ தர்மத்தை ஜாதிபேதமின்றி எல்லோருக்கும் போதித்து ஹரிநாம சங்கீர்த்தனத்தால் இந்தப் பூமியை வாழ்வித்து ஜீவர்களுக்கு முக்தி கைகூடும்படி செய்தருளினர்.

இதற்கு மேற்குப் பாரிசத்தில் அஜயாநதி தீரத்தில் **கேந்து பில்வம்** என்ற பிரதேசம் உள்ளது. இதில்தான் **அஷ்டபதீ** என்றும், **கீதகோவிந்தம்** என்றும் பெயர்பெற்ற சிறந்த பக்தி ரஸம் நிறைந்த பாடற்றிரட்டை வடமொழியில் இயற்றிய **ஜெயதேவ கவி** வாழ்ந்தார். அதற்குக் கீழே ஸாகர ஸங்கமம் இருக்கிறது பார். கபிலமுனியின் சாபத்தால் சாம்பராய்ப்போயிருந்த சகரவம்ஸத்தினரை அச்சாபத்தினின்று ரக்ஷிக்கும்பொருட்டுக் கருணையே உருவெடுத்தாற்போல் ஆகாயத்திலிருந்து இறங்கிவந்த பதிதபாவனியாகிய பகீரதிநதி இவ்விடத்தில்தான் ஸமுத்திரத்தில் ஸங்கமமாகின்றது.

பாரதபுத்திரா! சொல்லவேண்டுமானல் எவ்வளவோ இருக்கிறது! நான் என்னென்று வர்ணிப்பேன்! தெய்வத்தன்மை பொருந்திய ஹிமாசலத்தைப் பார்த்தாயல்லவா? அதன் அடிவாரத்தில் **ரோகிணி** என்ற நதி பாய்கின்றது பார். அந்த நதியின் கரையிலே **கபிலவஸ்து** என்கிற பட்டணம் முற்காலத்தில் இருந்தது. அந்தப் புண்ய பூமியில்தான் **ஸித்தார்த்தன்** என்ற **புத்த பகவான்** பிறந்து உலகத்தாருக்கு துக்க நிவர்த்தியையும், நிர்வாணபிராப்தியையும் போதித்தார். அதற்கு இடது பாரிசத்திலே பார்,—கங்காநதி தீரத்தில் அர்த்த சந்திரவடிவமாய் அவிமுக்த க்ஷேத்திரமாகிய **ஸ்ரீகாசி** சோபிக்கின்றது. இங்குதான் முன்னளில் **ஹரிச்சந்திரன்** தன் அருமை மனைவியையும், மகனையும் விற்று சுடலை காத்து, சத்திய வாக்கிய பரிபாலனம் செய்தான்.

இதோ பார், ஸிப்ரா நதி தீரத்திலே புராதனப் பெருமையையுணர்த்தும் ஞாபக ஸ்தம்பங்களுடன் கூடி விளங்கும் உஜ்ஜினி நகரம் தெரிகிறது. இதுதான் **விக்கிரமாதித்திய ராஜன்** அரசாண்ட இடம். இங்குதான் கவிகுல ஸார்வபௌமனுகிய **காளிதாஸன்** தனது இனிய வீணையைமீட்டி அழியாப் புகழ்பெற்ற அருமைக் காவியங்களையும் நாடகங்களையும்பாடினன். அவனதுகீர்த்தி இப்பொழுது தேச தேசாந்திரங்களிலும் பரவி யிருக்கின்றது.

இவ்வாருகவே, இந்த நாட்டின் ஒவ்வொரு பரமாணுவிலும், ஒவ்வொரு நீர்த்திவலையிலும் ஸாதுஜனங்களின் பரிசுத்த எலும்புகளும், கற்பரசிகளின் இரத்த பிந்துக்களும் கலந்திருக்கின்றன. இந்த மகா புண்ய பூமியானது இப்போது விடுதலைத் தாகம் மிகுந்து நிற்கின்றது. குடியேற்றநாட்டின் அரசாக்ஷியைப்போன்ற ஒரு பரிபாலனத்தைப் பெற மிக விரும்பி உழைக்கின்றது. குழந்தாய்! நீயோ பாரத வருஷத்தின் சந்தானம். புனிதமான வம்சத்தில் உதித்தவன். இதை நீ ஒருபோதும் மறவாதே.

ஆங்கில தமிழ்க்கடிதங்கள்

(425-ம் பக்கத் தொடர்ச்சி.)

Letter XVII

No man that has past the middle point of life, can sit down to feast upon the pleasures of youth, without finding the banquet embittered by the cup of sorrow. Many days of harmless frolic and many nights of honest festivity will recur; he may receive the memory of many lucky accidents, or pleasing extravagances; or, if he has engaged in scenes of action, and been acquainted with affairs of difficulty and vicissitudes of fortune, may enjoy the nobler pleasure of looking back upon distress firmly supported, upon danger resolutely encountered, and upon oppression artfully defeated. Aeneas very properly comforts his companions, when after the horrors of a storm, they have landed on an unknown and desolate country, with the hope that their miseries will, at some distant period, be recounted with delight. There are, perhaps few higher gratifications

17-ம் கடிதம்

பால்யத்தில் அனுபவித்த சுகங்களைத் தனக்குப் பாதி வயதாகு முன்னே நினைத்து விசனப்படுவோன் ஒருவனுமில்லை யானாலும், குற்றமற்ற களிப்போடு சென்ற அநேக பகற்காலங்களும். யோக்கியதையான மகிழ்ச்சியோடு சென்ற அநேக இராக்காலங்களும், அதிர்ஷ்ட வசத்தாற் சித்தித்த அநேக நன்மைகளும், மனோவுற்சாகத்தால் செய்த அநேக கோலாகலங்களும் அப்போது அவன் புத்தியில் வராமலிராதுகள். அன்றியும் அவன் பல வேலைகளில் உடன்பட்டவனாயும், அருமையான காரியங்களில் பண்பட்டவனாயும், செல்வத்தையும் வறுமையையும் அநுபவித்தவனாயும் இருப்பானாகில் சிறுமையை மனம் தளராது சகித்ததையும், சம்பவித்த பொல்லாங்கை ஊக்கத்தோடு வென்றதையும், வந்த தொந்தரையை உபாயத்தோடு நீக்கியதையும் நினைத்து மேலான இன்பமடைவான். 'எனயா' சென்பவன் தன்னோடு கப்பலேறி வந்தவர்கள் அடித்த புயலினால் மிக வருத்தப்பட்டு முன்பின் அறியாத பாழாயிருந்த ஒரு தேசத்தில் சேர்ந்து இறங்கியபோது அவர்களைப் பார்த்து, இன்னும் கொஞ்சகாலத்திற்குப் பின் நீங்கள் பட்ட துன்பங்களை உலகத்தில் இன்பத்துடன் சொல்லிக் கொள்ளுவார்கள்; சம்பவித்த பொல்லாங்கு நமது தப்பிதத்தால் வந்ததாயும், அதற்கு நாம் அஞ்சியதாயும் இல்லாமல்

"நீ இல்லாவிடில் நான் பிழைக்கமாட்டேனா ?" என்பது அவனை (அவளைப்)ப் பிரிந்து கஷ்டப்படும்போது தெரியும்.

than that of reflection on evils surmounted, when they are not incurred by our own fault, nor reproach us with cowardice or guilt.

அதைவென்றதனுல், இனியொருகால் நாம் அதை நினைத்து அனுபவிக்கும் சந்தோஷத்தைவிடப் பெரிய சந்தோஷமொன்று மிராதென்று மிக நியாயத்துடன் அவர்களுக்கு ஆற்றல் சொன்னுன்.

(கடிதம் முடிவு பெறவில்லை.)

அபிப்பிராயங்கள்.

"அமிர்த குணபோதினி" இதன் பத்திராதிபர் திரிசிரபுரம் ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜுலுநாயுடு. இதன் ஆபீஸ் சென்னை தங்கசாலைத்தெரு 302-நெம்பரில் உள்ளது. இதன் வருடச்சந்தா ரூபாய் ஒன்று. இப்பத்திரிகையில் மிக உயர்ந்த ஆத்மார்த்தமான விஷயங்களும், ஹாஸ்யத்தை உண்டாக்கத்தக்க பாகங்களும், சிறுவர்களுக்கு கல்வி யறிவு புகட்டத்தக்க பாகங்களும் கதைகளும் காணப்படுகின்றன. பல உயர்ந்த எண்ணங்கள் கொண்ட வசனங்கள் புத்தகத்தில் ஆங்காங்கு தனிப்பட்டதான இடத்துக்குள் அச்சடிக்கப்பட்டு படிப்போர் கவனத்தை இழுக்கின்றன. பழமொழிகளும் அவை போன்ற பல வாக்கியங்களும் சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. இப்பத்திரிகையைப் படிக்கும் காலம் படிப்போர்க்கு வீண் காலமெனக் கருதப்படாது.

1-12-28. சுதேசமித்திரன்.

அபிப்பிராயம்:—"கனம் தி. இராஜகோபால் முதலியாரவர்கட்கு, நான் இப்பொழுது தங்களால் நடத்தப்பட்டு வரும் "அமிர்த குணபோதினி" சஞ்சிகையைத் திரும்பவும் தரிசிக்க மிகவும் ஆவலுள்ளவனு யிருக்கின்றேன். ஏனென்ருல், தங்கள் பத்திரிகை மிகவும் குழவியாயிருக்கும் சமயத்தில் "ஆநந்த குணபோதினி" என்ற நாமத்தோடு நிகழ்ந்துவரும் நாளில் அதற்கு நானுமொரு சந்தாதாரனுய்ச் சேர்ந்திருந்தேன். அக்காலத்தில் அதன் வாயிலாய் நான் அறிந்த அறிவுகள் பல. அவைகள் இன்றைக்கும் என் மனதின் கண் மிளிரிக் கொண்டிருக்கின்றன. ஸ்ரீமான் நாயுடு அவர்களின் பேனுமுனையால் வெளியுற்ற ஒவ்வொரு வாக்கியமும் என்னை ஓர் அறிவாளியாய்ச் செய்ய இப்பவும் கூடப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்றன."

P. S. அப்துல்காதர் சொழம்பு.

அமிர்த குணபோதினியின் மதிப்பு:—"அனுபவ அறிவை அதிநுட்பமாகவும், அமிர்தமென்றெண்ணுதற் கேற்றதாகிய மிருதுவாகிய வசன நடையிலும் வெளிவரு மமிர்தபோதினிக் கிம்மூன்று வருடமுஞ் சந்தாதாரராகாத குணவான்கள் நான்காம் வருடத்திலாவது தம் தம் குணமணிகட் கியற்கைக் குணத்துடன் செயற்கைக் குணபோதனைக் கிப்பத்திரிகையை வருவித்துத் தாமும் போதித்தால் நல்லறிவாகிய கொழுந் தினிதினிதாய் வளர எது வுண்டென் றெண்ணுகிறுளோர் கன்னி."

சோர்ணம்பாள் எழுவை தீவு, ஸிலோன்

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அதிசயம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

முள்ளின்மேற்பட்ட சீலை!



புத்தி, பக்தி, சித்தி, சக்தி, யுக்திமெத்த உள்ள கற்றவர், அற்றவர், மற்றவர், சத்தியர், உத்தமர் முதலிய எல்லோருக்கும் ஒரு வைபத்தியம் மாத்திரம் உலகில் விட்டதாக இல்லை! இப்படிப்பட்ட பித்தம் என்ன பித்தம்? காமப் பித்தா, பணப்பித்தா, நிலப்பித்தா, குடி பித்தா, சூதுபித்தா, சுருட்டுபித்தா, பொடி பித்தா, புகையிலை—வெற்றிலை—கஞ்சா—அபினி பித்தா, வயித்திய பித்தா, மந்திரதந்திர மகாஜால பித்தா, ஆடையாபரண பித்தா, எந்தப் பித்தம் என்கிறீர்களோ? இந்தப் பித்தங்கள் எல்லாவற்றையும்விட ஒரே அமுக்கில் மூழ்த்துகிற பெரும் பித்தம்—அதாவது ஒருவரைப் பூரணமாய் நம்பி விட்டு, பிறகு நம்பியமனுஷனே காலைப்பிடித்துத் தூக்கி வாரியடிக்கும்போது, அந்த வேளையில் திகைத்துப் போய், ஐயோ, உன்னை அப்படி நம்பினேனே, இப்படி நம்பினேனே, கடைசியில் என் காலை வீசிவிட்டாயே, என்று கதறுகிற நம்பிக் கெட்டு நலம் குறைகிற பித்தம்தான்! இதற்குத்தான் விகடன் இரண்டு பக்கத்துக்கும் ஒரே குத்தலாய் இருக்கும்படி "முள்ளின் மேற்பட்ட சீலை" என்று ஒரே மொத்தமாய்ச் சுருக்கிச் சொல்லிவிட்டேன்.

***

முள்—என்று கண்ணுக்குத் தெரியாமலா போயிற்று? அது சேலையைக் கிழித்துவிடுமென்று அறிய புத்தி யில்லையா? எல்லாம் தெரிகிறதுதான், புத்தியும் இருக்கிறதுதான். ஆனால் முள்ளைப்பற்றிக் கேடுகெட்ட விதமாய் எண்ணாமல், அது நன்மை செய்யுமென்று நம்பிக்கையாய் நினைக்கிற மற்றொரு சங்கதியும் இருக்கிறது. மற்ற கிளைகளில் சீலையைப் போட்டால் அது அதை இழுத்துப்பிடித்துக் காற்றுக்குப் பறந்து கீழே விழாமல் நிறுத்தி வைக்காது. முள்ளின்மேற் போட்டாலோ அந்த முள் சீலையை இறுகப் பிடித்துக்கொண்டு ஈரத்தைக் காயவைத்து சீக்கிரம் உடுத்திக் கொள்ள உதவிபண்ணுமென்று நம்பியே முள்ளுள்ள இடம் பார்த்து

சிலர் உக்கிரகமாய்க் கோபம்கொள்ளுகையில், அவர்களுடைய கோபம் வெடிக்கிறதா?—அல்லது கோபத்தால் அவர்களே வெடித்துப் போகிறார்களா என்று பெரிய ஸந்தேக முண்டாகிவிடுகிறது.

அதன்மேற் சேலையைப் போட்டுக் காய வைக்கிற சங்கதி! இவ்விதம் நம்பி விடுகிற நம்பிக்கையிலே, அந்த நம்பிக்கை முள்ளும் சில சமயங்களில் கடியார முள்ளைப்போலிருந்து காலம் மணி காட்டி நலமே செய்கிறதும் உண்டுதான். ஆனால் பெரும்பான்மையாக நடக்கிறசங்கதி என்ன? அந்த நம்பிக்கை முள்ளின்மேலே நம்பிக்கைத் துரோகம், சுயநலம் என்ற பக்கத்து மரத்துக் கிளைகள் ஒடிந்து விழுந்து முள்ளின்மீது காய்ந்து கொண்டிருக்கும் சேலையைச் சின்னபின்னமாய்க் கிழித்து உடுத்திக் கொள்ள முடியாதபடியும், உடுத்திக் கொண்டாலும் கிழிபட்ட இடத்தில் பின்னும் கிழிந்து பிறகு உதவாமலே போகும்படியும் ஆக்கிவிடுகிற அநியாயக் கூத்துகள்தான் அதிகம்! நம்பி விட்ட சங்கதி இப்படி நட்டுக்கொள்ளும்போது தலைக்கும் தொடைக்கும் நடுவேயுள்ள வயிறு குபீரென்று பற்றிக்கொண்டு எரிகிறதடா அப்பா! இதுதான் எங்கெங்கும் எதேஷ்டமாய் எதிர்ப்படுகிற மலிவான சரக்கு!

***

ஒரு எளியவன் ஒரு பணக்காரச் சீமானை நம்பிவிடுகிறான். நம்புவது நட்பின் தன்மையிலே. அவனே தனக்குக் கதியென்று கூட நினைத்து விடுகிறான். அவனை தனக்கு இவ்வுலகத்துப் பெரிய துணையென்றும் பாவித்து விடுகிறான். இப்படியான ஒரு நம்பிக்கையில் தன் வியாபாரத்துக்குக் கொஞ்சம் கடனும் வாங்கிவிடுகிறான். அந்தச் சீமானும் ஆபத்துக்கு அடுத்து வந்து உதவுகிற ஸஞ்சீவியாய் நடு இரவிலும்கூடக் கூப்பிட்ட வேளைக்குத் துணையாய் ஓடிவந்து உதவுகிறான். இருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத நெருக்கமான நேசம்-அன்பு. இந்த நிலையிலே வாங்கிய கடனும் திருப்பித்தராமல் நாள் கடந்து போகிறது. அதை சீமானும் கேட்பதில்லை. பெற்றுக்கொண்ட ஏழைக்கும் மோச புத்தி யில்லை. ஒருமிக்க இனி தனக்கு வரவேண்டிய ஒரு பெருந்தொகையை எதிர்பார்த்து, அது வந்ததும் தந்துவிடலாமென்று இருக்கிறான். இவ்வளவு வரைக்கும் முள்ளின்மேற் போட்ட சேலை நன்றாகவே காய்ந்து கொண்டிருக்கிறது. இதற்குப் பிறகு தான் இருக்கிறதடா அப்பா பெரிய பரிதாபக் கதை!

***

சீமான் உள்ளத்தில் சின்ன புத்தி உண்டாகிறது. சிறுகச் சிறுக சுயநலமும் கூடிக்கொள்கிறது. ஏழையின் கடைக்கு வரும்போதெல்லாம் அவன் கடைச் சரக்குகளை வேண்டியவரைக்கும் இனமாய்ப் பெற்றுப் போகிறான்! ஏழையும் தன் கடைச்சரக்குகளுக்கு ஒரு கணக்கும் பார்ப்பதில்லை. அதன் விலைகளைக் கூட்டி யோசிப்பதில்லை. சீமான் சிரித்து ஆநந்தமாய் விடைபெற்றால், அது அந்த ஏழையின் மனதுக்குவெகுவான கொண்டாட்டமாய் அன்பு மனம் துள்ளித் தாவுகிறது. சீமான் கடைக்கு வந்து உட்கார்ந்ததும் இன்ன சாமான்களை அவருக்கு இனமாய்க் கொடுத்துச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்று ஏழையின் நெஞ்சு அதே கண்ணாய் கருத்தாய்த் தாண்டவமிடுகிறது. ஏழையின் உண்மை யன்பு இப்படி யிருக்க இனி அந்தச்சீமானின் சேதிகேட்கிறீர்களா?

***

ஸூர்யன் ஸமுத்திர ஜலத்தை ஆவிரூபமாய்க் கொண்டுசென்று மறுபடி மழைரூபமாய் பூலோகத்துக்குக் கொண்டுவருவதுபோல், தபோதனர்கள் தாங்கள் ஆர்ஜனை செய்த உத்தமஞானத்தை மறுபடி மனிதர்களுக்கே தானம் பண்ணி உபகாரம் செய்கிறார்கள்.

சீமான் நட்புள்ளவர்தான், நல்ல மனுஷ்யர்தான். ஆனல் அந்தப் பாழும் சுயநலச் சிந்தையிலே நன்கு தேறிவிட்ட குட்டி! ஏழை இவரிடம் வரும்போதெல்லாம் பெற்றுக் கொள்ளுகிற சில்லறைக் கெல்லாம் வெகு முடுக்கான கணக்குப் பதிவு. ஒரு சாக்குக் கோணி கொண்டுபோனலும் அதற்கு அந்த ஏழையின் கணக்கிலே எட்டணு உடனே பதிவு. பிறகு அந்த சாக்கு திரும்பி வந்தாலும் அதை ஒரு மூலையிலே போடுகிறதே தவிர, அந்தப் பதிவான எட்டணுவை நீக்குகிறதில்லை. இப்படியே அந்த ஏழைக்குத்தருகிற எந்த சாமானுக்கும் அதற்கு உள்ள விலைபோட்டு அவன் கணக்கிலே அப்போதே பதிவு! தான் மட்டும் அந்த ஏழையின் கடைக்கு வந்து போகும்போ தெல்லாம் பெற்றுவருகிற பிஸ்கோத்து டின்கள், பெப்ரமிட்டுகள், காகிதக் கட்டுகள், கஜம் கணக்கில் ஜவுளி தினுசுகள், பொம்மைகள் இன்னும் இப்படியான பலவற்றிற்கும் இனும் வகையிலே பெற்றதாக எண்ணிக் கொள்ளுகிறது!

***

இப்படிப்பட்ட நிலையிலே சீமான் அந்த ஏழையைக் கடன் பணத்துக்கு நெருக்குகிறர். வரும்போதெல்லாம் கேட்க ஆரம்பித்து விடுகிறர். அவரைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டு, அவரைச் சாந்தப்படுத்தி யனுப்ப இன்னும் தனது கடைச் சரக்குகளை இனமாகத் தூக்கிக்கொடுத்து கூட வந்து வழியனுப்புகிறன். பிறகு ஒரு நாள் ஏழை தன் கணக்கைப்பார்க்கச் சீமானிடம்வரும் போது கோணிக்கும், ஊசிக்கும், சுருட்டு பற்றவைத்த நெருப்புப் பெட்டிக்கும், இரவல் வாங்கித் திரும்பித்தந்துவிட்ட ஓட்டைக்குடைக்கும் வெகு விவரமாய்ப் பணக்கணக்கிலே கூட்டப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறன். இது என்ன ஐந்து ரூபா கணக்கு என்கிறன். அதற்கு சீமான் உங்களுக்கு வயிற்றுநோவு வந்த போது வைத்தியர் வேண்டுமென்றீரே! அவருக்குத் தந்த ஐந்துரூபாய் என்கிறர். ஐயோ! அந்த வைத்தியர் வரவுமில்லை, மருந்து தரவுமில்லை, தந்து உண்ணவுமில்லை, எட்டிப் பார்த்தவருமல்ல, அதற்கு ஐந்து ரூபாயா? முதலில் இரண்டு ரூபா கொடுத்திருந்தால் போதுமே என்கிறன். மற்றொரு கணக்கு ஏழு எட்டு ரூபாய்க்கு இருப்பதைப் பார்த்து இது எதற்கு என்கிறன். அது உங்கள் வீட்டுக்குத் தருவித்த பூசாரிக்குக் கொடுத்தது என்கிறர் சீமான்! அவனுக்கு ஒரு ரூபாய் தந்தால் போதுமே, அதற்கு ஏழெட்டு ரூபாயா? அவனல் ஒரு காரியமும் நடக்கவில்லையே என்று கண்ணீர் விடுகிறன் ஏழை! அதற்கு சீமான் என் அந்தஸ்துக்குத் தக்கபடி யல்லவா தரவேணும்; ஏழெட்டுக்குமேல் எவ்வளவோ நான் செலவிட்டுவிட்டு அதையெல்லாம் கணக்கில் காட்டாதிருக்கும்போது, இப்படிக் குறை பேசுவது சரியல்ல என்று கோபிக்கிறர்! ஏழையோ, சீமானுக்கு வருத்தம் வரக்கூடாது, நட்பும் கெடக்கூடாது என்று வந்தனமிதோ தந்தேன் என்று வணங்கிப் பொறுமையுடனே நொந்த உள்ளமாய்த் திரும்பி விடுகிறன்!

***

வீட்டுக்கு வந்த ஏழை குந்திக் கொண்டு நெடுக யோசிக்கிறன்! இந்த விகட விநோத உலகத்தையும்,

---

"சாப்பிட வாருங்கள்"—என்ற வாய் உபசரிப்புக் கோணலை வந்தவர்களும் ஜாடையாக உணர்ந்துகொண்டு அதற்கேற்றபடி தங்களின் தலையை யசைத்துவிட்டு அத்துடன் விடைபெற்றுப் போய்விடுகிறர்கள்!

சிறிது நோக்கிச் சிரிக்கிறான்! உயிருக்குயிராய் நினைத்து என் கடைச் சரக்குகளை யெல்லாம் மனம்போல வழங்கி என் நண்பனை வாழ்த்தினேனே! நான் பெற்ற கடன் அந்த சிமானுக்கு ஒருபளுவா என்றுகூட நினைத்து அலட்சியமாயிருந்தேனே! அவரோ தூசிக்கும் துரும்புக்கும் கூட அதைப்பணக் கணக்கிலேபற்று எழுதி யிருக்கிறாரே! முள்ளின்மேற் போட்டசிலை சங்கதி யாச்சதே! சுயநலக்கட்டை விழுந்து மோதி நேச அன்புச் சிலையும் கிழிந்து கிடக்கிறதே! அவசரப் பட்டு இழுத்தால் இன்னும் கிழிந்து உதவாமலாகி விடும். பக்குவமாய் மெதுவாகச் சிலையை முள்ளின்மேலிருந்து எடுக்க வேணும் என்று நீள நீள யோசிக்கிறான்! அந்த யோசனையின் முடிவாக, வெகு சீக்கிரமே சிமானின் கடனைத் தீர்த்துவிட்டு, முள்ளின்மேற் பட்ட சிலையையும் மெதுவாக எடுத்துவிட்டு அப்பா! பிழைத்தேண்டா என்று பெருமூச்சு விடுகிறான்! சிமானின் நேசத்தையும் கெடாமல் வைத்துக் கொண்டு பொதுவில் நல்லபிள்ளையாய் ஒரப்போய் விடுகிறான்! சிமானும் தன் கடன் பாக்கி வந்துவிடவே இனி ஏழையின் கடைக்கு முன்போல் போய் அவன் சரக்குகளை இனாமாய்ப் பெற்றுவருகிற சங்கதிகளுக்கு மனது வெட்கப்பட்டுப்போய் தூர ஒதுங்கி நின்று விடுகிறான்! இருவரும் நாளைக்கும் நேசர்களே! சிரிப்புச் சந்திப்பே! ஏழைக்கு நாளைக்கும் அந்த சிமானின் மேல் அவன் சமயத்துக்கு உதவின மகா புருஷன் என்று அளவுகடந்த பிரியமே. ஆனால், சிமானுக்கு மட்டும் தன் சுயநலம் தனக்கே தெரிந்து, குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்கிறது! இப்படியாக இந்த முள்ளின் மேற்போட்ட சிலையின் செய்தி எப்படிக் கோணியிருக்கிறது பார்த்தீர்களா?

* * *

இன்னொருமுள்ளின்சிலைச்செய்தி சொல்லட்டுமா? அது ஒரு கண்ராவி! அதுவும் ஒரு நம்பிவிட்டுக் கெட்ட சங்கதியே! இவனும் மோசம் செய்வானோவென்று வெகுசொந்தமாய்எண்ணி பல சில்லரையாய்ப் பெருந்தொகை கடன் தந்துவிட, கடன் பெற்றவனோ பிறகு மாறி கோர்ட்டுக்குப் போய் வாங்கிக்கொள்ளு என்றுவிடுகிறான். அந்த ஆத்திரத்திலே அந்த மோசக்காரனைக் கச்சேரிக்கு இழுத்து வழக்கு நடத்தத் தன் கண்ணான நண்பனை வேண்டிக் கொள்ளுகிறான். அந்த நண்பனோ மனஸ்பூர்வமாய் உழைத்து மோசக்காரனைக் கச்சேரிக்கு இழுக்க உண்மையிலேயே முதலில் பாடுபடுகிறான். பிறகு அந்தப் பாழான சுயநலமும், தன் கை கடிக்காமல் போக வேண்டுமென்கிற எண்ணமும் புகுந்து கொள்கிறது. அதற்கு, இதற்கு ஜப்திக்கு, வக்கீலுக்கு, சேவகனுக்கு, வண்டிச் செலவுக்கு என்று நெடுக நோட்டுகளாகவும் பணங்களாகவும் பெற்றுப்போய், எல்லாவற்றிற்கும் தான்சரியானகணக்குஒப்புவிப்பதாய்ச் சொல்லிக்கொள்ளுகிறான். அப்படி ஒப்புவிக்கத்தான் அவனுக்து அந்த சமயம் யதார்த்தமாகவே எண்ணம். அதை விகடன் இல்லை யென்று சொல்லமாட்டேன். அதற்கு பிறகு தான் இருக்கிறது வேடிக்கை! கையில் பணம் கனமாய் இருக்கவே, தனது அவசர செலவுக்கு முதலில் ஒரு காசு எடுக்கிறான். பிறகு ரூபாயாக எடுக்கிறான். பிறகு நோட்டாக எடுக்கி

புதிய மாப்பிள்ளைகளே! நீங்கள் தனியாய் குசாலாய் இருந்தகாலம் மலையேறிப் போய்விட்டது. இனி உங்களின் புதுக்குடித்தனக்குத் தகுந்தபடி ஆற அமர யோசனைசெய்து உங்களைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

ளுன். எப்படியோ காசு கரைந்துவிடுகிறது. மோசம் செய்ய எண்ணமலே செலவிட்டுவிட நேர்ந்துபோய், பிறகு செலவான பணத்திற்கு வழிசொல்ல முடியாமல் எல்லாம் கோர்ட்டுக்குச் செலவழித்ததாகச் சொல்லிக்கொள்ள ஆரம்பிக்கிறுன். பாவம்! அந்த சமயம் அவனும் நஷ்டப்பட்டுக் கஷ்டப்படுகிற வேளையாயிருப்பதால் இப்படி புதுமனிதனைப் மாறத் தலைவிதி வாய்க்கிறது. இவ்வளவுக்கு நடுவில் மோசக்காரனிடமிருந்து கச்சேரிமூலம் பணமும் வசூலித்து விடுகிறுன். அதைக் கொண்டுவந்து தராமலே, அதற்கு ஒரு கணக்கும் சொல்லாமலே தீர்த்துவிட்டு, மேலுக்கும் பல செலவுகளுக்குப் பணம் கேட்க வருகிறுன். நண்பனே கடன் தொகைக்குமேலே எவ்வளவோ செலவாய் விட்டதே, கணக்கு என்ன என்கிறுன். உடனே இவனுக்குக் கோபம் வந்துவிடுகிறது! ஓ! கொடுத்ததை அப்படியே செலவிட்டேன், கணக்கு எதுவும் வைக்கவில்லை, எல்லாமே செலவாய்ப் போச்சுது என்கிறுன்! நண்பனே, திகைக்கிறுன்! மோசக்காரனுக்குக் கொடுத்த கடன்தொகை போதாதென்று, கச்சேரிக்கு இழுத்து இவரை அதற்கு ஏம்படுத்தியதில்அதைப்போல இன்னெரு தொகையும் ஆகிக் கைக்கு நாலு காசு கூட வரக்காணேமே என்று கலங்குகிறுன்! கடைசியில் முள்ளை நம்பி அதின்மேல் சீலையைப் போட்டு விட்டோம். அங்கே சுயநலக்கட்டை விழுந்து சத்தியம் என்கிற சீலை கிழிந்துவிட்டது. இனி இதற்குமேல் விரோதம் என்று ஒரு குட்டிச்சாத்தான் ஏற்படாமல் இவ்வளவில் மானமாய் மெதுவாகக் கிழிபட்ட சீலையை எடுத்துக்கொண்டு விலகிவிடுவதே உத்தமமென்று அந்தப் புண்ணுன நண்பன் மௌனமாய் விலகிவிடுகிறுன்! இது ஒரு முள் சீலைக் கூத்து!

***

வேருெரு "முள்" விழா பேசவா? தன் சௌகரியத்துக்காக ஒருவனுக்குத் தூபம்போட்டு அவனைத் தன் கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டு, அவனுல் ஆகவேண்டிய காரியங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு, பின் எல்லாவற்றுக்கும் தான் ஒருவனே சொந்தக்காரனுகிவிட நினைத்துக் கூட்டாளியை மெதுவாய் விலக்கி அவனுக்குப் பட்டுக் குல்லா சாத்திவிட்டு பெரியவாழ்வு வாழ ஆரம்பித்துவிடுகிறுன். இந்த 'முள்'ளை நம்பி அதன்மேல் சீலையைப்போட்டுக் காயவைக்கப்போன கூட்டாளியோ, அங்கே சுயநலக்கட்டை விழுந்து பொத்துக்கொண்டதைக் கண்டு, அவ்வளவில் பகைக்கு எதுவில்லாமல் பக்குவமாய்ச் சேலையை எடுத்துக் கொண்டு ஒதுங்கிவிடுவதே மேலென்று அப்படியே விலகித் தூரத்திலும் போய்விடுகிறுன். இதுவும் ஒரு நம்பிக்கெட்டுச் சந்தியிலே நின்று தவிக்கிற திருவிழா தான்!

***

தன்னவர்கள் என்றும், தனக்கு நல்லதே செய்வார்களென்றும் நம்பிக்கை வைத்துவிட்டு, அவர்களைப் பெண் பார்க்கும்படி சொல்லப்போக, அவர்களோ ஒரு தண்டு பஜாரியை இவன் கழுத்திலே மாட்டிவிட, பிறகு அவளால் நொந்து படுகிறபோது, இதென்னடா அப்பா முள்ளின்மேற்பட்ட சீலை யென்று கதறுகிறுன்! இவ்விதமே தன் பெண்ணை வாழக் கொடுக்கப்போன இடத்தில், அந்தப்

பிறரிடம்கொடுத்த புஸ்தகமோ அரிய பொக்கிஷம்—விலைக்கும் கிடைக்காதது. அதைப் பெற்றுப் போக்கடித்து விட்டவரோ வெகு நெருங்கிய உறவினர். கேட்பதற்கும் வாயில்லை. புஸ்தகமும் இனி வராது. பெரிய வேதனை.


பெண்ணுக்கு வந்த புருஷனே நின்னைச் சோம்பேரியாகி அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் பெண் கொடுத்த வீட்டில் குந்திக்கொண்டுவிட, பெண்வீட்டுக்காரனே இந்த முள்மேற்பட்ட சேலையை எப்படியடா விலக்குவது, இவ்வளவு பெருஞ் செலவுகள் செய்துத் தினமும் ஆக்கிக் கொட்ட தெய்வமே நான் எங்கே போவேன் என்று திகைக்கிறான்!

***

விகடன் இந்த "முள்ளின்மேற் சேலை"க்கு இப்படியே நெடுக உலகத்து அநுபவங்களை வாரிக் கொட்டலாம்! அவைகளும் கேட்கக்கேட்கப் பெரிய விழிப்புச் சங்கதிகளாகவே இருக்கலாம். ஆனாலும் அவையெல்லாவற்றினுடையவும் மொத்தக் கருத்து நம்பிவிட்டுத் திண்டாடுகிற அவதிகளாகவே இருக்கும். இவ்வளவுக்கும் வத்தி வைத்துக் கொளுத்திவிடுகிறது எது?—எல்லாம் அந்தச் சுயநல புத்திதான். அது நேசத்தைக் கொன்று, அன்பைக் கொன்று, ஆதரிப்பைக் கொன்று, நம்பிக்கையைக் கொன்று, நாணயத்தைக் கொன்று, நல்ல நினைவையும் கொன்றுநெருங்கி ஒட்டிக் களிப்பதையும் கொன்று, தங்கமான மனத்தையும் கொன்று, தயவு—ஈவு—இரக்கம்—புன்னகை யாவற்றையும் கொன்று, தெய்வ பயத்தையும் கொன்று, தர்மத்திற்கு அஞ்சுதலையும் கொன்று, பாவத்தை விரோதிப்பதையும் கொன்று கடைசியில் நம்பிக்கைத் துரோகக் கொலைக்கும் துணிந்து ஜிவ்வென்று எழும்பிப் பாயவும் வைத்துவிடுகிறது! இப்படிப் பதங் கெட்டு, மூன்குணம்கெட்டு, மூர்க்கம் முட்டிக் கொண்டு மாறிவிடுகிறபோது உத்தமர்களான சாதுக்கள் செய்யவேண்டியதென்ன?—நம்பிக்கை வைத்து நம்பிக் கெட்டுவிட்டவர்கள் செய்வதென்ன? இந்த முள்ளின்மேற் பட்ட சேலையை அது கிழிந்துவிட்டதற்கு வருந்தாமல், அம்மட்டில் மெதுவாக எடுத்துக்கொண்டு தூரப்போய் விடுவதே உத்தமமென்று விகடனுக்குப் படுகிறது. இதை விட்டுவிட்டு முள்ளை எதிர்த்துக்கொண்டால் அது ஒடிகிறது சும்மா ஒடியாது; நமது கையில் பட்டு, அந்த முள் நம் கையில் ஏறிக் கன வாதனை கொடுத்துவிட்டு அப்பால்தான் அது ஒடிந்துபடும்! ஆகவே அவ்வளவுதூரத்துக்கு வைத்துக்கொள்ளாமல் கெட்டது கெட்டது—மிஞ்சியது லாபமென்று மெதுவாகச் சேலையைமுள்ளிலிருந்து விலக்கிக்கொண்டு நழுவிவிடுவதே தான் சரி. ஆகவே தான் விகடனும் நம்பிக்கைத் துரோகம் செய்தவர்களை 'முள்' என்று ஒரு குத்தலாய்க் குத்திச் சொல்லிவிட்டு, நம்பிக்கெட்ட பைத்தியங்களை அந்த முள்ளின்மேற்பட்ட சேலையாய்க் குறிப்பிட்டு இங்கும் ஒரு குத்துச் சொல் காட்டி, மொத்தமான கருத்தாய் இருவருக்கும் பொருந்தும்படி "முள்ளின்மேற் பட்ட சேலை" என்று இந்தக் கசுமாலக் குப்பையை வெளியில் இழுத்துக் கொட்டிவிட்டேன்! நீங்களும் இந்தக் குறிப்பைத் தெரிந்து விழிததுக் கொள்ளுங்கள்! ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!

என் சொத்து என் வீடு என்றவர்களெல்லாம் ஒன்றையும் எடுத்துக் கொள்ளாமலே கண்மூடிச் சென்றுவிட்டார்கள். அது தெரிந்தும் உலக ஆசை விட்டதாயில்லை.

சிலரை வெளியில் பார்த்தால் மிக்க ஆடம்பரமான உடைகளுடன் வாஸனை ஸெண்ட்டுகள் பரிமளிக்க விளங்குகிறார்கள். அவர்களை அவர்கள் வீட்டில் கண்டாலோ அழுக்குடன் கிழிந்த கந்தையோடு எதிர்ப்படுகிறார்கள்.



தகப்பனே திண்ணைத் தாங்கி, தாயோ பிணியாளி, குமாரர்களோ ஒருவன் கடலுக்கு அப்பால் ஒரு தாசியுடனே, மற்ற மூவர் தனித்தனி வைப்புகளுடனே. சம்பாதிக்கிற மகனே எட்டியும் பாராதவன், திரண்டு வீட்டிலிருக்கிற பெண்களுக்கோ விவாகத்துக்கு வழியில்லை. இந்தமாதிரி ஒரு குடும்பம் இருந்தால் விடிகிற காலம் எப்போது என்று விகட ஞானியொருவர் கேட்கிறாராம்.

***

தமிழ் நாட்டார் ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று பிரசாரம் நடக்கிறதே. தமிழனாய்ப் பிறந்தும் தமிழில் பேசத் தெரியாமல் ஆங்கிலத்தில் உளறுகிறதும், தெலுங்கனாயிருந்தும் தெலுங்கு எழுத்துத் தெரியாமல் தமிழில் பேசுகிறதுமாயிருக்கும் பவிஷியிலே இவர்கள் ஹிந்தி பாஷையைக் கற்று எப்படியப்பா உருட்டப்போகிறார்களென்று விகடன் கலகலவென்று சிரிக்கிறானாம்!

பணக்காரன் கருமித்தனம் பிடித்து வண்டியில் ஏறாமல் கால் நடையாய் நடந்துபோனாலும் கதியின்றி நடக்கிறானென்று எவரும் சொல்லமாட்டார்களாம். விகடனைப் போன்ற ஒரு ஏழை நடந்துபோனால் மட்டும்தான் கேவலப்பேச்சாம்.

***

கதர் அபிவிர்த்தியிலே நூல்நூற்று நாலணாபெறும் ஏழைகளைவிட, நாற்காலியிலும் கதர் ஜவுளிக்கடையிலும் குந்தி யிருப்போருக்கே நல்ல புஷ்டித்த வரும்படி என்று உளவு தெரிந்த பூனையொன்று கூறுகிறதாம்.

***

வீட்டுக்கு விருந்தாளியாய் வருகிறவர்கள் கொண்டுவருகிற பழம் பக்ஷணங்களின் விலைமதிப்பைவிட, அவர்கள் மூன்று நாள் குந்திவிட்டுப் போவதில் அவர்களுக்குச் செய்யும் செலவின் மதிப்புதான் பத்து பங்கு அதிகமென்று ஒரு ஸம்சாரி மிகவும் ஏங்கி விகடனுக்குச் சொன்னாராம்!

***

கவர்னர்களும் பெரிய தலைகளும் ஒரு ஊருக்கு வந்து போவதிலே, அவர்களுக்குப் படிக்கும் உபசாரப் பத்திரத்திலே பணக்காரச் சாமிகள் மட்டும் சேருகிறார்களா, அல்லது ஊர் ஜனங்கள் முழுதும் சேர்கிறார்களா என்று விகட சித்தாண்டி வினவுகிறார்.

வீட்டில் இல்லாதது போலவும் காண்பித்துக் கொள்ளுகிறார்கள். புசிப்பு நேரத்திற்குப் பிறகு ஏதோ பாராக்காக வருவதுபோல் வந்து உண்டுவிட்டு மெதுவாக நழுவிவிடுகிறார்கள். இப்படியே பல நாள்வரையும் பிந்தியவேளை பார்த்து வந்துவிட்டு தாங்கள் வீட்டில் இல்லாதது போலவே பாவனை காண்பிக்கிறார்கள். ஐயோ! இதுவும் ஒரு பிழைப்பா! இவர்கள் முன்னுக்கு வரும் லக்ஷணம் இதிலேயே தெரிகிறதே!

வார்த்தை பொல்லாத சத்துரு. சமயம்போல அமிர்தமாயும், விஷமாகவும் மாறும் வல்லமை அதற்குண்டு. ஆதலின் பேசுமுன் யோசி. பேசாமல் உன் வாய்க்குள் அடக்கிக்கொண்ட சங்கதிகளில் எவ்வளவோ கலகங்கள் நடக்க இடமில்லாமல் போய்விட்டிருக்கின்றன பார்.



(545-ம் பக்கத் தொடர்ச்சி.)

343. The birds sang in the thickets, And the streamlets laughed and glistened, And the air was full of fragrance.

LONGFELLOW.

பறவைகள் காடுகளில் பாடின. அருவிகள் சிரித்துக் கொண்டும் பிரகாசித்துக்கொண்டும் ஓடின. காற்று நறுமணம் நிரம்பியதா யிருந்தது.

லாங்பெல்லோ.

344. The day is dark and cold and dreary, It rains and the wind is never weary.

LONGFELLOW.

பகல் நேரம் இருட்டாகவும், குளிர்ச்சியாயும் துக்ககரமாகவு மிருக்கிறது. மழைபெய்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் காற்று களைக்காமல் அடித்துக்கொண்டிருக்கிறது.

லாங்பெல்லோ.

345. And ever the wind blew, and yellowing leaf, And gloom and gleam, and shower and shorn plume. Went down it.

TENNYSON.

காற்று எப்பொழுதும் அடித்தது. அதன் கீழாக பழுப்பாகும் இலையும் இருளும், வெளிச்சமும், மழையும், உதிர்க்கப்பட்ட சாகும் சென்றன.

டென்னிஸன்.

346. Know thyself, for though thyself only thou canst know God. RUSKIN.

நீ உன்னையே அறி. ஏனென்றால் உன் வழியாகத்தான் நீ கடவுளை அறியக்கூடும். ரஸ்கின்.

347. It is no man's business whether he has genius or not; work he must, whatever he is, but quietly and steadily.

RUSKIN.

ஒருவன்தான் மேதாவியா இல்லையா என்று கவனிக்க வேண்டியது அவனுடைய காரியமில்லை. அவன்யாராயிருந்தாலும் உழைத்தே தீரவேண்டும். ஆனால் சாந்தமாயும் நிதானமாயும் செய்யவேண்டும். ரஸ்கின்.

348. Let us not strive to rise too high, that we may not fall too low. SCHELLER.

ரொம்ப உயரம் கிளம்புவதற்கு நாம் முயலக்கூடாது. ஏனென்றால் விழுந்தால் அதிக ஆழத்தில் விழவேண்டியிருக்கும். ஷெல்லர்.

349. So comes a reckoning when the banquet's o'er—The dreadful reckoning, and men smile no more. GAY.

விருந்தின் முடிவில் கணக்கிடும் போது ரொம்ப துக்ககரமா யிருக்கி

மனதிற்குள் சுயநல எண்ணம்; மேலுக்கோ வெகு வெகுஒத்தாசைசெய்ய -ருகிறதுபோலப் பாவிப்பு. அவ்விதமான பாவனையில் தன் சொந்தக்காரியத்தை முடித்துக் கொண்டுவிடத் துரிதப்படல்—இப்படியும் சிலர் போக்கு.

றது. அதற்குமேல் ஒருபோதும் மனிதர்கள் சந்தோஷப்படுவதில்லை. ஃகே.

350. Believe me, upon the margin of celestial streams alone those simples grow which cure the heart-ache! LONGFELLOW.

நான் சொல்வதை நம்பு: தெய்வலோக ஓடைகளின் கரையில் தான் மனதின் வலியைப் போக்கும் மூலிகைகள் வளருகின்றன. லாங்பெலோ.

351. Every one has a romance in his own heart. All that has blessed or awed the world lies there. LONGFELLOW.

ஒவ்வொருவனுக்கும் மனதில் ஒவ்வொரு விசித்திரம் உண்டு. உலகத்தை அனுக்கிரஹம் செய்தோ அல்லது பயமுறுத்தியோ இருக்கும் ஒவ்வொருவனும் கிழே கிடக்கிறான்.

லாங் பெலோ.

352. Do not allow a trivial misunderstanding to wither the blossoms of spring. DICKENS.

ஒரு அல்ப மனஸ்தாபமானது வரப்போகும் வஸந்தகாலத்தின் புஷ்பங்களான சந்தோஷங்களைக் கெடுக்கும்படி விட்டுவிடாதே. டிக்கன்ஸ்.

353. What's in a name? That which we call a rose. By any other name would smell as sweet. SHAKESPEARE.

வெறும்பேரில் என்ன இருக்கிறது? நாம் ரோஜாபுஷ்பம் என்று எதைச் சொல்லுகிறோமோ அதுவேறு என்ன பெயரிடப்பட்டாலும் வாசனையில் மாறுபடாது. ஷேக்ஸ்பியர்.

354. Not die; but live a life of truest breath, And teach true life to fight with mortal wrongs. TENNYSON.

சாகப் பிரியப்படாதே. ஆனால் உண்மையான வாழ்வில் வாழு. உண்மையான வாழ்வுக்கு மரணத்துக் குட்படுத்தும் தப்பிதங்களுடன் போர்புரியக் கற்றுக்கொடு. டேன்னிஸன்.

355. Stone walls do not a prison make, Nor iron bars a cage; Minds innocent and quiet take. That for a hermitage.

R. LOVELACE.

வெறும் கற்சுவர்கள் காராக்கிரஹமாகாது. வெறும் இரும்புக் கம்பிகள் கூண்டாகாது. குற்றமில்லாதவும் சாந்தமுமுள்ள மனதை உடையவர்கள் அவைகளைத் தாங்கள் தங்கும் ஆசிரமமாகப் பாவிக்கிறார்கள்.

ஆர். லவ்லேஸ்

P. E. பாஷியம் நாயுடு.

வாசிப்பவர்கட்கு மகத்தான ஆநந்தத்தை விளைத்து, சிறுவர் சிறுமியரின் புத்தியை விசாலப்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய நீதியையும், நன்னெறியையும், தெய்வ பக்தியையும் கற்பித்து, உத்தமமான குருவைப்போல் ஹிதோபதேசம் செய்து, பாஷா ஞானத்தையும் மனோதருமத்தையும் விருத்திபண்ணுவது எது? நீங்கள் அன்புடன் வாசிக்கும் இந்த "அமிர்த குணபோதினி"யே.

அமிர்தம் கண்டேன் என்று கூறுவது அவ்வளவாகத் திருப்தியைத் தராது. அவ்வமிர்தத்தைப் புசித்தால்தான் ஸந்தோஷமுண்டாகும். அதுபோல் "அமிர்த குணபோதினி"யை அவரவர்தாமே வரவழைத்துப் பெற்று, படித்துத் திருப்தியடைய வேண்டுமென்பது நமது கோரிக்கை.

குழந்தைகள் பக்கம்

உனக்கும் ஆஸ்தி யிருக்கிறது.

தாதா ஒரு நாள் தமது பேரனைப் பார்த்து—"நீ புதிதாய்ப் பொருள் தேட விரும்புவதைவிட, இருக்கிற ஆஸ்தியை வீண் செலவு செய்யாமல் பத்திரமாய் வைத்திருக்க முயல்வதே மிகவும் நல்லது"—என்று புத்திமதி சொன்னார்.

பேரன் :—ஆஸ்தியை விரைக்குவதா? வீண் செலவு செய்யத்தான் எனக்கு என்ன ஆஸ்தியிருக்கிறது? என் கையில் இருப்பது ஒரு அணாவே; அதுவும் அம்மா தந்தது; அவ்வளவு தான்.

தாதா:—குழந்தாய், உனக்கும் ஆஸ்தி யிருக்கிறது. அதை இரண்டொரு தருணங்களில் வீண்செலவு செய்யவும் நான் கண்டிருக்கிறேன்.

பேரன்:—தாதா, நீங்கள் சொல்வது இன்னதென்று எனக்குத் தெரியவில்லையே; ஆயினும் நீங்கள் சொல்லவேண்டாம்; நானே கூடியவரையில் முயன்று யோசித்துப் பார்க்கிறேன். அந்த ஆஸ்தி உங்களுக்கும் இருக்கிறதா?

தாதா:—ஆலோசிக்குமளவில் உனக்கும் இருக்கிற அளவு எனக்கு இல்லை குழந்தாய்.

பேரன்:—ஆயின், எனக்கு மட்டும் அதிகமாயிருக்கிறதோ?

தாதா:—அது எனக்குத் தெரியாது பிள்ளாய்; கடவுள் ஒருவருக்கே தெரியும். அவர் தான் அதை உனக்குச் சிறிது சிறிதாகக் கொடுத்துவருகிறார்.

நாம் சோற்றுக்கில்லாமல் கடன்வாழ்வில் கலங்குகிறோம்; அவன் வீட்டில் கலியாணமும் விருந்தும் தடபுடலுமாயிருக்கிறதே என்று எண்ணும் பொறாமைப்பூதம் உயர்வது எது ?

பேரன்:—கல்விப் பொருளையாவது சவுக்கியப் பொருளையாவது நீங்கள் குறிப்பிடுவதாக எனக்குத் தோன்றவில்லையே.

தாதா:—இவற்றைப்பற்றி நான் கூறவில்லை. நான் சொல்வது இவையில்லாமலே உனக்குக் கிடைக்கத்தக்கது. நீ உயிரோடு இருக்குமளவும் இந்தப் பொருள் உனக்கு அழியாது. அதை ஒருவரும் உன்னிடத்தினின்றும் கொள்ளை கொள்ளவுமாட்டார்கள்.

பேரன்:—வேண்டுமானால் நான் அதை யாருக்காவது கொடுத்துவிடலாமா ?

தாதா:—நீ அதை எறிந்துவிடலாம் ; ஒருவரும் அதைக் கண்டெடுத்துக்கொள்ள மாட்டார்கள். எறிந்துவிட்டால் நீ கூட அதை மறுபடியும் காண மாட்டாய். அந்தப் பொருள் போனால் போனது தான். பின்பு அது அழுதாலும் வராது ; அனுதாபப்பட்டாலும் திரும்பக் கிடைக்காது.

பேரன் :—அப்படியானால் அது என்ன? இவ்வளவு விசித்திரமான பொருளை நான் கேட்டதேயில்லை.

தாதா:—அதுதான் ஆயுள் காலம் என்பது. இது ஒவ்வொருவருக்கும் எவ்வளவு இருக்கிறதென்பதை எவரும் கண்டறிந்தவர்களல்ல. இருக்கிற சொற்ப காலத்தையும் வீணாக்காது பயன்படுத்திக் கொள்பவர்களே புத்திசாலிகள். இதுவே நான்சொன்ன ஆஸ்தி.

தாதா சொல்லியவற்றைப் பேரன் நன்றாகக் கவனித்துக்கேட்டு அதுமுதல் மிகுந்த புத்திசாலியாய் நடந்துகொள்வதானான். போன காலமும், போனமனிதர்களும், கைவிட்டுப்போன புஸ்தகங்களும், வாய்விட்டுப்போன சொற்களும் மறுபடியும் திரும்பப்பெற முடியாது.

> எல்லா மானிடரும் தமது சிசுப்பருவத்தில் தாயின் மார்பகமாகிய மிருதுவான பஞ்சணையில் சாய்ந்து நின்றவர்களே. அதனினும் மிருது வேறு எது? தெய்வவுருவுடன் யிருந்தகாலமும் அதுவே.

வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமென்று நினைக்கிற நெஞ்சுக்கு எவ்வாறேனும் பணமும்சேர்ந்து கடனும் தீருகிறது. மோசம்செய்ய நினைக்கிற மனமோ துன்பப்பட்டு வாரண்டுக்குத் தப்பி ஊர் விட்டோடும் கதியைத் தான் பெறுகிறது.

பழமொழிக் குறிப்புகள்

2. அற்ப குணம்.

(525-ம் பக்கத் தொடர்ச்சி.)

116. தேளுக்கு மணியம் கொடுத்தால் நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டும்.

தேளின் சங்கதி தெரிந்ததே. அது பிறரைக் கொட்டுவதில் ஒருவித திருப்தியை யடைகிறது. அவ்விதமே பிறரை ஹிம்ஸித்து அதைப் பார்த்துத் தாங்கள் மகிழ்வதில் விருப்பம் கொண்டுள்ள இரக்கமற்ற அற்பர்கள் சிலர் எங்கும் எக்குடும்பத்திலும் இருக்கிறார்கள். பிறருக்கு ஆபத்து என்றால் அது இவர்களுக்கு ஒரு உல்லாசச் செய்தி. அதைப்பற்றி நாலு வீடுகட்குச் சென்று திண்ணையில் குந்தி, 'அவன் சங்கதி கேட்டாயா' என்று கதையை வளர்த்துப் பேசிப் பொழுது போக்குவார்கள். அப்படித் தான் அவனுக்கு வேண்டுமென்பார்கள். அவ்விதம் பிறருக்கு ஆபத்து வந்து விடும் காலங்களில் அதிலே தங்களுக்கு ஒரு லாபம் இருப்பதாக நினைத்துப் பூரிப்பார்கள். இவர்களின் அல்ப குணமும் கொடுந்தேளின் தன்மையும் ஏற்கெனவே தெரிந்து தான் இருக்கிறது. ஆயினும் வேறு தக்க மனுஷ்யர்கள் அந்த அவசர ஆபத்தில் உதவிக்கு அகப்படாமல் இவர்களையே சகாயத்திற்கு அழைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தேளுக்கு மணியம் கொடுத்தது போல், நமக்குத் துணையாயிருந்து காரியங்களைச் செய்வதற்கான சுதந்திர உரிமையையும் அதிகாரத்தையும் இவர்களிடம் கொடுத்து அவர்களின் அந்த சமயத்து ஒத்தாசைக்கு எதிர்பார்க்கிறோம். அவர்களோ அந்த சமயத்தில் தான் பலே தடபுடல் மனுஷ்யர்களாகி விடுகிறார்கள். பழைய சாப்பாட்டிற்கும் திண்டாடியவர்களுக்கு இப்பொழுது உப்புமா காபி வைத்து உபசரித்தாலும் அவர்களுக்குத் திருப்தியில்லாமற் போகிறது. சாப்பாட்டிற்குத் திண்டாடி நாட்பட்டினியிற் கிடப்பவர்களானாலும், அந்த சமயத்திற்குப் புது மனுஷர்களாகிக் கொண்டு குறித்த நேரத்துக்குச் சற்று அதிகமானால் பசியால் வாடித் தவித்துப் போவதாய்த் தொந்தரை கொடுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். நாலு காய் கறிகளுடன் வட்டித்தாலும், அவர்களுக்கு அது திருப்தியில்லாமல் 'இதென்ன முரட்டுச் சாப்பாடு—உப்பற்ற பருக்கை' என்று பழித்துக் குற்றஞ் சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். நமது ஆபத்தின் அவதியை ஒருபக்கம் பட்டுக்கொண்டு, அவர்களுக்குத் திருப்தியை ஒருபக்கம் செய்துகொண்டு தத்தளிக்க வேண்டியிருக்கிறது. இது மட்டுமல்ல, அந்த சமயத்தில் தான் குட்டிக் கலகங்களையும் கோணிகளையும் ஆரம்பித்துக் கொள்ளுகிறார்கள். "என்ன, எனது

"மணிக்கு நூறுபக்கம் படித்துவிடுவேன்" என்று பெருமை பேசுவதில் காரியமில்லை. தான் வாசிக்கும் விஷயத்தைச் செவ்வனே மனதில் பதியவைத்துக்கொண்டு, தக்கசமயத்தில் உபயோகிக்கும் திறம் பெற்ற படிப்பே சரியான படிப்பு.

இந்த ஆபத்தான சமயத்தில் தானு உதவிக்கு இல்லாமல் இப்படிக் கலகங்களும் கூச்சல்களும் செய்து கொள்கிறது—நான் எவ்வளவு தவித்துப் போயிருக்கிறேன், திசை கெட்டுத் தத்தளிக்கிறேன், என் நெஞ்சு படும் வாதையை உணர்ந்து அதற்கு அநுதாபப்படாமல் இந்த சமயம் கலகமும் சண்டையுமாக்குகிறீர்களே"—என்று நாம் ஒரு சிறு சொல் கேட்கத் துணிந்து விட்டாலோ, உடனே நமக்கு மேல் பேசி நம்மை எதிர்த்துக்கொண்டு பூரண விரோதிகள் போல் வேறு வீட்டுத் திண்ணையில் போய்க் குந்திக்கொண்டு விடுகிறார்கள். அல்லது வீட்டுக்கே வராமல் எங்கேயோ போய் உட்கார்ந்து விடுகிறார்கள். அந்த சமயத்தில் அவர்களையன்றி வேறு மனுஷாள் உதவி கிடைக்காததாகி அவர்களின் கொட்டுதல்களையெல்லாம் சகித்து இதுவும் தலைவிதி என்று மனது கசந்துபோய், வேறு திக்கில்லாமல் அவர்களையே மறுபடியும் துணைக்குத் தேடி யழைக்க வேண்டியதாகிறது. அவர்களும் அந்த சமயத்தில் மிக்க முடுக்கும் 'ராங்கி'யும் உள்ளவர்களாக வெகு விரைப்பில் இருப்பவர்களாகிறார்கள். காலால் நடந்து திரிந்த அவர்களை வண்டி வாகனங்களில் ஏற்றிக் கொண்டு அப்பா ஐயா என்று தாங்கவேண்டியதா யிருக்கிறது. இப்படி அவர்களைத் தாங்கிக்கொண்டு நமது காரியார்த்தமாய்ச் சென்ற இடத்திலும் கூட அங்கும் கலகமும், பட்டுக்கொள்ளாது பேசுதலும், எந்த சங்கதிக்கும் எதிர்த்துச் சொல்வதுமாய் அநுசரணையற்று நமது மனத்தை எவ்வளவுக்குக் கொட்டி நோக வைக்க வேண்டுமோ அவ்வளவுக்கும் நொந்துபடச் செய்து விடுகிறார்கள். நாம் கண்ணீர்விட்டு அழுதால் அதற்கு அவர்கள் சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டு, நாம் அப்படி அழுவது கேவலமென்று நமக்குப் புத்தி சொல்ல வருகிறார்கள். சீ! இது முட்டாள்தனம் என்கிறார்கள். எவ்வளவு கொதிப்பு கொதித்து எவ்வளவு வயிறு வெந்து கண்ணில் ஜலம் தோன்ற வேண்டுமென்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கிறதேயில்லை. அந்த சமயத்தில் பழங் காலத்துச் சங்கதிகளை எடுத்துக்கொண்டு வியவகாரம் பேசக் குந்திவிடுகிறார்கள்! இவர்களை உதவிக்கு அழைத்து அவர்களுக்கு அதிகாரம் தந்து நமக்குத் துணையிருக்கும்படி சொல்லிய நமது புத்திக்கு நம்மையே நொந்து கொண்டு, இவர்கள் அம்மட்டோடு விலகினால் போதுமென்று பெருமூச்சு விட வேண்டியதாய் விடுகிறது. நாமும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து நம்மால் தாளக்கூடாமல் அவர்களை உதவிக்கு அழைத்தது போதுமென்று ஒதுங்கிக் கொண்டு நமது ஆபத்தின்பாட்டை நாமே யனுபவித்துக் கொள்ளத் துணிந்து விடுகிறோம். இவ்விதமான தன்மையுள்ளவர்களையே முக்கியமாகக் கொண்டு "**தேளுக்கு மணியம் கொடுத்தால் நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டும்**" என்று இந்தப் பழமொழி குறிப்பிடுகிறது. அற்பனைத் துணைக்கு அழைத்து அவனிடம் நமது அதிகாரத்தைக் கொடுத்தால், அனர்த்தந் தான். அந்த சமயம் தான் எவ்வளவுக்கு ஹிம்ஸிக்க—பிடுங்க—இன்னும் என்னென்ன வெல்லாம் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து தீர்ப்பான். அல்பர்களுடைய அல்ப ஸ்வபாவம் என்றும் மாறாதென்பது கருத்து.

அவனுடைய பரிதாப வார்த்தையும், கெஞ்சுதல் முகமும் உனக்கு வேடிக்கையும் சிரிப்புமாகவா இருக்கிறது? உன் நிலையும் அவன்போல் குப்புற விழாதென்று நினைத்துக்கொண்டாயா? உலகில் எந்தவாழ்வும் நிடிப்பதில்லையப்பா. ஏன் அப்படிக் கேவலப்படுத்துகிறாய்? வேண்டாமப்பா.

117. முள்ளின் மேல் சீலையைப் போட்டால் மெல்ல மெல்ல வாங்க வேண்டும்.

ஆ! இது வெகு உண்மையிலும் உண்மை. பட்டறிந்தோரைக் கேட்டுப் பார்த்தால் ஒவ்வொருவரும் ஒரு மூட்டைக் கதையையும் அநுபவத்தையும் தூக்கி வந்து ஒப்புவிக்கக் கூடி விடுவார்கள். முதன் முதலிலேயே முள்ளின் மேல் சீலையைப் போடக்கூடாது, போட்டதே சுத்த மௌடீகம். ஏதோ தெரியாத்தன்மையாலோ, நம்பிய நம்பிக்கைப் புத்தியாலோ, அல்லது முன் பின் யோசிக்காமையாலோ, மனுஷ்யாளுடைய குணங்களை முற்றுந் தெரிந்து கொள்ளாத பேதமையாலோ, அவசரப்பட்டுப் பிசகிப் போட்டு விட்டால், அப்புறம் அதை ஜாக்கிரதையாக மெதுவாக அல்லவோ எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படியல்லாமல் வேகமாய் எடுத்தால் சீலை கிழிந்து போய்விடும். (அதாவது அவர்களிடம் அகப்பட்டுக் கொண்ட நமது காரியங்கள் சின்ன பின்னமாய்ப் பாழ்பட்டுப் போகக்கூடும்.) முள்ளின் மேல் சீலையைப் போடுவது எப்படிக் கூடாதோ, அதுபோல் அற்பர்களின் சகவாசமும் கூடாது. ஏதோ காரணத்தால் அவர்களின் குணம் தெரியாமல் பழகும்படி நேரிட்டு விட்டது. பிறகு என்ன செய்கிறதென்பதில் தான் அமைதியான யோசனைப் புத்தியும் சகிப்புத்தன்மையும் வேண்டியிருக்கிறது. புத்திசாலியாயுள்ளவன் இந்த தருணத்தில் செய்ய வேண்டியதென்ன? தான் சகவாசம் செய்தவன் அற்பன் என்று எப்பொழுது தெரிந்து கொண்டானோ, அது முதல் மெல்ல மெல்ல அவனை விட்டு விலகிவிட வழியைப் பார்க்க வேண்டும். இந்த முக்கிய கருத்தையே இந்தப் பழமொழி எடுத்துக் காட்டுகிறது. இதே பழமொழியை வேறுவிதமாயும் சொல்லுவார்கள்.

118. முள்ளின் மேல் சீலையைப் போட்டால் வாங்குகிற வழியாயல்லவோ வாங்க வேண்டும்.

என்று மேற்கண்ட பழமொழியை இன்னும் அழுத்தமாய்ச் சொல்லிக் குறிப்பிடுவார்கள். தெரியாத்தனமாய் அற்ப சகவாசம் செய்து விட்டால், அதை விலக்குகிற வழியாயல்லவோ விலக்க வேண்டுமென்று புத்தி சொல்லும் தோரணையில் இப்பழமொழியின் உபயோகிப்பு இருக்கிறது. இந்தப் பழமொழியின் சார்பான உலக அநுபவங்களையும் புத்திமதிகளையும் "விகடப் பிரதாபனில்" "முள்ளின் மேல் பட்ட சீலை" என்பதில் கண்டு கொள்க.

119. எச்சிற்கலைக்கு மண்ணுங்கட்டி ஆதாரம்.

அற்பர்களுடைய அற்பத்தன்மைக்கு ஏற்றபடி ஏதாவது ஒரு சிறிய ஆதரவை அவர்கள் அடைந்துகொண்டு அந்தமட்டில் அந்த அற்பர்கள் தங்களின் அற்ப குணத்துக்குத் தகுந்தபடி திருப்திபட்டுப் போகிறார்கள். பெரிய புத்தியே அவர்களுக்கு உண்டாவதில்லை. அற்ப புத்தியே படைத்து எந்த நாளும் அற்பத்தன்மையிலேயே கிடந்து அழுகிப் போகிறார்கள். நாம் புசித்து விட்டு எழுந்த எச்சிலை வெகு அற்பமுள்ளது. அதைவிட ஒரு மண்

முகங்கொடுத்துப் பேசாமல் வெகு விரைப்பாக நின்றால் உன்னைப் பெரிய மனிதனென்று நினைப்பார்களென்பது உன் எண்ணமா? அலக்ஷியத்துக்கு அலக்ஷியம்தான் நீ காணப்போகிறாய்.

ணாங்கட்டி இன்னும் எதற்கும் உதவாத அற்பமுள்ளது. எவ்வளவோ இழிவுமுள்ளது. ஆயினும், அந்த எச்சிலையைக் காற்றில் பறந்து மற்றோரிடம் போய் விழுந்து அசுசிப்படுத்தாமல் தடுக்க அதன் மேல் ஒரு மண்ணாங்கட்டியைப் போட, அதன் பளுவில்—அதன் ஆதாரவில் அந்த எச்சிலை பறந்து அலையாமல் திருப்திபட்டு இருந்த இடத்திலேயே கிடந்து விடுகிறது. இவ்விதம் அந்த எச்சிலைக்கு மண்ணாங்கட்டி ஒரு ஆதாரவாய் அதில் திருப்தியடைந்து விடும் தன்மையைப் போல, நல்ல குடும்பத்தில் பிறந்தும் அற்பபுத்தி படைத்தவர்கள் பெரிய புத்தியில்லாமல் அற்பத்தில் திருப்திபட்டுப் போய்விடுகிறார்கள். நாலு மனிதர்களைப் போல் விவாகம் செய்துகொண்டு ஒரு குடும்பஸ்தனாய் மனைவியும் மக்களுமாக வாழ வேண்டுமென்கிற பெரிய புத்திகொண்டு தன் மனத்தையடக்கி யாண்டு பொறுமைப்பட்டுக் காத்திருந்து, அப்படி ஒரு விவாகம் செய்துகொண்டு கௌரவமான வழியிற் போகாமல் தான்றோன்றித் தனமாய்க் குடும்பத்தை விட்டுப் பிரிந்து ஒரு தூர்த்த ஸ்திரீயை உபநாயகியாய்க் கொண்டு அவ்வளவுடன் திருப்தியடைந்து விடுகிறார்கள். இது மானங்கெட்ட சுபோதி வாழ்வு என்பது அந்த அற்பர்களின் மனதில் படுவதேயில்லை. நாலு குடும்பங்களுக்கு நடுவில் தான் இவ்விதம் கேடுகெட்ட தன்மையில் ஒரு முறை கெட்ட தொடர்புடன் வாழ்வது எவ்வளவோ கேவலமென்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதுமில்லை. இந்த அற்பத்தன்மைக்கு ஏற்றபடி அவர்களின் புத்தியும் அற்ப புத்தியாய், ஒரு உத்தமனுடன் பழகி உறவாட யோக்கியதை யற்றதாய் இழிந்த தன்மை கொண்டதாய் ஆகிறது. எச்சிலை தனக்கு மண்ணாங்கட்டியை ஆதாரவாக நினைத்தது போல, இந்த அற்பர்களும் உபநாயகிகளையும், தாசி வேசிகளையும் தனக்குப் பெரிய துணையாக நம்பிக் கொண்டு அந்தக் கேவலச் சேற்றில் திருப்திபட்டுப் போகிறார்கள். இத்தகைய அற்பர்கள் ஒரு குடும்பஸ்தரின் வீட்டுக்கு வந்தால் அவர்களுக்கு என்ன மரியாதை செய்கிறதென்பதை,

120. மண்ணாங்கட்டி மாப்பிள்ளைக்கு எரிமுட்டைப் பணியாரம்.

என்ற இந்தப் பழமொழி வெகு அழகாய் விவரிக்கின்றது. அற்பர்களுக்கு ஏற்றபடி ஏதோ ஒரு அற்ப உபசரிப்பு போதுமென்றும், அதில் அவர்கள் திருப்தியடைந்து விடக்கூடுமென்றும் இந்தப் பழமொழி எடுத்துக் காட்டுகிறது. இங்கே மண்ணாங்கட்டி என்பது உபநாயகி, தாசி வேசி என்பதைக் குறிப்பிடுகிறது. அவர்களைக் கொண்டு பெரிய விவாகப் புத்தியில்லாமல் அந்த அற்பத்தில் திருப்தியுடன் பூரித்துக் கொண்டிருக்கும் மண்ணாங்கட்டியின் மாப்பிள்ளைகளாகிய இவர்களுக்கு, இவர்களின் யோக்கியதைக்குத் தகுந்த எரிமுட்டைக் கொத்த அற்ப பணியார உபசரிப்பே போதுமென்று இந்தப் பழமொழி குறிப்பிடுகிறது. அதாவது, அத்தகையோருடன் அதிகமான பேச்சு வார்த்தைகள் வைத்துக் கொள்ளாமல் தூர ஒதுங்கி நின்று, நமது வீட்டுக்கு அவர்கள் வந்ததற்கு "என்ன சுகமா?" என்று ஒரு வார்த்தை கேட்டு விட்டு அவ்வளவில் ஒதுங்கிக்கொண்டு நமது காரியத்தை நாம் பார்த்துக்கொண்டு போக வேண்டியது தான். அவர்களும் நம்மிடம் அதிகம்

தாசியும் தன் மகன் பலவீடு புகுந்து கெட்டலைவதைக் கண்டிக்கிறாள். ஆனால், தான் உலகத்தினரைக் கெடுப்பதுமட்டும் அவளுக்குக் குற்றமாகப் படுவதில்லை.

நெருங்கப்பட்டவர்களல்லவாதலால், நமது குணங்களுக்கு அவர்களின் குணங்கள் பொருந்தாவானதால், அன்றியும் நம்முடன் பேசிப் பதிலுக்குப் பதில் வார்த்தையாட அவ்வளவுக்கான புத்திசாமர்த்திய விவேக சாதுரியமற்றவர்களானதால் அத்துடன் அவர்கள் விலகிக்கொண்டு போய்விட, நாமும் மௌனமாய் விட, அவர்களும் வீட்டுப் பெண்களுடனும் மற்றவருடனும் உறவு பிடித்துப் பேசிக்கொண்டிருந்து விட்டு, வீட்டில் உள்ளதைப் புசித்துப் பொழுது போக்கி விட்டு, அப்பாற் போகும்போது நம்மிடம் பிரயாணம் சொல்லிக் கொள்ள நெருங்குகையில் நாமும் நமது தலையையாட்டிப் போய்வா என்று சொல்வதோடு நின்று கொள்ள, அவர்களும் புறப்பட்டுப் போய்விட, இவ்வளவான ஒரு நிலையில் நாம் அவர்களை வைத்து விலகிக்கொண்டால் தான் நமது மானமும் கௌரவமும் நமக்கு நிலைக்கக் கூடியதாயிருப்பதுடன், அவர்களுக்கும் அந்த எரிமுட்டைப் பணியார மரியாதை போதுமானதாகி, அதில் திருப்திபட்டுச் சென்று விடுவோருமாகிறார்கள் என்பது இப்பழமொழியின் உள்ளார்ந்த பொருளாகும்.

பின்னும் இவ்விதமே கணவன் என்ன செய்தும் திருப்தி கொள்ளாமல் ஒரு அற்பசங்கதிக்கும் சண்டை பிடிக்கிற பெண்களை அதை வீணில் வளர்த்துப் பெருக்காமல் அந்த அற்பத்தை அவர்களின் முகத்தில் விட்டெறிந்து திருப்தி செய்து விடுவதே நல்லதாகும். வெற்றிலைப்பாக்கு போடுவது ஒரு கெட்ட வழக்கமென்று நினைக்கிற ஒரு புத்திமானுக்குப் படித்தறியதா ஒரு கேடு கெட்ட கட்டை மனைவியாக வருகிறாள். அவள்—“எந்த வீட்டிலும் வெற்றிலைப்பாக்கு இருக்கும்; இந்த வீட்டில் தான் வெற்றிலை கிடையாது” என்று குத்திச் சொல்லும்போது, அந்த அதிகப்பிரசங்கியான கட்டை திருப்திபடும்படி அந்த வெற்றிலைப்பாக்கை வாங்கி வந்து அவள் முகத்தில் எறிந்துவிடுவதே மேல். அந்த அற்பத்தில் அவள் திருப்திபட்டுப் போவாள். அற்பர்களால் நமக்குத் தொல்லை நேராதிருக்க, அவர்கள் விரும்பிய அந்த அற்பத்தைச் செய்து வீசிவிட்டு அவ்வளவுடன் நாம் ஒதுங்கிக்கொள்ள வேண்டுமென்பதும் இப்பழமொழியின் மற்றொரு கருத்தாகும்.

(தொடரும்.)

> இன்பமும் சுயேச்சையுமான இரு ஆசைகளில் வசப்பட்டு, வாழ்நாள் முற்றிலும் அதற்காக அவன் உழைப்பதில், இன்பத்திற்குப் பதிலாகக் கலக்கத்தையும் கவலையையும் கலகத்தையுமே காண்கிறான். சுயேச்சைக்குப் பதிலாகப்பெரிய தத்தளிப்பையும் அளவுக்குமீறிய சுமையையுமே அவன் ஏற்க நேருகிறது. ஆயினும் பின்னடையக் கூடாது. எதிர்காலத்தில் நமக்கு நன்மை நேரவிருக்கிறது.

பெண்களைப் படித்தவர்களாக்க வேண்டுமாயின், குடும்ப வாழ்க்கையின் இனிய குணங்களெல்லாம் அந்தப் படிப்புடன் கூடி வரப்பெற்று, பெரியோர்களின் திருத்தங்களால் அழகு நிரம்பியதாகப் பரிமளிக்க வேண்டும்.



ஹாஸ்ய சஞ்சீவினி



கொழுத்த சரீரம்:---

அவன்:—அந்த தடியனின் கொழுத்த சரீரம் எனக்கு இருந்தால் என் குடும்பத்துக்கு இன்னும் எவ்வளவோ நன்ருக உழைப்பேன்.

இவன்:—அப்போது நீயும் ஒரு தடியனுய் விடுவாய். அவன் சோம்பல் உன்னையும் எட்டிப்பார்க்கும்! உன் குடும்பமும் நடுவீதிக்கு வந்துவிடும்!

* *
*

மோசத்துக்கு மோசம்:—

கிறிஸ்தவரான ஹிந்து:—கிறிஸ்துவ மதத்தில் சேருவதற்கு முன் எவ்வளவோ உபசரித்து அன்பு காட்டுகிறீர்கள். சேர்ந்த பின்போ வெகு அலக்ஷியமாய் நடத்துகிறீர்கள். தங்கள் குமார்த்தியின் மீதுள்ள காதலால், அவளை எனக்கு மணமுடிப்பதாக நீங்கள் சொன்னதை நம்பி, நான் என் பெற்ருேர்களையும் பந்துக்களையும் விட்டு விட்டுக் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்தேன். இப்பொழுதோ விவாகப் பிரஸ்தாபமே காணேம். உங்கள் பெண்ணையும் லண்டனுக்கு அனுப்பி விட்டீர்களே? இது மோசமல்லவா?

பாதிரீ:—அதெல்லாம் பழய கதை. அதை மறந்துவிடு. இப்போது நீ ஒரு திக்கற்ற மனிதன். தேவ ஊழியத்தைச் செய்துகொண்டு கர்த்தருக்குள் விஸ்வாசமாயிரு.

ஹிந்து:—திக்கற்ற மனிதன் நானல்ல. நீர் செய்த மோசத்திற்கு மோசமாக நாளையதினம் பிராயச்சித்தம் செய்துகொண்டு மறுபடியும் ஹிந்துவாய் விடப் போகிறேன். என் பெற்ருேர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டார்கள். எனக்குச் சொன்ன தேவ ஊழியத்தை நீர் செய்துகொண்டு இப்படி ஏமாற்றும் புத்தியில்லாமல் கர்த்தருக்குள் விஸ்வாசமாயிரும்.

* *
*

மானேஜரின் பேச்சு:—

அச்சாபீஸ் மானேஜர்:—உங்கள் வேலையில் லாபமுமில்லை, நஷ்டமுமில்லை. தாக்ஷண்யத்திற்காகவே அந்த வேலையைச் செய்து கொடுப்பது.

அச்சிட வந்தவர்:—போகட்டும், நாலணு குறைத்துக் கொள்ளுங்கள்.

மானேஜர்:—அந்த நாலணுதானே லாபம்? அதை எப்படி விட்டுவிடுகிறது?

அச்சிட வந்தவர்:—முதலில் இந்த வேலையில் ஒரு லாபமுமே இல்லையென்றீர்களே?

T. S. குழந்தைவேல் முதலியார்.

ரயிலில் டிக்கட்டு கையில் இருக்கும்போது டிக்கட் பரிசோதகர் வருவதில்லை. டிக்கட் இல்லாதகாலத்தில் டிக்கட்டைச் கேட்கத் திகைக்க நேர்கிறதாம்.


சாஸ்திர நுட்பங்கள்.

(547-ம் பக்கத் தொடர்ச்சி.)

140. கார்பானிக் ஆஸிட் (Carbonic Acid) என்பது சுவாசம் கொதிப்பு என்பவைகளிலும், பிராணி தாவரங்கள் பதனழிகையிலும் உண்டாகும்.

141. ஐநுசையனிக்கமலம் (Hydrocyanic Acid) என்பது பேர் போன நஞ்சு. இதில் ஒரு துளி பருத்த நாயை உடனே கொல்லும்.

142. அபாரவைருதசாபனேற்று (Light Carburetted Hydrogen) என்ற வாயு இயற்கையில் அதிகமாய் உண்டு. இது சுரங்கங்களிலுள்ள வெடிப்புகளால் கிளம்பி பரமாணுவோடு கலந்து நெருப்பு கண்டவுடன் பெலனாய் வெடிக்கும். மேலும் இது



தண்ணீருக்குள்ளே கிடந்து உக்கி அழுகிற மரங்கள், சருகுகளிலும் எப்போதும் கிளம்பும். இப்படி உண்டாகும் வாயுவை எடுப்பதற்கு கிணறு குளங்களின் அடியிலுள்ள சேற்றைக் கலக்கிக் குமிழிகளாகக் கிளம்பும் வாயுவை மேலே யிருக்கும் படத்தில் காட்டியுள்ளதுபோல் கவிழ்ந்த சீசாவில் சேர்க்கலாம்.

143. சூடும் வெளிச்சமும் உண்டாகத்தக்கதாய் பிராணவாயு ஓர் பொருளின் தூள்களோடு சுறுக்கில் கூடுஞ் செயலே தகனமாம்.

144. பொருள்கள் எரியும்பொழுது உண்டாகும் வெளிச்சத்திற்கு சூடே காரணம்.

145. செயற்கையான வெளிச்சத்துக்கு வாடிக்கையாய் வழங்கும் பொருள்கள் கரி, எண்ணெய், நிணம் முதலியவைகளே.

146. திரியின் சுவாலைக்கும் தீபவாயுவின் சுவாலைக்கும் வித்தியாஸமில்லை. ஆகிலும், திரியின் சுவாலையில் வாயுவானது கொளுத்திய அதே க்ஷணத்திலும் கொளுத்திய ஒரே இடத்திலும் உண்டாகி எரியும். அந்த வாயுவைப் பிறப்பிக்கும் சூடே அதைக் கொளுத்துகிறது. தீபவாயுச் சுவாலையின் வாயுவோ சூட்டினால் ஓர் இடத்தில் உண்டாக, அது குழாய் வழியாய் தூரத்திற்குச் சென்று குறிப்பிட்ட வேறிடத்தில் கொளுத்திக் கொண்டு எரியும்.

147. மெழுகுத்திரி என்பது புகையாமல் எரியக்கூடிய உருகின மெழுகை அல்லது கொழுப்பைக் கொண்டு வெளிச்சத்துக்கு உதவியாய் செய்த ஓர் உபாயம். மெழுகு கொழுப்புக்கட்டியைத் திரியில்லாமல் எரிக்கலாம். ஆகிலும் கட்டியில் நெருப்புப் பற்று முன் அது உருகிப் போம். கொளுத்தப்பட்டு எரிந்தாலும் வெளிச்சத்துக்கு உதவாதபடி அதிகமாய்ப் புகைக்கும். மெழுகுக் கம்பியின் மையத்திலேயுள்ள திரியின் நுனியைக் கொளுத்த, அதற்கடுத்த மெழுகின் ஓர் பங்கு நீராக உருகி

நூல்களின் வழியாய் சுவாலைக்கு ஏறி எரியும்.

148. அலுமினியம் என்றலோகம் வோலர் என்ற ஜெர்மனிய ரஸாயன சாஸ்திரியால் 1827-ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இது கண்ணாடியிலும் மெத்த லேசு. வெள்ளி உருகுவதிலும் குறைவான சூட்டில் இது உருகும்.

149. கண்ணாடி என்பது பதாசி, சோடம், சுண்ணம், மக்னீசி, அலுமினி, ஈயம் என்பவற்றின் பகுதிகளில் சிலதைக் கலந்து கடுமையான சூட்டில் நெடுநேரம் உருக்குவதினால் பிறக்கும் கலவைப் பொருளாகும். செய்யப்போகிற கண்ணாடியின் வகைக்குத் தக்கதாய் இக்கூறுகளில் வேண்டியவைகளை ஏற்ற விதமாகச் சேர்ப்பார்கள்.

150. முற்காலத்தில் தீத்தட்டிக் கல்லை பொடி செய்து நேர்த்தியான ஓர்வகைக் கண்ணாடி செய்து வந்தனர்.

151. உருக்கிய தெளிந்த கண்ணாடியில் தகரத்தின் சத்தைச் சேர்த்தால் இனமேல் எனப்படுகிற உருவொளியற்ற துகில்வெள்ளையான கண்ணாடி உண்டாகும். சில கடிகாரங்களிலுள்ள முகப்பின் வெள்ளை இதுவே.

துஷ்டர்களா யுள்ளோர் பந்துக்களாயினும் அவர்களுடைய நேசம் விரும்பத்தக்கதல்ல. வீட்டில் வாழும் பாம்பே உயிரை வாட்டும். காட்டில் விளையும் பச்சிலையே வியாதியைப் போக்கும். கூடவிருக்கும் பல்லே நாக்கைக் கடிக்கும். தூர இருக்கும் சர்க்கரையே ருசியைக் கொடுக்கும். ஸமீபத்திலுள்ள கையே கண்ணைக் குத்தும். தொலைவிலிருக்கும் ரோஜா புஷ்பமே அதற்கு இனிமையை ஊட்டும். எனவே அருகிலிருப்பதால்உறவினராகா.

152. நிகல் (Nickle) என்பது கம்பியாக நீட்டக் கூடியதும், இரும்பிலும் சுருக்காய் உருக்கக் கூடியதுமான நல்ல மினுக்கமுள்ள வெள்ளை லோகம்.

153. நிகலின் உப்புகள் கட்டியாயாவது கரைந்ததாயாவது இருந்தாலும் நேர்த்தியான பச்சைநிற முள்ளன. இது ஜெர்மன் வெள்ளி என்ற லோகக் கலவை செய்வதில் அதிகமாய்ச் செலவழியும். இந்தக் கலவையானது செம்பு 51-பங்கும், துத்தம் 30.6-பங்கும், நிகல் 18.4-பங்கும் சேர்ந்துண்டாகும். நிகல் சேர்வதால் அழுத்தமாக்கும்பொழுது அது வெள்ளிபோல் மினுங்கும்.

(தொடரும்.)

ஒருவனுக்குச் செல்வமும் சவுக்கியமும் கொடுக்கப்படுதல் எதற்காகவென்று எண்ணுகிறாய்? தன் ஜீவனத்துக்காகவென்று உழைத்துத்தீர வேண்டிய அவசியமில்லாதபோது தன் மனத்தையும் புத்தியையும் பரோபகாரமான விஷயங்களில் செலுத்துவானென்னும் கருத்தினால்தானே? அதை மறந்து பலருக்கும் தீங்கிழைத்துத் திரியும் உன்னை என்னென்று கூற?



ஞான ஒளி!

[என்னையே நான் மறந்து நின்ற ஓர் பொழுதினில் என் அகமெல்லாம் பூரித்திட ஆனந்த வெள்ளமாய் ஒரு ஜோதியினைக் கண்டேன். கலந்தேன். உடனே அது மறைந்துவிடவும், வாடித் தவித்து இதனை வரைந்தேன்.]

1

ஞான வொளியே என்னை நான் மறக்க வைத்தகன்று
போன வொளியே நின்றபோத வொளியே நிகரின்
மோன வொளியே பரத்தின் முத்திநெறி யுய்க்க நிமிர்
வான வொளியே நின்னால் வாடுமெனைக் கண்டிலையோ ?

2

இங்கிருப் பாயங் கிருப்பாயெங்கு மிருப்பா யென்றே
யிங்கு மங்கு மெங்குமலைந் * தெய்த்த தன்றிக் கண்டிலனே
செங்கதிர் செய்சே யொளியேதிங்க ளொளியே மாயக்
‡ கங்குலை யகற்ற வந்தகண்ணொளியே ! மின்னொளியே !

3

தூய சுடரே ஞானச்சோதி மயமே வலபம்
ஆய சுடரே யெனதுள்ளன்பின் சுடரே யென்றன்
நேய சுடரே வந்துநேர் கலந்து விட்டகல் உ
பாய சுடரே யுன்னைப் பார்ப்பதினி யெந்நாளோ !

4

என்னொளியே பொன்னொளியே என்னிரண்டுகண்ணோதி
மின்னொளியே ஓர் கணமும்விட்டகல மாட்டுவேனோ? [ரே
தன்னிக ரில்லா ஞான தத்துவத்தைப் போதிக்க
மன்னு குரு வாகி மறைந்த பரஞ்சுடரே !

---

* எய்த்தல்=இளைப்பன்றுதல், ஒப்பிடுதல். ‡ கங்குல்=இருள்.

வேறு விருத்தம்.

5

நிறைந்த ஜோதி ஞானவொளி
நீயே யெனக் கண்டே னொளியே
பறந்தா யிமைப்பி லென்னை மயக்கிப்
பரந்த வொளியே பகலொளியே
பிறந்த வொளியே யுன்னோடு
பேத மின்றி யான் கலக்க
வுரைந்த வொளியே என்னைவிட்
டுடனே மறையு முயிரொளியே!

6

கண்ணை மூடித் திறப்பதற்குட்
காட்சி தந்த கதிரொளியே
எண்ணுந் ததிய மாவாசை
யிருட்டின் மதியமெனப் படர்ந்து
விண்ணை யளக்கும் விளக்கொளியே
* விபுத ருளத்தில் விளங்கொளியே
வண்ண வொளியே யுனைப்பிரிய
வசமோ வாவா வளரொளியே!

7

வாவாவென வென்றனை யழைத்து
மடியி லிருத்தி மகிழொளியே
காவா யுனது ஜோதியுடன்
கலப்ப தன்றி யூனுடலின்
† மேவா மனத்த னுனைக்கண்டு
வெறுத்தே னுலகை; நாமொன்றாய்
‡ மூவா முதல்வனடி நிழலின்
முயங்கி யிருப்போம் முன்னொளியே!

---

* விபுதர்=அறிஞர், வானோர். † மேவாமை=பொருந்தாமை.
‡ மூவா=கெடாத.

சிறுமணித்திரள்

502. கதிரவன் மேற்கு திசையிற் றோன்றினாலும், பாறைகள் தண்ணீரில் மிதந்தாலும், தீ குளிர்ச்சியையடைந்தாலும், பாதாள உலகம் எல்லா உலகங்கட்கும் மேல்பாகத்திற்குச் சென்றாலும், பிராணிகளைக் கொன்று புண்ணியத்தை அடையமுடியாது.

503. பிராணிகளைக் கொன்று அதினின்றும் புண்யத்தைச் சேகரிக்க விரும்புகிறவன், தீயின் மத்தியத்தில் தாமரை மலர்களைத் தேடுபவனாகவும், சூரியன் மறைந்த பின்பு பகலைத்தேடுபவனாகவும், பாம்பின்வாயில் அமிருதத்தைத் தேடுபவனாகவும், குயுக்திவாதம் செய்பவரிடம் புகழை அடைய விரும்புவனாகவும், காலகூடவிஷத்தைப் புசித்து வாழவிரும்புகிறவனாகவும், அஜீர்ணமுடைய தேகத்தில் சுகத்தை விரும்புகிறவனாகவும் கருதப்படுவான்.

504. எல்லாப் பிராணிகளிடமும் தயையுள்ள மனதை யுடையவன்தான், நீண்ட ஆயுளையும், உயர்ந்த வம்சத்தில் பிறவியையும், ஏராளமான தனத்தையும், நல்ல தேகவன்மையையும், வியாதியின்மையையும், நல்ல புகழையும் அடையக்கூடும்.

505. எந்த அஸத்தியமானது காட்டுத்தீ காட்டை அழிப்பதுபோல் புகழையே அழித்துவிடுகிறதோ, எந்த அஸத்தியமானது ஜலம் மரங்களை வளர்ப்பதுபோல் துக்கங்களை விருத்தியடையச் செய்கிறதோ, எந்த அஸத்தியம் இருப்பின், தவம் மனதின் அடக்கம் முதலிய குணங்கள் தோன்றுவோ, அந்த அஸத்தியத்தை எந்தப் புத்தியுள்ள மானிடனும் ஆதரிக்கமாட்டான்.

506. எவன் உண்மையையே பேசுகிறானோ, அவனுக்குத் தீ ஜலமாகும், கடல் தரையாகும், பகைவர் நண்பராவார், தேவர்களும் தூதர்களாவர், காடு நகரமாகும், மலையும் வீடாகும், பாம்பு மாலையாகும், சிங்கமும் ஓர் மான்போலாகும், கடுமையான ஆயுதங்கள் ஆம்பல் மலர்களாகும், விஷம் அமிருதமாகும், எக்காரியமும் அவனுக்கு நன்மையாகவே முடியும்.

507. எவன் பிறர் கொடுக்காத பொருளைக் கையினால் தொடானோ, அவனை லக்ஷ்மிதேவி விரும்புகிறாள். அவனைப் புகழ் அடைகிறது. அவனை விட்டுச் சம்சாரதுக்கம் நீங்குகிறது. அவன் என்றும் மேன்மையையே அடைவான், கேட்டை ஒருபோதும் அடையான்.

508. எவன் நல்லொழுக்கத்தை ஆதரியானோ, அவன் தன் அபகீர்த்தியை உலகம் முழுவதும் பரவச் செய்கிறான். அவன் தன் வம்சத்தைக் கருநிற மாக்குகிறான். நற்குணங்களாகிய தோட்டத்தில் காட்டுத் தீயை வளரச் செய்கிறான். எல்லாக் கேடுகளையும் வரவேற்கிறான். பரலோகத்தின் வாயிற்கதவைத் தாழ்ப்பாள் போட்டுத் திறக்கமுடியாமல் செய்கி

குமாரர்கள் இருவரும் சண்டையிட்டுக்கொள்வதைக் காணத் தாயின் மனம் படும் வாதனை மிகவும் பெரிது. அதைச் சண்டை போடுவோர் உணருவதேது? இருவரும் ஒரு வயிற்றில் உருவானவரே.

ருன். எல்லோருடைய இகழ்ச்சியை யும் பெறுகிறுன்.

509. எவன் நல்லொழுக்கத்தை ஆதரிக்கிருனே, அவனுக்குப் புலிமுதலிய மிருகங்கள் நண்பர்போல் ஆகின்றன. நெருப்பும் நீரும் அவனிடம் தம் குணங்களை விட்டுவிடுகின்றன. மங்களங்கள் உண்டாகின்றன. கேடுகள் நீங்குகின்றன. புகழ் உண்டாகிறது. தர்மம் மேலோங்குகிறது. தேவர்கள் எல்லோரும் அவனுக்குப் பிரத்தியக்ஷமாகின்றனர். ஸ்வர்க்க லோகத்தில் ஏற்படும் மன நிம்மதி இவ்வுலகிலேயே அவனுக்கு உண்டாகிறது.

510. தானம் வாங்குவது ஓர் முறட்டாற்றுப் பெருக்காகும். அது மனதைக் கலக்குகிறது. தர்மம் என்ற மரத்தை வேருடன் பிடுங்குகிறது. நியாயம், தயை, பொறுமை, என்ற தாமரைக் குளங்களை யழிக்கிறது. பேரவா என்ற கடலை விருத்திபெறச் செய்கிறது. தன்மதிப்பு என்ற கரைகளை அழித்துவிடுகிறது. நிம்மதி என்ற ஹம்ஸபறவைகளைத் துரத்திவிடுகிறது.

511. ஆசையுள்ள மனிதன், எவ்வளவு பணக் குவியல்கள் தன்னகத்தில் இருந்தாலும், விறகுகள் போடப் போட நெருப்புத் திருப்தியடையாமல் இருப்பதுபோலும், எவ்வளவு ஆறுகள் வந்து சேரினும் கடல் திருப்தியடையாதது போலும் "போதும்" என்று நினைப்பதில்லை. "இவ்வளவு பணக் குவியகல்களைச் சேர்த்தோமே, இவை நம்முடன் கூட மறுபிறப்பில் பின்தொடருமா, அங்கு மறுமுறையும் நாம் புதிதாகத்தானே பிறரிடம் சென்று கையை நீட்டவேண்டும். ஆதலால் பாபங்களைச் செய்யாதிருப்போம்" என்று அவன் ஒரு சமயமும் எண்ணுவதில்லை.

512. கோபம் மனிதரின் அறிவைப் போக்குவதில் கள்ளாக வுளது. பிறரைப் பயமுறச் செய்வதில் பாம்பின் தோழமையைப்பெற்றிருக்கிறது. உடலைச் சூடாக்குவதில் அக்கிக்குத் தமையஞ யிருக்கிறது. பகுத்தறிவை நீக்குவதில் எட்டிமாத்தின் குணத்தைப் பெற்றிருக்கிறது. இந்தக் கோபத்தை மேன்மைபெற விரும்புகிறவர்கள் வெல்வது அவசியமாகும்.

513. மனதில் தாபத்தை உண்டாக்கக்கூடியதும், பெரியோரிடம் வணக்கமில்லாமலிருக்கும்படி போதிக்க வல்லமை பெற்றதும், நட்பை அழிக்கக்கூடியதும், வாயினல் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லச்செய்யும் திறமை பெற்றதும், கலகத்தை உண்டுபண்ணுவதில் கியாதிபெற்றதும், புகழை ஒரே நிமிஷத்தில் அழிவுறச் செய்யக்கூடியதும், நற்புத்தியைக் கெடுத்து அறியாமையைக் கொடுத்து புண்ணியங்களை அழித்துக் கேட்டையே முடிவில் பலமாக அளிக்கக்கூடியதுமான இக்கோபத்தைப் புத்தியுள்ள மனிதன் ஒருபோதும் விரும்பான்.

514. எக்கோபம், காட்டுத்தீ போல் தர்மம் என்ற மாத்தை எரிக்கிறதோ, காட்டு யானைபோல நீதிமுறை என்ற கொடியைப் பெயர்த்துவிடுகிறதோ, ராகு சந்திரகலையை விழுங்குவதுபோல் மனிதரின்புகழை விழுங்குகிறதோ, காற்று மேகத்தைக் கலைப்பதுபோல் மனிதனின் நன்மையைக் கலைக்கிறதோ, கோடைகாலம் நீர் வேட்கையை அதிகப்படுத்துவது போல், ஆபத்துகளை வளர்க்கிறதோ,

துஷ்டனிடம் சிக்கிக்கொண்டு கெஞ்சிக் கூத்தாடித் தப்பி வந்துவிடுபவன் விவேகி. எதிர்த்துப் பேசி ஆபத்தை வருவித்துக்கொள்பவனே சேற்றில் கல் எறிபவன் போலாவான்.

அக்கோபத்தை விட்டொழிக்கும் வழியைத் தேடவேண்டும்.

515. ஆசைக்குட்பட்டு மனிதர்கள் ஒருவராலும் நுழையமுடியாத காடுகளில் வாழ்கின்றனர். தங்களை விட்டுப் பிறரது தேசங்களை நாடுகின்றனர். பயத்தைத்தரும் கடலையும் கடக்கின்றனர். வெயிலையும் மழையையும் கவனியாது உழுது பயிர் செய்கின்றனர். லோபியான யஜமானரைச் சேவிக்கின்றனர். இன்னும் உயிரையும் கருதாது பல அரிய காரியங்களையும் செய்கின்றனர். என்றைக்கு தான் இந்த ஆசைப்பேய் ஒழியுமோ?

மிக்க களைப்பு, அதிக ஆயாஸம், வெகுவான மனச்சோர்வு, பெரிய தத்தளிப்பு, என் செய்வோமென்ற கவலை, வயிற்றுக்குள்ளோ பசி, நல்ல ருசியாய் சாப்பிட நினைவு, யார் அவனைக் கவனிக்கிறார்கள்? வீட்டுக்கான ஸப்ளைகளைச் சரியாகச் செய்தானா என்பதை மட்டும் வீட்டார் கவனித்துக் கொண்டு அவனைப்பற்றிஎண்ணாமலே போய்விடுகிறார்கள். குடும்பத்திற்கு முக்கியஸ்தனாகிய வீட்டுக்காரனைப் பராமரிக்கிற பவிஷு இவ்வளவே.

516. தேவர்கள் ஒன்றிலும் அவாவைக் காட்டாமல் கடலைக் கடைந்தனர். அவர்களிடம் கல்பகவிருக்ஷம் சென்றது. அவர்கள் அதனால் சந்தோஷமும், வருத்தமுமில்லாமல் மறுபடியும் கடைந்தனர். காமதேனு அவர்களையே சார்ந்தது. சிந்தாமணி ரத்நமும் அவர்களிடமே சென்றது. நிதியையும் முடிவில் அமிருதத்தையும் அவர்களே அடைந்தனர். அசுரர்களோ ஆசைப்படப்பட ஒன்றையும் அடையாது திரும்பினர். பேராவாவுள்ளவரையில் ஒன்றையும் அடையமுடியாது.

டி. ஆர். ராமநாத சாஸ்திரி, சிரோமணி.

ஊராரின் தூற்றல்.

ஸதா விவகார புத்தியும், ஊரைக்கெடுத்துத் தானே வாழ என்னும் சிந்தையும், கடைசியில் ஓட்டைக் கொடுத்து விட, ஊராரும் தூற்றும்படியாக, மானங்கெட்ட வாழ்வில் நொந்துபட நேர்கிறது. நல்வழியில் நின்று கெட்டிருப்பின் அதற்கு ஊராரின் பச்சாத்தாபம் உண்டு. கேவலப்படுவதும், அடிமைப்படுவதும், நாசத்திற்குள்ளாவதும் அவரவர் கையில், அவரவர் செய்துகொள்ளும் வினையில் உள்ளன. ஊரார் தூற்றுகின்றனரெனில் அதற்குக் காரணங்களை உண்டாக்கிக்கொண்டது யார்? கெடுதற்கே கேடு நினைப்பது.



1. **தற்பெருமையோ?**—தம்மைக் காண வந்திருப்பவர் ஒரு புதிய மனிதரா யிருந்தால் அவர் வந்திருப்பதை அறிந்திருந்தும் அறியாதவர்போலக் கவனியாமல் காக்க வைத்திருப்பது சிலரது வழக்கமா யிருக்கிறது. வந்தவர் என்ன அவசரத்தைப்பற்றி வந்தாரோவென இவர்கள் நினைப்பதில்லை. இதனோடு வந்தவருக்குப் பசிவேளையா யிருந்தால் அவர் படாதபாடு பட்டு வீடு திரும்ப வேண்டியதாகிறது. மற்றவர்கள் தமக்குச் சமானமில்லாதவர்களென்று எண்ணிக்கொண்டு இவர்கள் இங்ஙனம் மதியாமலிருக்கின்றனர் போலும்.

2. **பிரயாணத் தடை:**—வீட்டுக்கு வந்த விருந்தினர் மறுநாள் காலை சூரியோதயத்திற்கு முன்பே ரயிலுக்குப் புறப்படுவதாகச் சொல்ல வீட்டுத் தலைவனும் சம்மதித்திருந்து அடுத்த நாள் காலையிலோ நேரத்தோடு படுக்கையை விட்டெழாமல் வழக்கத்தை விடச் சற்று அதிக நேரம் வரையும் தூங்கியிருந்து விடுகிறான். இதனால் விருந்தினர் அவனை எழுப்பிச் சொல்லிக்கொண்டு போவதற்கு முடியாமல் தத்தளிக்கின்றனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மனைவியுடன் ஏகாந்தமாய்ச் சயனித்திருந்தால் அவனைப் படுக்கையறையில் போய் எப்படி எழுப்புவது? இதனால் ரயிலுக்கும் நேரம் பிந்தி அன்றைய பிரயாணமும் இழுபறியாகிச் சங்கடமாகிறது.

3. **அவரவர்க்கிட்ட பலனே கிடைக்கும்:**—அந்த பெண் வேண்டாம் இந்த பெண் வேண்டாம் என்று நீ "சழுங்கு" பேசுவதற்கு உனக்கு ஒன்றுக்குமே உதவாத 'கழிப்பாணி'ப் பெண்தான் கிடைக்கும் என்று அவன் சுற்றத்தார் அவன்மேல் சலிப்பாய்க் கூறுகிறார்கள். அதற்கெதிரிடையாக அவனுக்குத் தன் விருப்பப்படி குணவதியான ஒரு கற்பரசி வாய்த்துவிடுகிறாள். சில வேளை அவர்கள் வாக்குப்படியே மூதேவியான முரட்டுப்பெண்ணும் வாய்த்துவிடுகிறாள்.

4. **எப்படியோ ஏற்பட்டுவிடுகிறது:**—மனமொத்துவாழும் நண்பர்களிடத்திலும் காதலரிடத்திலுங்கூடச் சிலவேளைகளில் மிகக் கொடிதான சண்டையும், மனோசஞ்சலமும் அதனால் பிரிவும் எப்படியோ ஏற்பட்டுவிடுகிறது. அபிப்பிராய பேதத்தினாலும் சிலவேளை இப்படி நேருவதுண்டு.

5. **ஆராயாது செய்தல்:**—தம்மிடமுள்ள உத்தியோகஸ்தர் நன்றாக உழைப்பவரென்பதைத் திட்டமாக அறிந்துள்ளவர்களும் சிலவேளை கீழ்த்தரச் சிப்பந்திகளின் கோள் பேச்சுக்களைக் கேட்டு முன்பின் பாராமல் ஆத்திரப்பட்டு அவ்வுத்தியோகஸ்தரை வேலையினின்று நீக்கியோ அல்லது பலவிதத்தில் இடையூறு செய்தோ துன்புறுத்திவிடுகிறார்கள்.

6. **சில பெண்களின் குணம்:**—ஆடவரை மயக்குவதற்காகத் தாமே

கையில் குடை இருக்கும்போது மழை வருவதில்லை. பணமிருந்து செலவிடும்போது பசையில்லை. கட்டுச்சாதம் கையிலிருக்கிறவரை பசியே தோற்றுவதில்லை. கையில் ரூபாய் இருக்கும்போது வரிக்காரன் வருவதில்லை.

வலிந்து சென்று சரச வார்த்தைகள் பேசி மயக்கித் தம்வசம் இழுத்துக் கொள்ளும் குணம் சில பெண்களிடம் இருக்கிறது. இவர்களை இருவித கருத்துடையவர்களாகச் சொல்லலாம். ஆடவரின் அழகு முதலிய குணாதிசயங்களுக்காக மோகித்து அவர்களைச் சுகிக்க எண்ணித் தாங்களே பொருள், தின்பண்டங்கள் முதலியவற்றைக் கொடுத்து வசப்படுத்துவது ஒன்று; மற்றது: பொருள் பறித்துண்பதற்காக மயக்கி வசப்படுத்துவதாகும்.

7. **'உம்' போடுவது:**—சிலருக்கு எதாவது பேசும்போது, பாட்டுக்குத் தாளம் போடுவதுபோல அருகில் இருந்து ஒருவர் 'உம் உம்' என்று கேட்டுக்கொண்டே இருந்தால்தான் கதை ஒடுகிறது. 'உம்' போடாமலே சிலருக்குக் கடகடவென்று பேச்சு ஒடுகிறது.

8. **குழந்தைகள் செய்கை:**—நாம் எதாவது எழுதிக்கொண்டிருக்கும்போது அவசரநிமித்தியமாக வெளியே போக நேர்ந்து எழுதிய கடிதத்தையும் பேனா மைக்கூட்டையும் அப்படியே மேஜைமீது வைத்துவிட்டுப் போய்விட்டால், திரும்ப வருவதற்குள் குழந்தைகள் மையைக் கீழே கொட்டியாவது கடிதத்தில் கிருக்கியாவது வைத்திருக்கும். இதற்கு யாரென் செய்ய? கோபித்தும் பயனில்லை.

9. **திருநீறணிவதில் பலவிதம்:**—சிலர் திருநீறு தரித்துக்கொள்ளும்போது அண்ணாந்துக்கொண்டு நெற்றி முழுவதும் இடமின்றித் தடவிக் கொள்ளுகிறார்கள்; சிலர் நடு நெற்றியில்மட்டும் நான்கு விரல்களால் வட்டமாகப் பூசிக்கொள்ளுகிறார்கள்; சிலர் தலையை அசைத்தசைத்து நீறு கீழே இறையும்படி பட்டை அடித்துக்கொள்கிறார்கள்; சிலர் தலையைக் கவிழ்த்து குனிந்து பூசிக்கொள்கிறார்கள்; சிலர் ஒற்றை விரலால் நெற்றியில் ஒரு கோடுபோல இழுத்துக்கொள்கிறார்கள்; சிலர் பெருவிரலால் எடுத்து இரு புருவங்களுக்கிடையில் ஒரு பெரிய பொட்டுபோல வைத்துக்கொள்கிறார்கள்; சிலர் மூன்று விரல்களால் மூன்று பட்டை யிட்டுக்கொள்கிறார்கள். திருநீறணியும் சரியான விதி இதுவல்ல. அது அடியில் வருமாறு: கிழக்கு அல்லது வடக்கு முகமாகத் திரும்பி விக்கிரகங்களிருந்தால் புறங்காட்டாமல் நின்று கையில் நீறெடுத்து மூன்று விரல்களால் "சிவ சிவ" என்று வாயில் உச்சரித்துக்கொண்டே நீற்றைக் கீழே சிந்தாமல் இரு காதுகள் அல்லது தோள்களில் விழும்படியாக அண்ணாந்து வைத்துக்கொள்ள வேண்டும். இதுவே பெரியோர் அநுஸரித்து வந்ததும்—வருவதுமான விதி.

அ. ச. அருணாசல ரெட்டியார்,
இலங்கை.

மனஸ்பூர்வமான உழைப்பை மதிப்பார் மிகவும் அருமை; வாய் ஜாலக்குள்ளவனுக்கே இதுகாலம்; உழைத்து மிகவும் ஆயாஸப் பட்டதுபோல் நடிப்பவனுக்கே மதிப்பு! தன் களைப்பை யடக்கிக்கொண்டு சிரத்தையுடன் உழைப்பவனுக்கோ ஒரு காசு கூடச் சேர்த்துத் தர மனது வருவதில்லை. வாய்சாமர்த்திய வெட்டிப் பேர்வழியோ வெகு சுலபத்தில் பல ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு விடுகிறான்.



ஸ்ரீலகு ராமாயணம்.

இதில் ராமாயணச் சுருக்கமும்; ஸ்ரீராம உபாசநாக் கிரமோபதேசமும் அடங்கியுள்ளன. ஸ்ரீமான் வரகவி. திரு. அ. சுப்பிரமணிய பாரதி அவர்கள் ஸம்ஸ்கிருதத்திலிருந்தும் மொழி பெயர்த்தது. ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலைப் பதிப்பு. விலை அணு 4. இந்நூல் ஹஸ்த பூஷணமாய்ப் பயன்தரவல்லது. அழகிய உருக்கொண்டது.

பயிற்சியும் வல்லமையும்.

கீழச்சிவல்பட்டி ஸ்ரீமான் லெ: சோமசுந்தரம் செட்டியார் அவர்களின் வாக்கு. இதன் ஆக்கியோன் ·தமது சொந்த அநுபவங்களையே இந்நூலில் வருஷித்துள்ளார். சிறிய உருவில் பெரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு வரியும் எழுத்தும் பொன்னே போல் போற்றற்பாலது. ஆசிரியர் தமது உடல் வலிமையை யுணர்த்தும் படத்தையும் இதன்கண் சேர்த்துள்ளார். சட்டை, தலைப்பாகையுடன் நோய்கொண்ட உடலைக்காணும் காட்சியை விட, உடல் வலிவைக் காட்டும் இவ்வுருவின் தரிசனம் அதி நன்மை தரும்.

உடற்பயிற்சியும் சுகாதாரமும்.

இது அழகிய பத்து பாடல்கள் கொண்ட சிறு நூல். இதன் ஆசிரியரான ஸ்ரீமான் கா. சி. சிவசங்கர முதலியாரவர்கள் மகா வித்வானுவர். எளிய நடையில் கவிதை புனையும் பராக்கிரமமுள்ளவர். அவரது நூல்கள் ஒவ்வொன்றும் அமிர்தமேயாகும். அநுபவமேயாகும். இதிலுள்ள பத்து பாடல்களுக்கும் பத்து பொன்தரலாம். இதனைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் லெ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள். அவரது தேகவலிவினை யுணர்த்தும் மற்றொருவித படமும் இதில் உள்ளது.

மனிதனின் வாழ்நாள்.

இனிய தமிழ்க் கட்டுரை. புதுப்பட்டி ஸ்ரீமான் வீர. அழகப்ப செட்டியார் அவர்கள் இயற்றியது. விலை அணு 6. இதனில் கல்வி, ஜீவகாருண்யம், கடவுள், அன்பு, தேகப்பயிற்சி, உணவு, மனைவாழ்க்கை, ஆணுக்குப் பெண்ணடிமை, தேசப்பற்று, கைத்தொழில், அடிமை, தீண்டாமை முதலியவற்றைக் குறித்து நன்கு விளக்கப்பட்டுள்ளன. அநுபவமும் நீதியும் கலந்து விளங்கும் ஓர் இனிய வாசக நூல். யாவரும் படித்துப் பயன் பெறத்தக்கது. நாவல்களிலுள்ள ஆவலை இவ்வித பொன்னூல்களிலும் செலுத்தினால் தான் அறிவு தெளிவுற்று விசாலித்து மேன்மையுறும்.

அநுபவ சிந்தாமணி.

"தேச நேசன்" ஆசிரியர் ஸ்ரீமான் வி. என் சாமராவ் அவர்கள் இயற்றியது. விலை ரூபாய் 1. இதில் பலவித கைத்தொழில் முறைகளும், பிரபஞ்ச அநுபவ மொழிகளும், அநுபவ ஞானக் குறிப்புகளும் அடங்கியுள்ளன. கைத்தொழில் முறைகள் ஒவ்வொருவரும் தாமே சொந்தமாய்ச் செய்து கொள்ளத்தக்க விதமாய் எழுதப் பெற்றுள்ளன. எனினும், செய்முறையின் அநுபவம் ஒரு தனி ஞானமாகும். நூலின் கடைசியிலுள்ள அநுபவ ஞானங்கள் யாவரும் வாசித்துப் பயன் பெறத்தக்கவை. உபயோகமான நூல்.



1. இடாலி தேசத்தில் ப்ரான்ஸ் என்னும் பட்டணத்தில் ஒரு தெருவில் ஒரு வீட்டின் வாசலில் பின் வருமாறு ஒரு சிலா சாஸனம் செதுக்கப் பட்டிருக்கிறது. "பதின்மூன்றாம் நூற்றாண்டில் மூக்குக்கண்ணாடிகளைக் கண்டுபிடித்த செல்விநு டெக்லி ஆர்மாடியின் ஞாபகார்த்தம்" என்றுள்ளது; இதை 1885-௵ ஜூலை௴ 5௳ இடாலி தேசத்துக் கைத்தொழில் சங்கத்தார் ஸ்தாபித்தார்களாம்.

2. பிரான்ஸ் தேசத்தில் ஒரு குடும்பத்தில் மூன்று குழந்தைகளுக்கு மேல் இருந்தால் மூன்றுக்கு மேலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் பதினாறு வயது வரையில் வருஷத்திற்கு ஏறக்குறைய 120 ரூபாய்கள் ஸம்ரக்ஷணைக்காகக் கொடுத்து வரும்படி 1923-ம் வருஷத்தில் ஒரு சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதாம்.

3. இயேசுகிறிஸ்துநாதரைக் குற்ற விசாரணை செய்ய ரோமர்களின் ராணுவ அறிக்கை யடங்கியுள்ள ஒரு பத்திரம் தென் துனீஷியா என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறதாம்.

4. இந்த உலகத்தில் அச்சிட்டு வெளிவரும் பத்திரிகைகளுள் மிகவும் புராதனமானது சீன தேசத்து ஸர்க்கார் பத்திரிகையாகிய "பெகிங் கெஜட்" என்பது தான். ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு முதற்கொண்டு இடைவிடாமல் வெளிவந்து கொண்டிருக்கிறதாம். இவ்வளவு காலத்தில் அதன் பத்திராசிரியர்களில் குறைந்தது ஆயிரத்தைந்நூறு பெயர்கள் தூக்கிலிடப்பட்டனராம்.

5. லண்டன் பட்டணத்திலுள்ள பொதுத் தோட்டங்களில் அலக்ஷியமாய் உலாவும் ஜனங்களால் எறியப் பட்ட கடிதாசி முதலிய குப்பைகளை பொறுக்கி மறுபடியும் தோட்டங்களை சுத்தி செய்ய மாதம் நாநூறு பவுன் செலவாகிறதாம்.

6. சீன தேசத்து ஸ்திரீகள் பத்தில் ஒன்பது பங்குக்கு மேல் தங்கள் பெயர்கள் கூட எழுதத் தெரியாத அவ்வளவு படிப்பாளிகளாம்.

7. ப்ளௌண்டர் மீன் என்னும் ஒருவகை மீன் வருஷத்திற்கு எழுபது லக்ஷம் முட்டையிடுமாம்.

8. ஆயிரம் பங்கு ஜலத்தில் முப்பத்தேழு பங்குக்கு குறைந்து உப்பு இருந்தால் அந்த ஜலத்தில் நண்டுகள் உயிருடன் இருக்காவாம்.


9. ஓநாய்க் குட்டிகளை சிறு வயதிலேயே பிடித்து பழக்கி வந்தால் வயதாக வயதாக நல்ல காவல் காக்கும் நாய்களுக்கு பதிலாக உபயோகப் படுத்தலாமாம். இதற்காக ருஷ்யாவின் காடுகளிலிருந்து அநேக ஓநாய் குட்டிகள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகின்றனவாம்.

10. இங்கிலாந்தில் டர்பிஷையர் என்னும் ஜில்லாவில் எந்தக் குடும்பத்திலாவது கல்யாணம் ஏற்படும் போலிருந்தால், அச்சமாசாரத்தைத் தங்கள் வீட்டில் கூடுகட்டியிருக்கும் தேனீக்களுக்கு முதலில் சொல்வார்களாம். கல்யாண ஸமயத்தில் தேன் கூடுகளுக்கெல்லாம் விசேஷித்த அலங்காரங்கள் செய்வார்களாம்.

S. A. ஸ்ரீநிவாஸ சர்மா.



ஞானம்பிகையின் கற்புப் பிரதிக்ஞை.



“உனக்கு என்ன திமிரடி! பெற்ற தாயையே பழிக்க வருவதா? ஆமாம், உன்னைப் படிக்க வைத்தேனல்லவா, அதன் பலன் இதுதான். என்னடீ நீ மாத்திரம் இல்லாத புதிய இழிவையும், அவமானத்தையும் கண்டு பிடித்து விட்டாய்? நம் குலத்தில் தலைமுறை தலைமுறையாகச் செய்து வரும் குலத்தொழில் தானே இது? குலத்தொழிலைக் கைக் கொள்ளுவதில் தலைக் குனிவு என்ன? அவரவர்கள் குலத்தொழிலைக் கைவிட்டதினால் தானே தேசம் சீர்கெட்டுப் போச்சுதென்று நீயே சொல்லியிருக்கிறாய்? என்னடீ உனக்கு வாயும் பேசுகிறது; பிறகு அதை மறுத்தும் பேசுகிறது!” என்றாள் தாசி மோகனாங்கி.

ஞானம்பிகை:—அம்மா! நீங்கள் சொல்லுவது அவ்வளவும் பிழை. பர புருஷர்களுக்கு மான ஈனமின்றிக் கற்பை விற்று வயிறு வளர்க்கும் கேவலப் பிழைப்பைக் குலத்தொழில் என்று சிறப்பிக்கிறீர்களே! அதை நினைத்தாலும் என் நெஞ்சு கலங்குகிறது! மூடத்தனத்தினால் திருட்டுத் தொழிலையே கைக்கொண்டிருந்தவனுக்குப் புத்திசாலியான ஒரு குமாரன் பிறந்து அவன் சன்மார்க்கத்தில் பொருள்தேட வேண்டுமென்று சொல்லும்போது, அவன் தந்தை கோபித்துத் திருட்டுத் தொழிலையே செய்யும்படி தன் மகனைக் கண்டித்துத் திருத்துவது போலிருக்கிறது நீங்கள் சொல்லுவது! அம்மா! நீங்கள் என்ன சொன்னாலும் நான் பொட்டுக் கட்டிக் கொள்ளவே மாட்டேன். இதனால் என் பிராணன் போனாலும் சரியென்று துணிந்து விட்டேன். காமியத் தாசி மகள் விவேகம் தோன்றிக் கற்பு கொண்டால் அது தப்பிதமா?

மோகனாங்கி:—அத்தனை ஆணவமா உனக்கு? விரல் உரலானால் உரல் என்னாகுமென்று உனக்குத் தெரியுமா? வேண்டாமடீ! நான் சாந்தமாய்ச் சொல்லுவதை மரியாதையுடன் கேள். அதிகப் பிரசங்கித்தனம் செய்யாதே! ஒருவனைக் கல்யாணம் செய்து கொண்டால் அவனுக்கு அடங்கி நடக்க வேண்டும். காலமெல்லாம் கழுதை போல உழைத்தாக வேண்டும். கண்ணுக் கின்பமானதைக் காணவோ, வாய்க்கினிமையானதைத் தின்னவோ முடியாது. ஒவ்வொன்றுக்கும் புருஷன் உத்திரவு வேண்டும். இன்னும் மாமியின் கொடுமை வேறே. நாத்திகளின் பிடுங்கல்கள் பட்டு அநுபவித்தவர்களுக்கே தெரியும். கழுகுக் கூட்டத்திற் கிடையில் அகப்பட்டுக் கொண்ட கோலந்தான் தாலி கட்டிக்

மின்னுவதெல்லாம் பொன்னா? இப்போது குலாவிடுவோர் என்றைக்குமே அப்படி இருப்பாரா? அவர்களே நாளைக்கு நம்மை எதிர்க்கும் விரோதிகள்! கால சந்தர்ப்பங்கள் என்றைக்கும் ஒரே விதமாக நேசத்தோடும் உறவோடும் சிரிப்போடும் இருந்துவிடாது. அது அபூர்வ சங்கதி.

கொண்ட பெண்ணின் கதி. பொட்டு கட்டிக் கொண்டாலோ, நீயே இந்த வீட்டுக்கு ராணி. அநேகம் பிரபுக்கள் உன்னைத் தேடி வந்து ரூபாய்களைக் கொட்டிக் கொடுத்து உன் காலுக்கு முத்தங் கொடுப்பார்கள். நீ ஒரு வேலையும் செய்யாமல் இராஜாத்தி போல ஏறின மெத்தை இறங்காமல் படுத்துக் கொண்டிருக்கலாம். இந்த சுகம் தாலியில் ஏது? மேலும் என்றைக்கும் நித்தியசுமங்கலியாய் மஞ்சள் பூசி மனோகரமாக நிற்கலாம். விதவை என்ற அபசகுனப் பேச்சே இல்லை.

நாகாம்பிகை:—நீங்கள் கொட்டி மயக்கி அளக்கிற இவ்வளவு வைபோகமும் எத்தனை காலம் நீடித்திருக்கும்? நீங்களுந் தான் வாழ்ந்தீர்களே! இப்பொழுது உங்களுக்கு எந்த உண்மை மனுஷ்யன் இருக்கிறார்? உங்கள் பேரில் ஆசைப்பட்டு வந்த பிரபுக்களெல்லாம் இப்பொழுது எங்குசென்று விட்டார்கள்? உங்களை ஏன் இப்பொழுது ஒருவராவது ஏறெடுத்தும் பார்க்கவில்லை? இது தானம்மா தாசிகளின் பிழைப்பு. கோடி கோடியாகக் கொட்டி யளந்தாலும், எவருக்கும் தம் தம் மனைவி பேரிலிருக்கும் உள்ளன்பு எந்த ஆசை மங்கையரிடமும் ஜனித்து விடாது. நாலாவது வீட்டு நயனவல்லியைச் சாந்தி செய்த பெரிய மனிதர் அவள் கர்ப்பமாய் விடவும் விட்டுப்போய்விட்டார். மச்சு வீட்டு மரகதம்மாளின் மகள் காமவல்லியைப் புதுச்சோபனம் செய்வதற்காக போரூர் ரெட்டியார் ஆயிரம் ஆட்களை அனுப்பிக் கேட்டாரென்று அந்தம்மாள் ஐயாயிரம் ரூபாயும் ஒரு புடவையும் பேசி ரெட்டியாரை வரச்சொல்லவும், ரெட்டியார் இருநூறு ரூபாயில் ஒரு புடவையை வாங்கிக்கொண்டு வந்து காமவல்லியுடன் ஆறு இரவுஇருந்து, தமது குஷ்டத்தையும் மேக வியாதிகளையும் அவளுக்கு ஆஸ்தியாக வைத்து விட்டு ரூபாய் கொடுக்காமலே ஏமாற்றிச் சென்று விட்டார். மரகதம்மாள் இன்னுந் தான் அந்தப் பணத்தை வாங்கி விடலாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அன்போடு வந்தவனாயிருந்தால் அந்த ரெட்டி ரூபாய்களைக் கொடுக்காமல் ஏமாற்றிச் செல்லுவானா? எதிர் வீட்டு ரமணியக்காளை ஐந்து வருஷ காலமாக அபிமான ஸ்திரீயாக வைத்துக்கொண்டிருந்த பட்டுக்கோட்டை செட்டியார் ஏன் விலகி விட்டார்? ரமணியக்காளின் தேகம் இளைத்து எலும்புந் தோலுமானதைக் கண்டு தானே? தன் மனைவியாயிருந்தால் அந்த அக்காள் தன் தேக போஷணைக்காக மருந்து வாங்க வேண்டுமென்று சொன்னதை அலக்ஷியஞ் செய்து போய் விடுவாரா? **தாசிவீட்டுப் பிரபுக்களின் அன்பு, தாசி அழகோடு சோபிக்கிறவரையில் தான். தாசிகளின் அன்பும் உருக்கமும் பிரபுக்களின் கையில் ரூபாய் புழங்குகிற வரையில் தான்.** இரண்டுக்கும் மீறியது எங்கேயோ அபூர்வம். ஆகலால் அம்மா! நான் சொல்லுகிறேனென்று கோபித்துக்கொள்ளாதீர்கள். இந்தக் கேடுகெட்ட காரியத்தில் என் மனம் இணங்கவே இணங்காது. ஏதும் பேசாத அந்தக் கோயில் சாமியைப் பொட்டுக் கட்டிக்கொள்ளமாட்டேன். அவரைப் பரம பிதாவாகப் பக்தி செய்து மட்டும் வழிபடுவேன்.

மோகனாங்கி:—அடியே! யாரிடம் பேசுகிறாயென்று யோசித்துப் பேசு. என் ஆத்திரத்தைக் கிளப்பினாயோ, பிள்ளையாச்சு, குட்டியாச்சென்று கால்

போதவிருந்தில் முகத்தைப் பார்த்துப் பாரபக்ஷமாய்—ஏற்றத்தாழ்வாய்ப் பரிமாறுவதும் உபசரிப்பதும் பந்தி வஞ்சனையாகும். அது உத்தமர்களின் செயலன்று.

வேறு, வயிறு வேருகக் கிழித்து எறிந்து விடுவேன். உன் படிப்பின் குறும்பல்லவா என்னிடம் இவ்வளவு தூரம் எதிர்த்துப் பேசுகிருய்? அடியே! உனக்கு நல்ல சுழி நடுவே யிருக்கக் கோணல் சுழியை ஏனடி பரமன் குறுக்கே போட்டான்? நேற்றுப் பிறந்த சிறுக்கிக்கு இத்தனை அகம்பாவமா? எனக்கா புத்திசொல்லு கிருய்? பிறகு பேசிக் கொள்ளுகிறேன். "ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்; பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறக்கவேண்டும்." உன் பிடிவாதத்துக்கு மாத்திரம் நான் ஒப்பி வழி விடப்போகிறதில்லை.

இந்த சச்சரவுகளுக்கு மத்தியில், மோகனங்கியின் குமாரன் குணசீலன் தன் 'ஆபீஸ்' உடைகளுடன் அங்கு வந்து சேர்ந்தான். வந்ததும் சங்கதி தெரிந்து தன் தாயைக் கண்டு,

குணசீலன்:—அம்மா! ஒரு சங்கதி உங்களிடம் சொல்லுகிறேன். கோபித் துக் கொள்ளக்கூடாது. இந்தத் "**தாசி**" என்ற ஈனச் சொல் நம் வீட் டில் இல்லாதொழிய வேண்டும். அத ஞல் வெளியில் எவரிடத்திலும் என் தலையைக் காட்டக் கூடவில்லை.

மோகனங்கி:—என்ன அப்பா! நீ வானத்திலிருந்து பொத்தென்று குதிக் கப் பார்க்கிருயா? என்ன அவமானம் வந்து உன்னை அடித்துத் தள்ளி மிதித்து விட்டது? நீயும் உன் தங் கைக்குத் துணை பேச வந்தாயா?

குணசீலன்:—சேற்றில் கிடக்கும் பன்றிக்கு அது சேறு என்று தெரிவ தில்லை. அது போலவே உங்கள் நிலைமையின் கேவலம் உங்கள் மனதில் தைக்கவில்லை. இன்று ஆபீஸில் என்னையொருவர் "உன் தகப்ப ஞருக்கு என்ன வேலை?" என்று விசாரித்தார். அந்தக் கேள்வி என்னைத் தூக்கிப்போட்டாற் போலிருந்தது. என்னைப் பெருமையாக மதிக்கும் அந்த நண்பரிடம் என் கேவலக் குப் பையைச் சொல்ல மனம் வரவில்லை. ஏன்பிறந்தோமென்று எண்ணினேன். கௌரவ உலகில் இந்த கேவலத்தால் கண்ணியமில்லாது போகிறதம்மா.

மோகனங்கி:—என் காசின் கொழுப்பில் உன்னைப்படிக்க வைத்து விட்டு இந்தப் பாடு படுகிறேன். எங்க ளம்மா தாசி என்று சொல்லி விட்டா லென்ன? இதிலெல்லாமா கௌரவம் தொப்பென்று குதித்து ஓடிவிடும்?

குணசீலன்:—"தாசி மகன்" என்று நான் சொல்லாமலே ஊரார் தெரிந்து வைத்திருக்கிற சங்கதிதான். அதைத்திருப்பி நான் கூறத் தேவை யில்லை. என் சங்கதி இருக்கட்டும். உங்களோடு இந்த இழிந்த தொழில் தொலையட்டும். என் தங்கை ஞானம் பிகைக்கு, நான் கெட்டுப் போகா திருக்க எனக்கு விவாகம் செய்து வைத்ததுபோல், அவள் கெட்டுத் தாசி என்று சீரழியாதிருக்க நல்ல இடம் பார்த்து விவாகம் செய்து கொடுத்து விடுங்கள். அதனுல் இப் போதைய நமது இழிந்த நிலைமை சற் ருவது கௌரவத்துக்கு உயரக்கூடும்.

மோகனங்கி:—உன் மட்டில் நீ இரு. ஞானம்பிகை என் வயிற்றில் பிறந்த என் சொந்த சொத்து. என் இஷ்டப்படி செய்வேன். நீ எனக்குப் புத்தி சொல்ல வேண்டாம். உங்கள் இருவரின் பிடிவாதத்தையும் அடக்க எப்படியாவது அவளுக்குப் பொட்டு கட்டியே தீர்க்கிறேன் பார்.

உடனே கோபித்துக் கையை ஓங்கிவிடும் மனுஷ்யர்களுக்கு புத்தி வெகு மட்டுதான். எவ்வளவு திட்டினுலும் பொறுத்திருப்பவனே பின்னுக்குப் புத்தி கற்பிக்கச் சமயம் பார்க்கும் யுக்திமானுவன்.

குணசீலன்:—பொட்டுக்கட்டி வாழ்வதில் பெருமையிருக்கிறதென்று சொல்லுங்கள்; பெண்களின் கற்பு கெடாதிருக்கிறதென்று சொல்லுங்கள். நான் சம்மதிக்கிறேன். 'தேவடியாள்' என்று பெருமை பெற்றவர்கள் காலமெல்லாம் போய்விட்டது. இந்தக் காலம் 'பாவ அடியாள்'கள் பெருத்த காலம். அவர்களின் அட்டூழியங்களினால் அப்பதத்தின் பெருமை அடியோடு தீய்ந்துவிட்டது. மகா கேவலமாகக் கருதப்பட்டும் பேசப்பட்டும் வருகிறது. நேற்று புல்லுக்கட்டுத் தூக்கிச் செல்லும் பள்ளி "அவளைப் பாருடி! தேவிடியாப் போலே மினுக்குரா" என்று சொன்னாள். கடையில் ஒருவன் "ஊருக்கு ஒரு தேவடியாள்; நான் யாருக்கென்று ஆடுவேன்" என்றான். இன்னும் "தேவடியாக் கழுதை; மானங்கெட்ட தேவடியா" என்ற வசை வார்த்தைகளையும் பல பெண்களின் சண்டையில் கேட்டிருக்கிறேன். கேட்கும்பொழுதெல்லாம் என் மனதில் சுருக்கு சுருக்கென்று ஊசிபோட்டுக் குத்துவது போலிருக்கும். நான் பட்டணம் போயிருந்தபொழுது எழும்பூர் ஸ்டேஷனில் ஒரு 'போர்டர்' இன்னொருவனைத் 'தேவடியாள் மகனே' என்று சொல்லிவிட்டான். அதைச் சகியாத அவன் போர்டரை அடிக்க, போர்டர் அவனையடிக்க, பெருஞ் சண்டையில் முடிந்ததைக்கண்டு என் மனம் பட்டபாடு ஈசனே அறிவார். ஒரு கூலிக்காரனின் ரோஷம், மதிப்பு கூட இல்லாமல் நம்மைப்பிறப்பித்து விட்டாரே யென்று கடவுளை நொந்தேன். பட்டணத்தில் 'தேவடியாள் மகனே' என்பது மகா கேவலமான ஒரு வசைச் சொல். அதைக் 'கக்கூஸ்' அள்ளுகிறவர்கள் முதற்கொண்டு இழிவாகப் பேசியதைக் கேட்டுக் கேட்டு என் காது புளித்துப் போய்விட்டது. அம்மா! தாசிப்பிழைப்பில் பெண் ஜென்மமே பாழ்பட்டுப் போகிறது. "கற்பு நிலையே சிங்காரம்; அது தப்பினோரழகு சவ அலங்காரம்" என்று வேதநாயகம்பிள்ளை சொல்லுகிறார். அம்மா! உங்களை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஞானம்பிகையை ஒரு தக்க வானுக்கு விவாகம் செய்து கொடுத்து விடுங்கள்.

மோகனாங்கி:—எவனோ ஒரு மூடன் "தேவடியாள் மகனே" என்றதில் உனக்கென்ன பொத்துக் கொண்டு போய்விட்டதோ? கற்ற வித்தையைப் பெற்றதாயிடமே காட்டுகிறாயா? என் சொல்லைக் கேட்டுக் கொண்டு சிவனே என்று கிடக்கும் குழந்தைகளைப்பெறாமற் போனேனே! இந்த வீடு நாளைக்கு வருவார் போவார் இல்லாமல் வெறும் தாலிகட்டிய கழுதைகள் விழுந்து கிடக்கும் வீடாகவா ஆக்கப் பார்க்கிறீர்கள்? அந்த ஜெபம் சாயாது. உன்னால் ஆனதை நீ பார். என்னால் ஆனதையும் நான் பார்க்கிறேன். (தொடரும்.)

T. S. குழந்தைவேல் முதலியார்.

கடமை என்பது பெரிது. தன் மனைவி மூர்ச்சையாய்க் கிடக்கும்போது கூட, தன் தாய் வியாதிப்படுகையில் இருக்கும்போதுகூட தன் கடமையான வேலையைச்செய்து முடிக்கவேண்டி யிருக்கிறது.

ஒரு சிக்கலான சமயத்தில் தான் கூடியிருந்து உதவாமல் ஒரு கலகத்தை எழுப்பி அதனால் பிரிவதாய் கௌரவமாய் விலகிக் கைநழுவி விடுகிறார்கள்.

சென்னை நகரம் அழகுள்ளதே. உலக அநுபவங்கள் கற்பதற்கும் ஏற்ற சரக்குகள் நிறைந்ததே. எல்லாவித மானிட நாடியங்களையும் இங்கு காணலாம்.

சென்ற மாதம்

ஒளி இழந்த ஆப்கானிஸ்தானம்.

"ஆர் வாழ்வு ஆருச்சு நின்றது" என்பதாக ஆப்கானிஸ்தானத்து அரசரான அமனுல்லா தமது ராஜ பதவியை க்ஷண நேரத்தில் இழந்து திகைத்துள்ளார். அவர் ஆப்கானிஸ்தானத்தினின்றும் புறப்பட்டுத் தேச ஸஞ்சாரம் செய்யச் சென்ற வேளை நல்ல வேளை தான். நல்ல கீர்த்தியும் பெற்றார். ஆனால் தம் நாட்டுக்குள் புகுந்த நேரம் நல்ல பொழுது அல்ல போலும். பாச்சா ஸாக்கோ என்பவர் அவரது அரசைக் கைப்பற்றியுள்ளார். நாடிய வரமெல்லாம் நல்கும் நாயகரான அமனுல்லாவே இறுதியில் அரசராவா ரென்கிறார்கள். அவ்வண்ணமே ஆகுக.

***

பாரதி பாடல் பறிமுதல்.

"எடுத்த சுமை சுமந்தல்லவோ கீழ் இறக்க வேண்டும்" என்பார்கள். அவ்வாறாக சென்னை அரசாங்கத்தார் "பாரதிபாடல்" பறிமுதல் செய்த சுமையைச் சில நாள்வரை சுமந்து தாங்கி, இப்பொழுது பறிமுதல் செய்த பிரதிகள் யாவற்றையும் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். பாரதி பாடலுக்கு இந்த ஸம்பவம் கைச் செலவில்லாத ஒரு பெரிய விளம்பரமாகவே முடிந்து சாஸ்வத அநுகூலம் விளைத்துளது. பாரதியார் அதிர்ஷ்டசாலி தான்.

காங்கிரஸ் தீர்மானத்தைப் பற்றி இராஜப் பிரதிநிதி.

"என்பது வேண்டாம், ஐம்பதும் முப்பதும் கொடு" என்பதாக, கல்கத்தா காங்கிரஸில் பூரண சுயாட்சி வேண்டாம், குடியேற்ற நாட்டு ஆட்சி வழங்குதற்கு ஒரு வருஷத்திற்குள் தெரிவித்து விட வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டதல்லவா? அதற்கு ராஜப்பிரதிநிதியார் ஒரு பதில் சொல்லித் தீர வேண்டியதாக அவ்வளவு உச்சிக்கு எட்டி விட்டது. பார்லிமெண்டுக்குக் காங்கிரஸ் கட்டளையிடக் கூடாதென்றும், பிரிட்டிஷ் உறுதிமொழிகளை இந்தியா நம்பிப் பொறுத்திருக்க வேண்டுமென்றும் இராஜப்பிரதிநிதி கூறினார். இது நெடுங்காலமாக வழக்கம்போல் சொல்லும் பதில் தான்.

***

நம்பிக் கெட்டவரில்லை. யாரை? கடவுளை.

"காலைச் சுற்றிய பாம்பு கடியாமல் விடாது" என்பதற்கு மாறாக இதோ ஒரு சங்கதி! நன்னிலத்தைச் சேர்ந்த செம்மங்குடியில் ஒரு நாக ஸர்ப்பம் சமயல் அறையிலிருந்த பெண்ணின் இரு கால்களையும் சுற்றிக் கொண்டு சிறிச் சிறிப் படமெடுத்துத் தரையில் அடித்தது. அதன் நீளம் 6 அடி 4 அங்குலம் சுற்றளவுள்ளது. அப்பெண்ணும் கணவனும் 4, 5-வருஷங்கட்கு முன்பு சுப்பிரமணியருக்

குப் பால் காவடி சமர்ப்பிப்பதாகப் பிரார்த்தனை செய்துகொண்டு பிறகு அவ்விதம் செய்யவில்லையாம். அதை அவர்கள் இனி செய்துவைப்பதாகக் கைகூப்பி வேண்டவே ஸர்ப்பமும் பெண்ணின் காலை விட்டுச் சென்று விட்டது. எவரும் அதை அடிக்க வில்லை. உண்மைப் பக்தர்களை மட்டுமே கடவுன் கண்டித்துத் திருத்துகிறார். அதிகப்பிரசங்கிகளுக்கோ இன்னும் தூக்கும்படி பாவ மூட்டையை அதிகப்படுத்துகிறார். இது தான் என்றும் காணும் உண்மை.

***

"நாகசுரம் என்ன தெரியாதா, மத்தளம்போல் கல கல என்னும்"

தேவதாசி மசோதா. என்பதாய் உட்பொருளை நன் குணராமல் தேவதாசிகள் அனைவரும் ஒருங்கே எதிர்த்த தேவதாசி மசோதா சட்டமாகி விட்டது. கோயிலில் பொட்டு கட்டிக்கொண்டு தாசியானால்தான் தங்களுக்கென்று விடப்பட்ட கோயிலின் மான்யங்களை அநுபவிக்கலாமென்று கருதப்பட்டதை, இந்த சட்டம் பொட்டு கட்டித் தாஸியாகாமலே அநுபவிக்கலாமென்று உரிமைப்படுத்தியிருக்கிறது. ஆகவே பொட்டுகட்டுதலை யொழித்து விவாகத்தின்மூலம் இனி உத்தமிகளானல், இந்தச் சட்டத்தை செய்த டாக்டர் முத்துலக்ஷ்மியம்மாளின் உத்கிருஷ்டமான கருத்தும் நிறைவேறும். ஆயினும் இத்தொழிலின் மூலம் பொருள் கவரும் கேவலமான பரம்பரைக் குணம் தொலைய நெடுங்காலம் செல்லவேண்டும் போலும்!

ரங்கூன் "தேசோபகாரி" ஆசிரியர்களான ஸ்ரீமான் சுப்பையா நாயுடுவும், ஸ்ரீமான் செல்லம்பிள்ளையும் முறையே 3, 2-வருஷ கடுஞ்சிறை யுற்றதற்குப் பெரிதும் வருந்துகிறோம்.

கணவனுக்குப்பிறகு மனைவியின் ஜீவிப்பு எப்படி?

அலகாபாத்தில் ஒரு ஸ்திரீ தனது வறுமையைத் தாங்க சக்தியின்றி தன்னுடைய குழந்தையைக் கிணற்றில் தள்ளித் தானும் கிணற்றில் விழுந்துவிட்டாள். அவள் மட்டும் சாகாமல் மீட்கப்பட, குழந்தைகள் மட்டும் இறந்துவிட்டன. வயிற்றுக்கின்றி இன்னும் எவ்வளவோ களவுகள் கொலைகள் நேர்கின்றன. காரணமென்ன? புருஷர்கள் தங்கள் காலத்திலேயே தமது மனைவிமக்களுக்குப் பிந்திய ஜீவியத்திற்கு ஏற்பாடு செய்யாததே. இதுபெரிய துரோகம். ஆதலின் ஒவ்வொரு ஆண்மகனும் உடனே ஒரு லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனியில் சேர்ந்து தன் குடும்பத்திற்குத் தனக்குப் பிறகு ஒரு சொத்து கிடைக்கும்படி செய்யக்கடவன்.